விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-6710)

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 08 ஞாயிற்றுக்கிழமை (23.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 186

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விக்னேஸ்வரன் உதவி



15

## அரச புலனாய்வு பிரதானிகளை விசாரணைக்காக அழைப்பதில்லை

### பாராளுமன்ற தெரிவுக்குழு தீர்மானம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரிக்கும் விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு அரச புலனாய்வு சேவைகளின் பிரதானிகள் எவரையும் அழைத்து விசாரிப்பதில்லை என தெரிவுக் குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் விடுத்த விசேட கோரிக்கை காரண 15

## நாவாந்துறையில் மாதா சொரூபம்

### இரவோடு இரவாக அமைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறை - பொம்மைவெளியில் முஸ்லிம் பிரதிநிதியால் உரிமை கோரப்படும் காணியில் மாதா சொரூபம் ஒன்று நேற்று முன்தினம் இரவு அமைக்கப்பட்டுள்ளது என்று பொலி 16

## கல்முனைக்கான உணவுத் தவிர்ப்பு கைவிடப்பட்டது

(அம்பாறை)

கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி முன்னெடுக்கப்பட்ட சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டுள்ளது. 16


# மாமா வேலை செய்வதை நிறுத்திக்கொள்ளுங்கள்

## கூட்டமைப்பினரிடம் காட்டமாக தெரிவித்தார் நீதியரசர் விக்னேஸ்வரன்



(கிளிநொச்சி)

அரசுக்கு மாமா வேலை செய்வதை கூட்டமைப்பினர் நிறுத்திக்கொள்ள வேண்டும் என நீதியரசர் விக்னேஸ்வரன் காட்டமாக தெரிவித்துள்ளார். கல்முனை விடயத்தில் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் அரசுக்கு மாமா வேலை பார்த்து கால அவகாசத்தை எடுத்துக் கொடுக்கப்பார்க்கிறார்கள் எனவும் குற்றம் சுமத்தியுள்ளார். (13ஆம் பக்கம் பார்க்க)



## ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழுவில் முன்னிலையாக ரணிலுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து ஆராயும் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் முன்னிலையாகுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன மற்றும் சட்ட ஒழுங்கு முன்னாள் அமைச்சர்கள் இருவரையும் அந்த குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட் 16

## வவு.பண்டாரிக்குளத்தில் காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளத்தில் வசித்து வந்த 74வயதுடைய வயோதிபர் ஒருவர் கடந்த 08.06.2019 முதல் காணாமல் போயிருந்தார். இந்நிலையில் நேற்றுக் காலை புளி 16

## பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுத்து மக்களை நேசிக்கும் அரசை உருவாக்குவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)

அரசாங்கத் தரப்பினர் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதாக தெரியவில்லை. எதிர்காலத்தில் பயங்கர 15

## எனக்குத் தெரியாமல் அமைச்சரவை கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடாது

### பிரதமர் ரணில் உத்தரவு

(கொழும்பு)

பதில் அமைச்சர்கள் மூவரையும் தனக்கு தெரியாமல் அமைச்சரவை கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடாது என பிரதமர் ரணில் கண்டிப்பான உத்தரவிட்டுள்ளார். லக்கி ஜெயவர்தன, அனோமா கமகே மற்றும் புத்திக பத்திரன ஆகியோருக்கே ரணில் இந்த உத்தரவை இட்டுள்ளார்..

இராஜினாமா செய்த மூன்று முஸ்லிம் அமைச்சர்கள், றிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், கபீர் ஹாஷிம் ஆகியோருக் 15

## அமைச்சர் ரவி வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

வவுனியாவில் அமைந்துள்ள மின்சாரசபையின் பாரிய மின் பிறப்பாக்கி நிலையத்திற்கு மின் சக்தி எரிசக்தி அமைச்சர் 16

## இலங்கையில் மத சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

### அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபை

(கொழும்பு)

இலங்கையில், மத, சிறுபான்மையினரின், உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து இலங்கை அரசாங்கத்தை, அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வலியுறுத்த வேண்டும் என சனப்பிரதிநிதிகள் சபையின் பிரதிநிதிகள் மூவர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 15

## பாராளுமன்ற தெரிவிக்குழு ஜனாதிபதி மைத்திரியையும் விசாரணைக்கு அழைக்கும்!

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் சாட்சியமளிக்குமாறு ஜனாதிபதிக்கு அறிவிப்பதென பாராளுமன்ற தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியை சாட்சியமளிக்க அழைக்கப்படவுள்ளார். 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தாலும்

# சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்கள் மீளப் பெறப்பட மாட்டாது

## — ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன —



(பொலநறுவை)

மணல், கல் மற்றும் மண் வியாபாரம் இலங்கையில் மிக மோசமான ஊழல் துறைகளாக முன்னெடுக்கப்படுவதுடன், அவற்றில் இடம்பெறும் முறைகேடுகளை தடுப்பதற்காக பல சட்டதிட்டங்களை தான் கடந்த 04 ஆண்டுகளாக பரிந்துரைத்ததாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முற்பகல் பொலநறுவை புத்தி மண்டபத்தில் இடம்பெற்ற "பசுமை மணல் தரிப்பிடம்" எனும் எண்ணக்கருவை அறிமுகம் செய்யும் நிகழ்வின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, மரங்களை வெட்டுதல், சட்ட விரோத கல், மணல், மண் அகழ்வு காரணமாக ஏற்படும் பாரிய சுற்றாடல் அழிவை தடுப்பதற்கு பல சட்டதிட்டங்களை அமுல்படுத்தியுள்ளதாகவும் எத்தகைய விமர்சனங்களை முன் வைத்தபோதும் சுற்றாடல் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட அந்த தீர்மானங்களில் எந்த மாற்றமும் ஏற்படாதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அபிவிருத்தி பணிகளுக்காக கல், மணல், மண் போன்றவை தேவையாக இருந்தாலும் சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் சரியான முகாமைத்துவத்தின் கீழ் அவற்றை பெற்றுக்கொள்வதின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்திய ஜனாதிபதி, புதிய தொழிநுட்ப வழிமுறைகளுடன் நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்வதன் முக்கியத்துவத்தையும் தெளிவூட்டினார்.

"பசுமை மணல் துறைமுகம்" எண்ணக்கருவின் கீழ் ஆறும் ஆற்றங்கரையும் அதை அண்மித்த சூழலும் பாதுகாக்கப்படுகின்றது. இந்த திட்டத்திற்கமைய ஆற்றங்கரையின் 10 அடி வரையிலான பிரதேசம் பசுமை வலயமாக அடையாளப்படுத்தப்படுவதுடன், அப்பிரதேசத்தில் காடு வளர்ப்பு மேற்கொள் ளப்படும். அதனூடாக மணல் துறைமுகத்திற்கு மூன்று அடி அளவிலான பாதை பாதுகாக்கப்படும். இந்த திட்டத்தின் காரணமாக ஆற்றுக்குள் ரக்டர்களை இறக்க முடியாததுடன், மணல் அகழ்வின்போது உரிய சட்டங்களை பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படும். இந்த திட்டத்தினால் 10 அடி தூரம் வரை கூடைகளை பயன்படுத்தி மணலை கொண்டு செல்ல நேரிடும். மணல் அகழ்விற்காக பயன்படுத்தும் படகுகள், எஞ்சின் பொருத்தாதவைகளாக இருக்க வேண்டும். தற்போது பசுமை மணல் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், எதிர் வரும் காலங்களில் அதை நடைமுறைப் படுத்தாத நபர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்காதிருப்பதற்கும் சட்டத்தை பின்பற்றாத நபர்களின் அனுமதிப் பத்திரங்களை ரத்து செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப் படுமென புவியியல் ஆராய்ச்சி மற்றும் புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. (ம-3)

### நெடுங்கேணியிலிருந்து வவுனியா சென்ற

# அண்ணன் தம்பி இருவரையும்

## காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு



(வவுனியா)

நெடுங்கேணியிலிருந்து வவுனியாவிற்குச் சென்ற இருவரைக் காணவில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் தந்தை ஒருவர் நேற்று சனிக்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வவுனியா வடக்கு, நெடுங்கேணி நயினாமடு பகுதியிலிருந்து பேருந்தில் வவுனியா நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணை ஒன்றிற்குச் சென்ற இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக தந்தையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயசுந்தர் தர்சன் (வயது-19), விஜயசுந்தர் நிதர்சன் (வயது-16) ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளதாகவும் இவர்களை கண்டுபிடித்துத் தருமாறு தந்தை வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போயுள்ள இருவரையும் பற்றிய தகவல்களை அறிந்திருப்பவர்கள் 0775415912, 0775261259 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத்தருமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

# அனைத்து பயங்கரவாதிகளும் கைது செய்யப்பட வேண்டும்

## பாதுகாப்பு தரப்பினருக்கு பிரதமர் ரணில் ஆலோசனை



இலங்கையில் உள்ள அனைத்து ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளையும், கைது செய்ய வேண்டும் என பாதுகாப்புத் தரப்பினருக்கு தான் ஆலோசனை வழங்கியிருந்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில், சஹ்ரானின் பயங்கரவாத குழுவைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு அல்லது தடுத்து வைப்பு தற்கான உத்தரவில் உள்ளனர். ஒருவர்கூட வெளியில் இல்லை.

அது மாத்திரமன்றி, மேலும் பல குழுக்களும் கைது செய்யப்பட்டுள்ளன.

அப்படியானால், உண்மையாக இன்று பாதுகாப்பு கிடைத்துள்ளது என பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஏப்ரல் 4ஆம் திகதி கிடைத்த தகவலுக்கு அமைய ஏன் செயற்படவில்லை என்று பாராளுமன்ற தெரிவுக் குழுவிலும் ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்ட தெரிவுக்குழுவிலும் அறிக்கையிடப் பட்டுள்ளது. இது குறித்து ஆராயப்படுகிறது.

இதேவேளை, குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர், 12 மணியளவில் பாதுகாப்பு அமைச்சிற்குத் தான் சென்றதாகவும், ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, அனைத்து பாதுகாப்பு அதிகாரிகளையும் தொடர்புகொண்டு, இலங்கையில் உள்ள அனைத்து ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கும், மன்னிப்பு வழங்காமல் அவர்களைக் கைதுசெய்ய வேண்டும் எனத் தெரிவித்ததாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-3)

# ஒவ்வொரு வெள்ளியும் 24 மணிநேர போராட்டம்

## புகையிரத ஊழியர்கள் அதிர்ச்சி அறிவிப்பு

(கொழும்பு)

புகையிரத ஊழியர்களின் வேலைநிறுத்தம் நேற்று நள்ளிரவுடன் முடிவிற்கு வந்தது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 48 மணிநேர வேலைநிறுத்தத்தில் புகையிரத ஊழியர்கள் ஈடுபட்டனர். நேற்று நள்ளிரவுடன் 48 மணித்தியால போராட்டம் முடிவடைந்தது.

எனினும், அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 24 மணிநேர போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். (ம-3)





வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


### புகையிரத பணிப்புறக்கணிப்பால் 3 மில்லியன் ரூபாய் நட்டம்

(கொழும்பு)

வேதன பிரச்சினை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத தொழிற்சங்கம் முன்னெடுக்கும் போராட்டம் காரணமாக புகையிரத திணைக்களத்திற்கு சுமார் 3 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பணிப்புறக்கணிப்பின் காரணமாக, முன்கூட்டியே ஆசனப் பதிவுகளை மேற்கொண்டிருந்த பயணிகளின் பணத்தை, அவர்களுக்கு மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி நள்ளிரவு முதல் ஆரம்பிக்கப்பட்ட புகையிரத பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பு நேற்று நள்ளிரவுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலைப்பீடப் பரீட்சைகள்**

**நான்காம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2017**

24.06.2019, 25.06.2019 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த நான்காம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் யாவும் 04.07.2019, 05.07.2019 ஆகிய திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளன. எனினும் 26.06.2019 திகதியிலிருந்து திட்டமிட்டபடி நான்காம் வருட பரீட்சைகள் பரீட்சை நேர அட்டவணையின் பிரகாரம் நடைபெறும்.

பதிவாளர்
22.06.2019

(C-6752)

**உடல் எடை குறைய வேண்டுமா?**

- எடை கூடுகிறதா?
- வயிறு மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால் மா குளிசை**

15 நாட்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

- கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும் புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக் கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்

**221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

**077 210 6155**

(9346)


# நான் நினைத்தால் 5 நாட்களில் தீர்வு

# விளைவுகள் படுமோசமாக இருக்கும்!

## கல்முனையில் ஞானசார தேரர் எச்சரிக்கை

**(கல்முனை)**

**நான் நினைத்தால் ஐந்து நாட்களில் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த முடியும் என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார். ஆனால் அவ்வாறு செய்தால் விளைவுகள் படுமோசமாக இருக்கும் எனவும் ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்தார்.**



ஒரே நாட்டின் தாய் பிள்ளைகளைப் போல நாம் செயற்பட வேண்டும். விரைவில் இந்த பிரச்சினையை முடித்து பிரதேச செயலகத்தை தரமுயர்த்த நடவடிக்கை எடுப்பேன்.

விரைவில் உங்களுக்கு மகிழ்ச்சியான தகவல் வரும் என ஞானசார தேரர் உறுதிமொழி வழங்கினார். கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரி கல்முனையில் ஆறு நாட்களாக நடந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று சுழற்சி முறைக்கு மாற்றப் பட்டது.

இந்நிலையில் நேற்றுக் காலை கல்முனைக்கு சென்ற ஞானசார தேரர் அங்கு உண்ணாவிரதம் இருந்தவர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த பின்னர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# “எம் கண்ணீருக்குத் தீர்வு என்ன?

# மைத்திரியின் வருகையை எதிர்த்து திருகோணமலையில் போராட்டம்



(திருகோணமலை)

திருகோணமலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வருகையைக் கண்டித்து ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டம் கிழக்கு மாகாண ஆளுநரது செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

தாம்தமது உறவுகளை தொலைத்துவிட்டு இதுவரை காலமும் தேடிவருவதாக தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், தமக்கான தீர்வை ஜனாதிபதி உடன் பெற்றுத்தரவேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'ஜனாதிபதியே வாருங்கள் எமக்கான தீர்வைத்தாருங்கள்', 'திருகோணமலையில் கால் பதிக்கும் ஜனாதிபதியே எம் கண்ணீருக்கு தீர்வு என்ன?' எனும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (இ-7)

# இலங்கையில் தயாரிக்கப்பட்ட மிகப்பெரிய கப்பல் ஜப்பானிடம்



இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தயாரிக்கப்பட்ட மிகப் பெரிய கப்பல் நேற்று முன்தினம் ஜப்பானிடம் வழங்கப்பட்டது.

கப்பலை வழங்கும் நிகழ்வு பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் கொழும்பு துறைமுகத்தில் இடம்பெற்றது.

கொழும்பு டொக் யார்ட் நிறுவனம் இந்த கப்பலை தயாரித்தது. இதன் நீளம் 113 மீற்றர். இந்தக் கப்பல் ஆழ்கடலில் அதிசக்தி வாய்ந்த கேபிள் (தொடர்பாடல் மற்றும் மின் விநியோகம்) பதித்தல், அவற்றை திருத்தம் செய்தல் ஆகிய வற்றுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க, பிரதியமைச்சர் நளின் பண்டார ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-7)

# 65 இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குக

## சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி



(சென்னை)

இலங்கையைச் சேர்ந்த 65 தமிழர்களால் இந்தியக் குடியுரிமை பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக்கிளை அவர்களை குடியுரிமை கோரி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி அதிகாரியிடம் புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க அனுமதியளித்தது என த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

அவர்களின் புதிய விண்ணப்பங்களை எந்தவித தாமதமுமின்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்புமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி அதிகாரிக்கு நீதியரசர் ஜீ.ஆர்.சுவாமிநாதன் பணித்தார்.

மனுதாரர்கள் இருக்கின்ற பிரத்தியேகமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பொருத்தமான உத்தரவுகளை மத்திய அரசாங்கம் 16 வாரங்களுக்குள் பிறப்பிக்கலாம்.

மனுதாரர்களுக்குக் குடியுரிமை வழங்குமாறு மத்திய அரசாங்கத்தைப் பணிக்கும் எந்தவொரு நேர்மறையான ஆணையையும் பிறப்பிப்பதை நான் மனதாரத் தவிர்க்கிறேன். ஏனென்றால் குடியுரிமை விவகாரம் மத்திய அரசாங்கத்தின் பிரத்தியேகமான நிறைவேற்றுச் செயற்களத்திற்குள் வருகிறது.

மனுதாரர்களுக்காக நான் பெரிதும் அனுதாபப்படுகிறேன். ஆனால் நீதித்துறையைக் கட்டுப்படுத்தும் எல்லைக்கோட்டை நான் மனதில் கொண்டவனாக இருக்க வேண்டும்.

அதற்கப்பால் சென்றால் அது அத்துமீறலாகவே அமையும். எந்தவகையான அத்துமீறலும் கெடுதியானதே. நிறைவேற்றதிகார செயற்களத்திற்குள் நீதித்துறையின் அத்துமீறலும் அதற்கு விதிவிலக்கானதல்ல.

அது வழக்கு மீறிய அளவிற்குக் கெடுதியானது என்று சிலர் சொல்லக்கூடும் என்று நீதியரசர் சுவாமிநாதன் கூறினார்.

மனுதாரர்கள் செல்லுபடியாகக் கூடிய அனுமதிப்பத்திரங்கள் எதுவுமின்றி இந்தியாவிற்கு வந்து சேர்ந்தவர்கள் என்று மத்திய அரசும் மாநில அரசும் வாதிட்டிருக்கின்றன.

அதனால் இவர்கள் சட்டவிரோத குடியேற்றவாசிகள். 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கமைய இவர்கள் இந்தியக் குடியுரிமையை வழங்குவதற்குத் தகுதியுடையவர்கள் அல்ல என்பதே இரு அரசினதும் நிலைப்பாடாகும்.

ஆனால் இந்திய அரசியலமைப்பின் 21 ஆவது சரத்தின் உதவியை மனுதாரர்களினால் நாட முடியும் என்றும், அந்த சரத்து இந்தியப் பிரஜைகளுக்கும் இந்தியப் பிரஜைகள் அல்லாதோருக்கு பிரயோகிக்கப்படக்கூடியதே என்றும் நீதிமன்றம் கூறியிருக்கிறது. மனுதாரர்கள் குடும்ப மரபு மூலமாக இந்திய மண்ணில் வேர் விட்டவர்கள்.

எமது மொழியைப் பேசுகிறார்கள். எமது கலாசாரத்திற்குச் சொந்தமானவர்கள். இந்தியாவைத் தங்களது நிரந்தர தாயகமாக்குவதற்கு உத்தேசித்திருக்கிறார்கள்.

அத்துடன் அவர்களை இலங்கைக்கு வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்பப் போவதில்லை என்று மத்திய அரசு ஏற்கனவே உத்தரவாதம் அளித்திருக்கிறது. அதனால் இந்த வழக்கு பிரத்தியேகமான சூழ்நிலைக்குரியதாகின்றது.

அவர்கள் மிகவும் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் கண்காணிப்பின் கீழ் 35 வருடங்களாக முகாம்களில் வாழ்ந்திருக்கிறார்கள். மிக நீண்ட காலமாக நாடற்றவர்களாக இருப்பதென்பது அரசியலமைப்பின் 21 ஆவது சரத்தின் கீழ் அவர்களது உரிமை மீறப்படுகின்றது.

மனுதாரர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது திருச்சி மாவட்டத்தில் கொட்டப்பட்டு என்ற பகுதியில் இடைத்தரிப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். ஏனைய சிலர் வேறு இடைத்தரிப்பு முகாம்களில் இருக்கிறார்கள்.

காலனித்துவ காலத்தில் இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் குடியேறிய தொழிலாளர்களின் வழித்தோன்றல்கள் என்று தங்களை அவர்கள் கூறுகிறார்கள். இலங்கையில் ஏற்பட்ட குழப்பநிலையைத் தொடர்ந்து தங்களைப் பாதுகாப்பதற்காக இலங்கையிலிருந்து இந்தியாவிற்குத் தப்பியோடி வந்ததாகக் கூறுகிறார்கள்.

தங்களை இலங்கையின் வடக்கு,கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஒரு பகுதியினராகக் கருதக்கூடாது.

அவர்கள் அகதிகளாகவே கணிக்கப்படுகிறார்கள் என்றும் மனுதாரர்கள் வாதிட்டிருக்கிறார்கள்.

தங்களைத் தாயகம் திரும்பிய இந்தியர்களாகக் கணித்து இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரியிருக்கிறார்கள் என்றும் நீதியரசர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)




# ஷமி தயவில் 'தப்பிய' இந்தியா

## கடைசி ஓவர் வரை 'நெருக்கிய' ஆப்கான்

உலக கிண்ணத் தொடரில் 'ஹட்ரிக்' சாதனை படைத்தார் இந்தியாவின் மொஹமட் ஷமி. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் 12வது உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் மோதுகின்றன. சவுத்தாம்ப்டனில் நடந்த லீக் போட்டியில் இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இந்திய அணியில் காயமடைந்த புவனேஷ்வர் குமாருக்குப் பதில் மொஹமட் ஷமி சேர்க்கப்பட்டார். பயிற்சியில் பும்ரா பந்து வீச்சின் போது பெருவிரலில் காயம் அடைந்த விஜய் சங்கர் அணியில் இடம் பெற்றார்.

**ஹோலி அரைச்சதம்**


ரோகித் சர்மா (1), லோகேஷ் ராகுல் (30) நிலைக்கவில்லை. விஜய் சங்கர் 29 ஓட்டங்கள் எடுக்க, அணித் தலைவர் ஹோலி 67 ஓட்டங்கள் எடுத்தார். தோனி 28, பாண்ட்யா 7 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். கேதர் ஜாதவ், தனது 6வது அரைசதம் எட்டினார். கடைசி ஓவரில் மொஹமட் ஷமி (1), கேதர் ஜாதவ் (52) ஆட்டமிழந்தனர். இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. பும்ரா (1), குல்தீப் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**பும்ரா நம்பிக்கை**

எளிய இலக்கைத் துரத்திய ஆப்கானிஸ்தான் அணிக்கு ஹஸ்ரத்துல்லா (10), அணித் தலைவர் குல்பதீன், ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ஹஸ்ரத்துல்லா (10), மொஹமட் ஷமி பந்தில் போல்டானார். குல்பதீன் 27 ஓட்டங்கள் எடுத்தார். பும்ராவின் ஒரே ஓவரில் ரஹ்மத் ஷா (36), ஹஸ்மதுல்லா (21) வீழ்ந்தனர். ஜட்ரன் (21) கைவிட்டார். சகால் சுழலில் ரஷிட் கான் (14) வெளியேறினார். கடைசி நேரத்தில் மொஹமட் நபி அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்த, இந்திய ரசிகர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

**சபாஷ் ஷமி**

கடைசிஓவரில் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஷமி வீசிய இந்த ஓவரின் முதல் பந்தில் பவுண்டரி அடித்தார் நபி. 2வது பந்தில் ஓட்டம் எடுக்காத நபி (52), 3வது பந்தில் ஆட்டமிழக்க, இந்தியா பக்கம் திரும்பியது வெற்றி. அடுத்து அப்தாப் (0) போல்டானார். 5 வது பந்தில் முஜீப் (0) போல்டாக, ஷமி 'ஹட்ரிக்' சாதனை படைத்தார்.


ஹட்ரிக் விக்கெட் சாய்த்த மகிழ்ச்சியில் ஷமி

ஆப்கானிஸ்தான் 49.5 ஓவரில் 213 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்தியா 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. ஷமி 4, பும்ரா, சகால், பாண்ட்யா தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

## தேறுமா தென்னாபிரிக்கா?

இங்கிலாந்தில் 12வது உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. லண்டனில் இன்று நடைபெறவிருக்கும் லீக் போட்டியில் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. 5 போட்டிகளில் பங்கேற்றுள்ள பாகிஸ்தான் அணி ஒரு போட்டியில் மட்டும் வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் 9வது இடத் தில் உள்ளது.

6 போட்டிகளில் பங்கேற்றுள்ள தென்னாபிரிக்க அணி ஒரு போட்டியில் வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் 8வது இடத்தில் உள்ளது. இரு அணிகளும் தங்களதுமுந்தைய போட்டியில் தோல்வியை சந்தித்துள்ள நிலையில் இன்று நடக்கவிருக்கும் போட்டியில், இரு அணிகளும் வெற்றிக்கு திரும்ப சிக்கும் பாதை முயற்


பந்துக்கு தாவும் பகீரத முயற்சியில் ரபாடா

**பாபர், அமிர் ஆறுதல்**


இந்த உலகக் கிண்ணத் தொடரில்பாகிஸ்தான் அணி, இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. இந்திய அணிக்கு எதிரான தனது முந்தைய ஆட்டத்தில் படுதோல்வி அடைந்தது. பாகிஸ்தான் அணி எஞ்சிய 4 போட்டிகளிலும் வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதி வாய்ப்பை நினைத்து பார்க்க முடியும். அதனால் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. பாகிஸ்தான் அணியை பொறுத்த வரை துடுப்பாட்டம், பந்துவீச்சு இரண்டுமே சுமாராக தான் உள்ளது. துடுப்பாட்டத்தில் பாபர் அசம், பகர் ஜமான் ஆகியோரை தவிர எவரும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அனுபவ வீரரான மலிக், அணித் தலைவர் சர்பராஸ் அகமட் ஆகியோர் சிறப்பாக செயற்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். பந்துவீச்சில் மொஹமட் அமிர் சிறப்பான போர்மில் உள்ளார். இந்த உலக கிண்ணத் தொடரில் இதுவரை 13 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். வகாப் ரியாஸ், ஹசன் அலி ஆகியோர் தாக்கத்தை ஏற்படுத்தியாக வேண்டும்.

**துடுப்பாட்டம் பலவீனம்**

இந்த உலக கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணி, ஆப்கனுக்கு எதிரான போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. கிட்டத்தட்ட அரையிறுதி சுற்று வாய்ப்பை இழந்துவிட்ட நிலையில், தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் ஓட்டிஸ் கிப்சன் எஞ்சிய அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று தொடரை நன்றாக முடிக்கும் முனைப்பில் உள்ளோம் என்று கூறியுள்ளார்.




## மலிங்க ஜொலிப்பு; மஹேல பூரிப்பு


மலிங்க

"இங்கிலாந் துக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில் திறமையை நிரூபித்த மலிங்க, இலங்கை அணிக்கு மகத்தான வெற்றி தேடிக் கொடுத்தார்," என, முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

லீட்சில் நடந்த ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடருக்கான லீக் போட்டியில் மத்யூஸ் (85*) அரைசதம் கடந்து கைகொடுக்க இலங்கை அணி 50 ஓவரில், 9 விக்கெட்டுக்கு, 232 ஓட்டங்கள் எடுத்தது.

பின் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஜோ ரூட் (57), பென் ஸ்ரோக்ஸ் (82*) ஓரளவு நம்பிக்கை அளித்தனர். மற்றவர்கள் ஏமாற்ற இங்கிலாந்து அணி 47 ஓவர்களில், 212 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து, 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. 'வேகத்தில்' மிரட்டிய இலங்கையின் மலிங்க, 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி, ஆட்டநாயகன் ஆனார்.

இதுகுறித்து முன்னாள் இலங்கை அணி கேப்டன் மகிளா ஜெயவர்தனா கூறியதாவது, இங்கிலாந்துக்கு எதிராக கிடைத்த வெற்றி, இலங்கை அணியினருக்கு மனதளவில் நம்பிக்கையை அதிகரித்திருக்கும். உலக கிண்ண போன்ற மிகப் பெரிய தொடரில், உலகின் தலைசிறந்த அணிகளில் ஒன்றான இங்கிலாந்தை வீழ்த்தியது சாதாரண விடயமல்ல.

இப்போட்டியில் 'வேகத்தில்' அசத்திய லசித் மலிங்க, உடல் வலிமையை காட்டாமல், மனவலிமையை வெளிப்படுத்தி விக்கெட் வேட்டை நடத்தினார். இலங்கை அணிக்காக நிறைய போட்டிகளில் இவர், தனிநபராக வெற்றி தேடிக் கொடுத்துள்ளார். இருப்பினும் உலக கிண்ணத்தில் சாதித்திருப்பது சிறப்பு. இவர், இங்கிலாந்து ஆரம்ப ஜோடியை விரைவில் வெளியேற்றியது, 'நடுத்தர வரிசையில்' ஜோ ரூட், பட்லர் ஆகியோரை அவுட்டாக்கியது வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

'போர்மின்றி' தவித்த மத்யூஸ், அரைச்சதம் கடந்து எழுச்சி கண்டிருப்பது இலங்கை அணிக்கு சாதகமான விடயம். இலங்கை வீரர்கள் மீதமுள்ள போட்டிகளில் தன்னம்பிக்கையோடு விளையாடும் பட்சத்தில், அரையிறுதிக்கு தகுதி பெறலாம். இவ்வாறு ஜெயவர்த்தனா கூறினார்.

## காலிறுதியில் சிலி


கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் காலிறுதிக்கு சிலி அணி முன்னேறியது. லீக் சுற்றில் 2-1 என்ற கோல் கணக்கில் ஈகுவடோர் அணியை தோற்கடித்தது.

பிரேசிலில், கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் 46வது சீசன் நடக்கிறது. இதன் 'சி' பிரிவு லீக் போட்டியில் சிலி, ஈகுவடோர் அணிகள் மோதின.

ஆட்டத்தின் 8வது நிமிடத்தில் சிலி அணியின் ஜோஸ் பெட்ரோ புயன்சாலிடா முதல் கோல் அடித்தார். இதற்கு, 26வது நிமிடத்தில் கிடைத்த 'பெனால்டி' வாய்ப் பில் ஈகுவடோரின் என்னர் ரெம்பெர்டோ வாலன்சியா, ஒரு கோலடித்து பதிலடி கொடுத் தார். முதல் பாதி முடிவு 1-1 என, சமநிலையில் இருந்தது.

**சபாஷ் சான்செஸ்**

இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட சிலி அணிக்கு 51வது நிமிடத்தில் அலெக்சிஸ் சான்செஸ், ஒரு கோலடித்து கைகொடுத்தார். இது, சிலி அணிக்காக இவர் அடித்த 43வது கோல். கடைசி வரை போராடிய ஈகுவடோர் அணியினரால் கூடுதலாக கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் சிலி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


மலிங்க

முதல் போட்டியில் ஜப்பானை வீழ்த்திய சிலி அணி, தொடர்ந்து 2வது வெற்றியை பதிவு செய்து 6 புள்ளிகளுடன் காலிறுதிக்குள் நுழைந்தது. இதுவரை சிலி, கொலம்பியா அணிகள் மட்டும் காலிறுதிக்கான இடத்தை உறுதி செய்துள்ளன.

# NOTICE
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**"DEVELOPMENT OF NOVEL ELECTROLYTE AND ELECTRODE MATERIALS FOR SECONDARY SODIUM - ION AND MAGNESIUM - ION BATTERIES"**

VACANCIES FOR THE POST OF RESEARCH ASSISTANT - 02 POSTS
FULL TIME - ON CONTRACT

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above-mentioned post from suitably qualified persons up to 05th July 2019 for the above Research Project, Faculty of Science under the AHEAD Operation.

Applicants who are interested in the above posts are requested to visit Jaffna Univeresity Website www.jfn.ac.lk for further details.

Registrar. (C-6751)

# கல்முனை போராட்டத்திற்கு வல்வெட்டித்துறையில் ஆதரவு



(கரணவாய்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு ஆதரவாக வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் கோணலிங்கம் கருணானந்தராஜா தலைமையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் குழுத்தலைவர் சிவஞானசுந்தரம் மற்றும் நகரசபை உறுப்பினர்களும் நேற்று வல்வெட்டித்துறை நகர்ப்பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-60)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
20.08.1999

மறைவு
23.06.2016

அமரர் செல்வன்
## தேவராசா நிறோஜ்

வாழுகின்ற வயதில் நீ உதிர்ந்து போனதால் அதிர்ந்து போனோம்...
அழுது அழுதே கண்களில் நீர் வற்றிப் போனதுவே...

உற்றவரும் பார்ப்போரும் - நீ உலகையே ஆளுவாய் என்றிருக்க
உள்ளமதை கனவாக்கி கண்ணீரை வாழ்வாக்கி சென்றாயோ எங்கள் செல்வமே...

உன்னை நினையாத நாளேது...
எங்களை தேற்ற நீயின்றி மொழியேது உன்னைப் போல் ஓர் பிள்ளை வருமோ?
விண்ணுக்கு ஏன் அழைத்தான் - இறைவன்
விழுந்து அழுகின்றோம் மூன்று ஆண்டுகளாக....

தாவடி வடக்கு,
கொக்குவில்.


என்றும் உன் அன்பு மறவாத
மாமா குடும்பம் (இராசலிங்கம்)
அன்ரி குடும்பம் (சர்வேஸ்வரன்)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர். செல்வன் தேவராசா நிறோஜ்

அன்னை மடியில் 20 • 08 • 1999



ஆண்டவன் மடியில் 23 • 06 • 2016

ஆண்டுகள் மூன்று கடந்ததையா
கண்ணே! நிறோஜ்
கருவினிலே உருவாகி
மடியினிலே சுமந்த அன்னையும்
தோளினிலே தாங்கிய தந்தையும்
கரம் பிடித்து விளையாடிய அக்காவும், தம்பியும்
உன் அழகு முகம் காணாமல் அமைதி இழந்தோம்
ஆகாய உலகில் நீ நலமுடன் வாழ பிரார்த்திக்கும்

காளி கோவிலடி,
தாவடி வடக்கு.

(9328)

உன்னை என்றும் மறவாத
அப்பா, அம்மா, அக்கா, தம்பி.

# இராசி பலன்

**மீனம்:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு அடிபணிய நேரிடலாம், தூர தேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

**மேடம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**மிதுனம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, திக்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், ஆரோக்கியம் சீராக மாற்று வழியைக் கையாள்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சூரி. ராகு. புத. செவ் |
| சந் | இராசி பலன் | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம் | | |
| சனி, கேது | குரு | | |

23.06.2019
ஆனி 08, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 10.59 மணிவரை
சதயம் முன்னிரவு 11.36 மணி.வரை
சுபநேரம் 8.54-10.26 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை

வளவன்

**கடகம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகுவர், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது.

**மகரம்:** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் சில செய்திகள் வந்து சேரலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**தனுசு:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயரும், உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.


**விருச்சிகம்:** வழிபாட்டில் நம்பிக்கை கூடும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் கூடும் நாள்.

**துலாம்:** விவாயநம என்று சொல்லி சிறப்படைய வேண்டிய நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் வெற்றியளிக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

# வீட்டை விற்றுப் பிழைத்தது போல வீதியையும் விற்று விட்டீர்களா?

## யாழில் நேற்றுப் போராட்டம்













(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரில் வர்த்தகர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்ட வீதியை மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி நேற்றுக் காலை யாழ்.கே.கே.எஸ். வீதியில் சமூக மேம்பாட்டிற்கும் நீதிக்குமான மக்கள் இயக்கம் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தியது.**

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவிக்கையில்,

100 வருடங்களுக்கு மேலாக மக்கள் பயன்படுத்திய வீதியை தனியார் ஒருவர் ஆக்கிரமிப்பதற்கு அனுமதி வழங்கியது யார்? வீட்டை விற்றுப் பிழைத்தது போல வீதியையும் விற்று விட்டீர்களா?

தேட வேண்டியது உரிமைகள் மட்டுமல்ல காணாமல் போன வீதியும் தான் போன்ற வாசகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட யாழ்.மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்தீபன் கருத்துத் தெரிவிக்கும் போது, மக்கள் பயன்படுத்திய வீதியை விற்றுப் பிழைப்பு நடத்திவரும் யாழ். மாநகரசபை மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாது அடைக்கப்பட்ட வீதியின் உள்ளே இலங்கை மின்சாரசபையின் தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதற்கு அனுமதி வழங்கியது யார்?

பொதுமக்கள் வீட்டுத்திட்ட வீடுகளைக் கட்டும்போது ஒரு இஞ்சி குறைந்த 80 வீடுகளுக்கு யாழ்.மாநகரசபை அனுமதி மறுத்தது. ஆனால் ஒரு வீதியையே தனியார் வர்த்தகருக்கு தாரை வார்த்து விட்டதாக குற்றம் சாட்டினார்.

எனவே மக்களுக்கான மக்களின் வீதி திறக்கப்படும் வரை எமது போராட்டம் ஓயாது.

மாநகரசபையின் நடவடிக்கையைப் பொறுத்து எமது அடுத்த கட்டச் செயற்பாடுகளைத் தீர்மானிப்போம் என உறுப்பினர் பார்த்தீபன் மேலும் தெரிவித்தார். (இ-10)




## சிறுபான்மையினரால் ஆட்சிக்கு வந்துவிட்டு இனவாதத்தைத் தூண்டும் அரசியல்வாதிகள்

### இராஜாங்க அமைச்சர் விஜயகலா விசனம்



(கரணவாய்)

பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கும் போது விகிதாசார அடிப்படையில் நியமனங்கள் வழங்க வேண்டும் என உள்நாட்டு மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன முன்னிலையில் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டடத் திறப்பு விழா கடந்த புதன்கிழமை முற்பகல் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ.ஶ்ரீ தலைமையில் இடம் பெற்றது.

இதில் உரையாற்றிய விஜயகலா மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசு நான்கு வருடமாக இருந்தபோது ஐம்பது வீதமான வேலைகள் நடைபெற்றிருந்தன.

ஆனால் இன்று திடீர் திருப்பத்தை ஐ.தே.முன்னணி அரசின் மூலம் கண்டிருக்கின்றோம்.

சமுர்த்திப் பயனாளிகளைக் கூட இருமடங்காக அதிகரித்துள்ளோம். இதுபோன்று பல வேலைத் திட்டங்களை செய்துள்ளோம். பிரதமரின் அமைச்சரவைப் பத்திரத்தில் 22 ஆயிரம் பட்டதாரிகளை உள்வாங்கி உள்ளோம்.

இன்று எமது இனம் பாரிய வேலையில்லாப் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

பட்டதாரிகள் சந்தையில் வேலை செய்யும் நிலை உருவாகி உள்ளது. இந் நிலையை மாற்ற வேண்டும்.

க.பொ.த.சாதாரண தரம், உயர் தரம் படித்து விட்டு பெட்டிக் கடைகளிலும் தேநீர்க்கடைகளிலும் வேலை செய்கிறார்கள். இவர்களுக்கு உரிய வேலை வாய்ப்பு வழங்க வேண்டும்.

சிறுபான்மையின மக்களின் வாக்குகளால் ஆட்சிக் கதிரையில் ஏறியவர்கள் தமிழ்,முஸ்லிம் மக்கள் இடையே இனவாதத்தை தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

## பரிசில் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி.ல.முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு -மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக பிரான்ஸ் நாட்டின் இலங்கை தமிழ் பழைய மாணவர் ஒன்றியச் செயலாளர் தர்மராஜா தயாபரன் மற்றும் சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்வர். (5-30)

## ஆற்றல்களின் வெளிப்பாடுகள் சித்திர ஆக்கக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மகாவித்தியாலய விசேட கல்விப் பிரிவு மாணவர்களின் "ஆற்றல்களின் வெளிப்பாடுகள்" சித்திர ஆக்கக் கண்காட்சி எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் விசேட கல்வி அலகில் அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்வி பிரிதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) த.பாலராஜ், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாள் (விசேட கல்விப் பிரிவு) ப.சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## கலையரங்கத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை யாழ்.மத்திய கல்லூரி பாடசாலை சமூகம் இணைந்து நடத்தும் தந்தை செல்வா கலையரங்கத் திறப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் இல.114, ராஜேந்திர பிரசாத் வீதியில் (யாழ்.மத்திய கல்லூரி அருகாமையில்) நடைபெறவுள்ளது.

இக் கலையரங்கை பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் திறந்து வைக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக முனைவர் அருகோபாலன், முனைவர் ஏ.ரி.ஆரியரட்ண, வண.கல்கந்த தம்மானந்த தேரர் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# தற்கொலைதாரியின் உடற்பாகங்கள் அடக்கம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு அன்று தாக்குதலை நடத்திய தற்கொலைதாரியான முஹம்மத் ஹஸ்தூனின் தலை மற்றும் உடற்பாகங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் நீர்கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டன.

எந்தவித சமய அனுஷ்டானங்களும் இடம்பெறாமல் தற்கொலைதாரியின் தலை மற்றும் உடற்பாகங்கள் பலகையிலான சீல்வைக்கப்பட்ட பெட்டியில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அடக்கம் செய்யப்பட்டன.

தற்கொலை தாக்குதல் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட நிலையில் சரியாக இரண்டு மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் 21 ஆம் திகதி புதைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியம் காப்போம்.

நம்பிக்கை இழக்க வேண்டாம்.

உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)

077 900 8776 ( தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00 ) (C-6750)


## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவ காலத்தில் நாளை திங்கட்கிழமை முதல் தினமும் காலை 8 மணிக்கு அபிஷேகமும் முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் இடம்பெறும்.

அத்துடன் மாலை 4 மணிக்கு அபிஷேகமும் 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும். (இ-5)

## பதில் அமைச்சராக சுரேஷ் நியமனம்



பெருந்தோட்டகைத் தொழில் அமைச்சின் பதில் அமைச்சராக வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டார். உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார்.

அவர்நாடுதிரும்பும் வரையில் அதாவது எதிர் வரும் 29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பெருந்தோட்டக்கைத்தொழில் அமைச்சின்பதில் அமைச்சராக வடிவேல் சுரேஷ் செயற்படுவார். (இ-7)


யா/வரணி மத்திய கல்லூரி

பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் -2019

காலம் : 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை

மு.ப. 10.00 மணிக்கு

இடம் : பாடசாலை மண்டபம்

சகல பழைய மாணவர்களையும் ஒன்று கூடுமாறு அழைக்கின்றோம்.

குறிப்பு: அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

செயலாளர்



முகவர்கள் தேவை

யாழில் நீண்ட காலமாக நன்மதிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் கூரியர் சேவை நிறுவனத்திற்கு முகவர்கள் கீழ்வரும் நகரங்களில் நம்பிக்கையும் நேர்மையுமுள்ள தனிநபர்/வியாபார நிறுவனங்கள் தேவை.

- பளை
- கைதடி
- கோண்டாவில்
- உரும்பிராய்
- மருதனார்மடம்
- மானிப்பாய்
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- அச்சுவேலி
- புத்தூர்.

கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள் மற்றும் வியாபார ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 071 867 6424 (9335)



வேலைவாய்ப்பு

யாழ். பிராந்தியக் கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தில் நேரக் கணிப்பாளராக பணியாற்ற விரும்புவோர் 30.06.2019 ஆம் திகதிக்குள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 021 222 6924,

❖அடிப்படைத் தகைமை: க.பொ.த சாதாரண தரம்.

(9332)



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: சூரி செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:O/L, சொந்ததொழில்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண்
தொ.இ: B/9828

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L, France
எதிர்பார்ப்பு: வெளிநாடு குடியுரிமை
தொ.இ: B/9829

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: 48 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:Civil Engineer, Singapore
எதிர்பார்ப்பு: தகுதிக்கேற்ப பட்டதாரி (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/9830

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L, Ass.Manager, Australia
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9831

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 33 ¾ சூரி செவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:CIMA, Investment Advicer
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/9825

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L,தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/9833

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 20
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Medicine Student
எதிர்பார்ப்பு: Engineer, Doctor(உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/9834

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: 52 செவ் 7 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:NCT(Civil&QS), Draughtsman
எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில் (உள்நாடு)
தொ.இ: G/9835

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



softlogic
BEST IN THE BUSINESS

UPTO 60% OFF

மாபெரும் மலிவு விற்பனை

June 25, 26, 27




வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 567 1108, 077 912 7954

SAMSUNG Panasonic softlogic PRIZM Whirlpool CANDY NOKIA DELL acer

## ஆயுதப் போராட்டம் தவறான தலைவர்களால் வழிநடத்தப்பட்டது

# பௌத்த பிக்குகளை அழைத்து வந்து தமிழர்கள் கூத்தாடுகின்றனர்

## அதாவுல்லா குதர்க்கம்

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த பௌத்த பிக்குகளை அழைத்து வந்து தமிழர்களின் தலைவர்கள் என அடையாளப்படுத்துவோர் கூத்தாடுவதாக தேசிய காங்கிரசின் தலைவர் ஏ.எல்.என். அதாவுல்லாஹ் குதர்க்கமாகப் பேசியுள்ளார்.


கல்முனையில் தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கூடாது என போராடி வரும் முஸ்லிம் மக்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனையில் வாழும் மூவின மக்களும் என்னென்ன விகிதாசார அடிப்படையில் வாழ்கின்றார் என அவர்களுக்கு மட்டுமல்ல எல்லா இடங்களிலும் பதிவாகியுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது அடாவடித்தனமாக உருவாக்கப்பட்ட கல்முனை உப பிரதேச செயலகத்தை அங்கீகரித்து தரமுயர்த்த கேட்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

கல்முனையில் மூவின மக்களும் மாநகர சபைக்குள் வாழ்கின்றோம். தமிழருக்கென்று தனியான பிரதேச சபையோ அல்லது பிரதேச செயலகத்தையோ வழங்க கல்முனை மற்றும் அம்பாறை முஸ்லிம் மக்கள் தயாராகவே உள்ளனர்.


ஆனால் தமிழ் தலைமைகள் மீது ஏற்பட்ட சந்தேகம் தான் இதற்குத் தடையாக உள்ளது. ஏனெனில் வடக்கு,கிழக்கை இணைக்கும் போது முஸ்லிம் மக்களின் விருப்பத்தை அறியாமல் இணைத்ததால் இப்பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி ஏதேனும் இன ரீதியான விடயங்களை சாதித்து விடுவார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.



தமிழர் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தால் எதனை சாதித்தார்கள். அவர்களின் ஆயுதப்போராட்டத்தில் தர்மம் இருக்கவில்லை. உண்மையிருக்கவில்லை. அதுமட்டுமல்லாது இஸ்லாம் சொல்லும் தர்மத்துக்கு அப்பால் ஏதேனும் தர்மம் உள்ளதா? அதனால்தான் அவர்களினால் ஒரு அங்குல நிலத்தைக் கூட கையகப்படுத்தி வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே தான் முஸ்லிம் இனத்துக்கு எதிரான ஒருவகை யுத்தத்தில் பௌத்த துறவிகளை அழைத்து வந்து உண்ணாவிரம் என்ற போர்வையில் பகட்டுத்தனம் புரிவது முறையல்ல. வாருங்கள் பேசலாம் என அதாவுல்லாஹ் மேலும் தெரிவித்தார். (இ-10)

## பொலித்தீன் அற்ற நகரைநோக்கி விழிப்புணர்வும் சிரமதானமும்





(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் கோர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை பொலித்தீன் பாவனை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் சிரமதானமும் இடம்பெற்றது. “பொலித்தீன் அற்ற நகரை நோக்கி” எனும் தொனிப்பொருளில் சாவகச்சேரி -பெருங்குளம் சந்தியில் இருந்து சாவகச்சேரி நகர் வரை சிரமதானப் பணி இடம்பெற்றது.

குறித்த சிரமதான மற்றும் விழிப்புணர்வு நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன், நகரசபைச் செயலாளர் சபேசன், சுகாதாரப் பரிசோதகர் தளிர் ராஜ்.கோர் நிறுவனத் தலைவர் மற்றும் பணியாளர்கள், நகர சபை பணியாளர்கள், சாவகச்சேரி இளைஞர் கழகத்தினர் மற்றும் நகரசபை சுகாதாரப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். 2020 இல் பொலித்தீன் அற்ற நகராக சாவகச்சேரி நகரை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு கோர் நிறுவனம் மற்றும் சாவகச்சேரி நகர சபையினர் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (5-30)

## இன்னொரு இனவழிப்பைத் தடுக்க யாழில் இன்று விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசு தனது வரலாற்றில் தமிழர் பூர்வீகத்தையும் அதன் வரலாற்றுத் தொன்மங்களையும் அழித்து வந்திருக்கின்றது. சிங்கள-ஆரிய இணைப்பை ஏற்படுத்தி சிங்கள பூர்வீகத்தை வரலாற்று ரீதியாக தமிழுக்கு முந்தையது எனக் கூற முற்பட்டிருக்கின்றது. வரலாற்றுப் பூர்வீகத்தின் அழிப்பு பின்- முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தளத்தில் மிக ஆக்ரோசமாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டம் தொல்லியல் திணைக்களத்தினூடு அதிவேகமாக முன்னெடுக்கப்பட்டாலும், பக்கபலமாக ஏனைய திணைக்களங்களும் துணைபோகின்றன என்பது தெரியாததொன்றல்ல.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் பாரம்பரியமும் அதன் இருப்பும் கேள்விக்குட்படுத்தப்பட்டே வந்துள்ளது. அதன் இன்னொரு பரிமாணந்தான் சைவ ஆலயங்களின் அழிப்பும் அது சார்ந்த வரலாற்றுத் தடயங்களின் அழிப்பும். திருக்கோணமலை சைவ ஆலயங்களுக்கு மிகப் பழைமையான வரலாறு உண்டென்பது யாவரும் அறிந்தது.

திருக்கோணேச்சரத்துக்கும் கன்னியா வெந்நீரூற்றுக்கும் மான இதிகாச இணைப்பு தமிழர் இருப்பின் தொன்மையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. வெந்நீரூற்றுக் கிணற்றுக்கு அருகில் இருந்த பிள்ளையார் ஆலயத்தின் இருப்பு கேள்விக் குட்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அருகே புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பௌத்த விகாரையின், விகாராதிபதியின் உள் நோக்கம் பிள்ளையார் ஆலயத்தின் வரலாற்றுச் சுவடுகளை அழித்து, திரித்து, பௌத்த பூமியாக பிரகடனப்படுத்துவது. இது தொடர்பில் சிங்கள அரசு மௌனம் காக்கின்றது.

இக்கையறு நிலை கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகிலிருக்கும் பிள்ளையார் ஆயைத்திற்கு மட்டுமல்ல, வடக்கு,கிழக்கு எல்லைக் கோட்டில் இருக்கும் கிராமமான தென்னவன் மரபு அடி கந்தசாமிமலை, இலங்கைத்துறை முகத்துவாரத்தின் பெரிய சாமிமலை, கல்லடிமலை நீலி அம்மன் கோயில், குச்சவெளி அரிசிமலை, மூதூரில் திருமங்களாய், அகத்தியர்ஸ்தாபனம், மத்தளமலை போன்ற தமிழர் வரலாற்று தொன்மையான இடங்கள் தொல்பொருளியல் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டும் வரல்ாற்றுத் திரிபுகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம் முயற்சிகள் பௌத்த பிக்குகளின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்படுவது கவலைக்குரியதும் கவனத்திற்குரியதும். இம்முயற்சிகள் எதிர்காலத்தில் ஏனைய சிறுபான்மை மதங்களின் இருப்பை இலங்கையில் கேள்விக்குட்படுத்தும் நிகழ்ச்சி நிரலாகும்.

இவ் அரசியல் நிகழ்ச்சிநிரல் திருக்கோணமலைக்கு மட்டும் உரியதல்ல. ஒட்டுமொத்த தமிழர் தாயகங்களான வடக்கு,கிழக்குக்கும் உரியது. இது ஒருமதம் சார்ந்தது மட்டும் அல்ல. ஒட்டுமொத்த தமிழ் இன இருப்புக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் நீட்சியே இவ் அரசியல் நிகழ்ச்சி நிரல்.

இன்னொரு இன அழிப்பை தடுப்பதற்கான பாரிய பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பன்முக செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய தென்கயிலை ஆதீனத்தால் விசேட கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். இலங்கைவேந்தன் மண்டபத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டது. இக் கூட்டத்திற்கு வருகைதந்து காத்திரமான அப்பிராயங்களை முன்வைப்பதனூடாகச் செயற்பாட்டுமுயற்சிக்கு உறுதுணையாக இருக்குமாறு வேண்டி நிற்கின்றோம் என தவத்திரு அகத்தியர் அடிகளார் கோரியுளளார். (இ-7)

## “சதங்கை நாதம்” நடன ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கலாமந்திர் நடனாலயம் வழங்கும் “சதங்கை நாதம்” என்னும் நடன ஆற்றுகை இன்று 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இசைத்துறைத் தலைவர் கலாநிதி தெ.பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக நாட்டியக் கலைமணி திருமதி.யசோதரா விவேகானந்தன், நடன திலகம் திருமதி.வசந்தி குஞ்சிதபாதம், கௌரவ விருந்தினராக யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் திருமதி.லூடேவிக்கா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந் நடன ஆற்றுகையானது அனுஷாந்தி சுகிர்தராஜின் நெறியாள்கையில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (5-7)

### இலங்கைக்கு தொடர்ந்தும் பயங்கரவாத அச்சுறுத்தல்

# அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பு!

**(கொழும்பு)**

**இலங்கையில் இடம்பெற்ற அசாதாரண சூழ் நிலையை அடுத்து கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. இது குறித்த அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு நேற்றுச் சனிக் கிழமை வெளியானது. இலங்கைக்கு தொடர்ந்தும் பயங்கரவாத அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வரும் நிலையில், நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு, பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் தேவையான அதிகாரத்தை வழங்குவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.**

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 500 பேர் வரையில் காயமடைந்திருந்தனர்.

இதனையடுத்து நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவசரகாலச் சட்டம் அமுல் படுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்தும் நாட்டில் ஸ்திரமற்ற தன்மை நிலவியதுடன், வன்முறைச் சம்பவங்களும் அரங்கேறியிருந்தன. இந்நிலையில் மீண்டும் ஒருமாத காலத்திற்கு அவசர காலச் சட்டத்தை நீடிக்க அரசு தீர்மானித்தது. அதன்படி கடந்த மாதமும் அவசரகாலச் சட்டம் நாட்டில் அமுலில் இருந்தது.

இந்நிலையில் தற்போதும் இலங்கைக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது. இதன்காரணமாக அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்க தீர்மானிக்கப்பட்டது. (இ-7)

### தொடர்புகளைப் பேணினால் 20 வருடங்கள் சிறை

# மூன்று முஸ்லிம் அமைப்புக்களை தடை செய்ய நாடாளுமன்று ஒப்புதல்

இலங்கையில் மூன்று முஸ்லிம் அமைப்புக்களைத் தடை செய்வதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது.

இதன்படி தேசிய தௌஹீத் ஜமாத், ஜமாதி மிலாது இப்ராஹிம், விலாயத் அஸ் செயானி ஆகிய அமைப்புக்கள் தடை செய்யப்படுகின்றன.

இந்த அமைப்புக்களைத் தடைசெய்வது தொடர்பான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வர்த்தமானி பத்திரங்களை அவைத் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

இதன்பின்னர் இடம்பெற்ற விவாதங்களின் முடிவில் தடைக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின்படி குறித்த தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணுபவர்களுக்கு 20 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட சட்டத்தில் இடமுண்டு எனத் தெரிய வருகின்றது. (இ-7)

# முஸ்லிம் தலைமைகள் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்

### இராதாகிருஷ்ணன் அறிவுரை



(ஹங்குரான்கெத்த)

இந்த நாட்டில் கடந்த காலச் சம்பவம் காரணமாக இனங்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. கல்முனை பிரதேச செயலக விடயம் காரணமாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. எனவே இவை அனைத்தையும் கருத்தில் கொள்வதோடு, கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்ட போது தமிழ் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களுக்காக குரலக் கொடுத்தார்கள்.

எனவே இந்த விடயத்தில் முஸ்லிம் தலைவர்கள் விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டால் ஒரு சுமுகமான தீர்வை எட்ட முடியும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் வேலைத்திட்டத்தின் கீழ் மத்திய மாகாண நுவரெலியா ஹங்குரான்கெத்த முல்லோயா தமிழ் வித்தியாலயத்தின் இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் நேற்று முன்தினம் இராதாகிருஷ்ணனால் திறந்து வைக்கப்பட்டது.

மொழி ரீதியாக ஒன்றுபட்டு இருக்கும் நாங்கள் விட்டுக் கொடுப்புடன் செயற்படவேண்டும். அவ்வாறு இல்லாமல் நடந்தோமேயானால் இந்த இரண்டு இனத்துக்கும் ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்தும்.

தமிழ் மொழியைக் பேசக் கூடிய தமிழ் இனத்தவர்களும் முஸ்லிம் இனத்தவர்களும் கடந்த காலங்களில் ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தால் பல உரிமைகளைப் பெற்றிருக்க முடியும்.

எனவே கடந்த காலங்களைப் போல் செயற்படாமல் சிந்தித்து ஒற்றுமையாகச் செயற்பட முஸ்லிம் தலைவர்கள் முன்வருவார்களேயானால் இனங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படாது சுமுகமான தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.

அதிகமாக தமிழ் மக்கள் வாழும் கல்முனை பிரதேசத்தில் பிரதேச செயலகத்தை தமிழ் மக்களுக்கு விட்டுக் கொடுத்து அதன்மூலமாக முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இருக்கின்ற உறவை மேலும் நீடிப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர். சுப்பையா நாகேந்திரன்**



மலர்வு
14.06.1938

உதிர்வு
03.07.2018

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாது

12, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


### பொலிஸ் அதிகாரிகள் 31 பேருக்கு இடமாற்றம்

இரு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 5 பேர் உட்பட 31 பேர் இடமாற்றம் செய்யப்பட்டனர். தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதிக்கமைய இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் சேவை அவசியம் கருதி இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# விருது வழங்கலும் மலர் வெளியீடும்

Visi care தாதிகளுக்கான விருது வழங்கும் விழாவும் மலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெறும்.


இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அமைச்சர் மனோ கணேசன், சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடமாகாண ஆணையாளர் திருமதி. துரைரட்ணம், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்கர ஆகியோர் கலந்து கொள்வர். (5)



யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

(படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)


# போராட்டக்களமாக மாறிய கிழக்கு திருமலையில் நேற்றுக் கவனயீர்ப்பு





(திருமலை)

**கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு கோரி திருகோணமலையில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நேற்றுச்சனிக்கிழமை காலை முதல் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.**



கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரி சைவ, பௌத்த, கிறிஸ்தவ மதகுருமாரும் பொதுமக்களும் இணைந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பில் முற்போக்கு தமிழர்கள் அமைப்பினரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டங்கள் 6 ஆவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. இதனால் உண்ணாவிரதம் இருப்போரின் உடல் நிலை மோசமடைந்து வருகிறது.

இந் நிலையில், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகளுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் முகமாக திருகோணமலையிலும் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை என கிழக்கிலங்கை தற்போது போராட்டக்களமாக மாறியுள்ளது. (இ-7)

## யோகா கலையை மேம்படுத்த உதவும் மைத்திரிக்கு மோடி நன்றி தெரிவிப்பு

(டில்லி)

யோகா கலையை வளர்ப்பதற்கு உதவுகின்றமைக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்தார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் யோகாப்பயிற்சி செய்யும் வீடியோவை வெளியிட்டார். அதில் யோகாவின் முக்கியத்துவம் குறித்து அவரது உரை அடங்கியிருந்தது.

யோகாவை மேலும் பிரபலப்படுத்துவதற்காக நீங்கள் தரும் ஆதரவுக்கு நன்றி. உங்களது இந்த யோகாப்பயிற்சி அனுபவத்தை பகிர்ந்து கொண்டதைக்காணும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது என்று பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டார். (இ-7)

## பிரித் ஓதும் நிகழ்விற்கு வெண்ணிற ஆடையுடன் பங்குபற்றவும்

வவுனியா பிரதேச செயலகத்தில் பிரித் ஓதும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் அனைத்து உத்தியோகத்தர்களையும் வெண்ணிற ஆடையுடன் தவறாது கலந்துகொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தின் அனைத்து கிளைத்தலைவர்களுக்கும் பிரதேச செயலாளரினால் கையொப்பமிட்டு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் நாளை 24 ஆம் திகதி மாலை 6 மணியளவில் பிரித் ஓதும் நிகழ்வு இடம் பெறவுள்ளதால் அனைத்து உத்தியோகத்தர்களையும் தவறாது பங்குபற்ற அறிவுறுத்தல் வழங்குமாறும் அவர்கள் வெண்ணிற ஆடை அணிந்து வருமாறு தெரியப்படுத்துமாறும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகமானது தமிழ் மக்களுக்குரிய பிரதேச செயலகமாகக் காணப்படும் நிலையில் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு பிரித் ஓதும் நிகழ்வு ஏன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பலரும் ஆச்சரியம் வெளியிட்டுள்ளனர். (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 90 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 400 |
| தக்காளி | 120 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 100 | 100 |
| கோவா | 80 | 60 | 100 |
| கரட் | 160 | 200 | 200 |
| பூசணி | 120 | 100 | 120 |
| புடோல் | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 90 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 105 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 70 | 120 |
| லீக்ஸ் | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 70 | 60 | 100 |
| கறிமிளகாய் | 160 | 130 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 160 |
| போஞ்சி | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 100 |
| கீரை - 1பிடி | 25 | 20 | 30 |
| தேசிக்காய் | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 100 | 140 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 25 | 20 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | 110 | 80 |

## கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள் கட்சியிலிருந்து நீக்கம்-ஆனந்தசங்கரி

(யாழ்ப்பாணம்)

கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான காத்தமுத்து கணேசன் மற்றும் சுமித்திரா ஜெகதீசன் ஆகியோர் கட்சியின் சகல உறுப்புரிமைகளிலிருந்தும் நீக்கப்பட்டுவிட்டார்கள்.

அண்மைக்காலமாக இவர்கள் இருவரும் கட்சிக்கு எதிரான செயற் பாடகளிலும், கட்சிவிரோத நட வடிக்கைகளிலும் மற்றும் கொள் கைகளுக்கு முரணான வகையிலும் செயற்பட்டுவந்துள்ளார்கள் என்பது அவர்கள் மீது மேற்கொண்ட விசாரணைகள் மூலமாக தெரியவந்துள்ளது.

இவர்கள் இருவரிடமும் இனி மேல் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எவரும் கட்சி ரீதியான எவ்வித தொடர்புகளையும் வைத்துக்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

விரைவில் அவர்கள் இருவரையும் கல்முனை மாநகரசபை உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை கட்சியின் சகல உறுப்பினர்களுக்கும் அறியத்தருகின்றேன். என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி அறிவித்துள்ளார். (இ-7)

## போதை ஒழிப்பு கண்காணிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு போதை ஒழிப்புக் கண்காணிப்பு நிகழ்வு நாளை 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் பாராளுமன்ற உறுப்பி னர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம் பெறும்.

போதையற்ற சக்தி மிக்க கிராமத்தை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளிலான இந் நிகழ்வில் பல்வேறு செயற்றிட்ட நடவடிக்கைகளுக்கான வலுவான பிரயோக கட்டமைப்பு உருவாக்கப்படும். (இ-10-30-114)

# மாணவி துஷ்பிரயோகம்; ஆசிரியர் மீது குற்றச்சாட்டு அதிபரை உடன் இடைநிறுத்துமாறு ஆளுநர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை புனித தோமையார் றோமன் கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலையின் அதிபரை உடனடியாக பதவியிலிருந்து இடைநிறுத்துமாறு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனுக்கு பணிப்புரை விடுத்தார்.

குறித்த பாடசாலை மாணவி ஒருவர் அதே பாடசாலையின் ஆசிரியரால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டதாக, குறித்த மாணவியின் பெற்றோர் அதிபருக்கு முறையிட்டும், அதிபர் பொலிஸாருக்கு இதுதொடர்பில் அறிவிக்காமல் இந்தச் சம்பவத்தை மூடிமறைக்க முயற்சித்தாரென ஆளுநரின் விசேட செயலணியின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்ததையடுத்தே குறித்த பாடசாலையின் அதிபரை உடன் அமுலுக்கு வரும் வகையில் தற்காலிக இடைநிறுத்தம் செய்வதற்கு ஆளுநர் பணிப்புரை விடுத்ததுடன் இது தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொண்டு ஆளுநருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விசாரணைக் குழுவொன்றையும் நியமிக்குமாறும் ஆளுநர், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்படும் குறித்த ஆசிரியரும் விசாரணைகள் முடியும்வரை சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

இவ்வாறான சம்பவங்கள் வடமாகாணத்தில் இடம்பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், இவ்வாறு மோசமாக நடந்துகொள்பவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நீதித்துறையினூடாக அதியுச்ச தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் குறிப்பிட்டதோடு, வடமாகாண கல்வித்துறையில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு விசாரணைக் குழுவொன்றை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவித்தார். (இ-7)


## வைத்தியசாலையில் போராட்டக்காரர்கள்

கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்ன தேரர் மற்றும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஞானசேகரன் ராஜன் ஆகியோர் நேற்று வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டம் தளர்த்தப்பட்டு நீரினை அருந்தி உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். இதற்கு பௌத்த தேரர்கள் ஆதரவு வழங்குவதாக தெரிவித்தனர்.

வைத்திய பரிசோதனையின் பின் நீராகாரம் அருந்திப் போராட்டம்தொடரும்என பொதுபலசேனா அமைப்பின்பொதுச்செயலாளர்ஞானசார தேரர் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையில் குண்டுத் தாக்குதல் இந்தியாவில் இம்ரான்கான் கைது



(கன்னியாகுமாரி)

இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கன்னியாகுமரியைச் சேர்ந்த ஒருவரை, தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் கைது செய்தனர்.

கன்னியாகுமரியில் கடையொன்றை நடத்தி வரும் இம்ரான் கான் என்ற இளைஞரையே அதிகாரிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

இந்நிலையில் கைது செய்த சந்தேகநபரிடம், தொடர் விசாரணையை அதிகாரிகள் நடத்தி வருவதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் குண்டுத் தாக்குதல்களை நடத்திய தீவிரவாதிகள் தமிழகத்தின் முக்கிய பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டிருந்ததாக தகவல் வெளியிடப்பட்டது.

குறித்த தகவலுக்கமைய தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதுடன் கோவை மற்றும் மதுரையிலுள்ள சில வீடுகளில் நடத்தப்பட்ட சோதனையின் முக்கியப் பொருட்களை கைப்பற்றியிருந்தனர்.

இந்நிலையில் இலங்கைக் குண்டு வெடிப்பு தொடர்பாக கன்னியாகுமரியிலும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்தியபோதே சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞனை கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கோத்தபாயவே ஜனாதிபதி வேட்பாளர் ஓகஸ்ட் 7 இல் மகிந்த அறிவிப்பாராம்



### கெஹலிய நம்பிக்கை

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஓகஸ்ட் மாதம் ஏழாம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்று கூட்டு எதிரணியின் முக்கியஸ்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதற்கு முன்னர் நாடு முழுவதும் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தும் கூட்டங்கள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஆற்றிய உரையின் ஊடாக சில விட்டுக்கொடுப்புக்களுக்குத் தயாராகியுள்ளமை தெளிவாகின்றது என்றும் கெஹலிய தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூற்று குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கௌரவமான தீர்மானம் ஒன்றை எடுப்பேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததன் மூலம் அவர் சில விட்டுக்கொடுப்புக்களுக்குத் தயாராகியுள்ளார் என்பது தெரிகின்றது.

அத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலானது இருமுனைப் போட்டிக்களமாகவே அமையும் என்ற விடயத்தையும் ஜனாதிபதியின் உரை வெளிப்படுத்துகின்றது.

எப்படியிருப்பினும் எமது ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இதனைச் சுதந்திரக் கட்சியும் ஏற்றுக்கொள்ளும் என்பதே எமது எண்ணமாகும். சுதந்திரக் கட்சியில் இருக்கின்ற சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளும் சாத்தியமும் உள்ளது. ஆனால் அதிகமானோர் எமது பக்கம் வந்துவிடுவார்கள்.

மேலும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ என்பதை மகிந்த ராஜபக்ஷ ஓகஸ்ட் மாதம் ஏழாம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்று எதிர்பார்க்கின்றோம்.

பொதுஜன பெரமுனவின் சம்மேளனம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஏழாம் திகதி நடைபெறும்.

இந்த சம்மேளனக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ இந்த அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

அதற்கு முன்னர் நாங்கள் நாடளாவிய ரீதியில் எமது ஜனாதிபதி வேட்பாளர் குறித்த பிரசாரச் செயற்பாடுகளை நடத்துவோம். அவ்வாறு நாடு முழுவதும் மக்களின் கருத்துக்களைப் பெற்ற பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்பார். அவர் கோத்தபாய ராஜபக்ஷவாகவே இருப்பார் என கெஹலிய நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

## கல்முனையில் ஞானசார தேரர் தீர்வு குறித்து முக்கிய பேச்சு!


(கல்முனை)

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டார்.

உண்ணாவிரதப் போராட்டத்திலீடுபட்டுள்ளவர்களின் கோரிக்கை குறித்து கல்முனை வடக்கு பிரதேச செயலக விசேட குழுவுடன் பிரதேச செயலக மண்டபத்தில் தற்போது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

அம்பாறை விகாரையின் விகாராதிபதி மற்றும் பல தேரர்கள் குறித்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இறுதித் தீர்வு நேற்று அறிவிக்கப்படுமென ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும் ஊடகங்கள் குறித்த பேச்சுவார்த்தைக்கு அனுமதிக்கப்படவில்லை.



கல்முனை வடக்கு தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக்கோரி பௌத்த தேரர் உட்பட 5 பேர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, ஞானசார தேரர், கல்முனை தமிழர் தரப்பு உண்ணாவிரதத்தை முதற்கட்டமாக கருதி முடித்து வைக்கின்றேன் என எனக்கு தொலைபேசியில் தெரிவித்தார் என அமைச்சர் மனோ கணேசன் நேற்றுக்காலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கல்முனை விவகாரம் தொடர்பில் தீர்வு வழங்குவதற்காக சென்ற மனோ கணேசன், சுமந்திரன் மற்றும் தயாகமகே ஆகியோர் இறுதியில் மக்கள் விளைவித்த குழப்பத்தையடுத்து இடைநடுவில் அங்கிருந்து திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பட்டா-ஹயஸ் விபத்து; சாரதி படுகாயம்



(கொடிகாமம்)

ஜாம் கம்பனியின் பட்டாவுடன் ஹயஸ்வான் மோதியதில் சாரதி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை காலை 7 மணியளவில் ஏ9 வீதியில் கொயிலாமனை சந்திக்கு அண்மையில் இடம் பெற்றது.

கொடிகாமம் பகுதியிலிருந்து சாவகச்சேரி நோக்கி ஜாம் கம்பனியின் பட்டா சென்ற வேளை அதே திசையில் பின்னால் சென்ற ஹயஸ்வான் பட்டாவை முந்த முற்பட்ட வேளையில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இவ் விபத்தில் ஹயஸ் வான் முன் பக்கம் சேதத்திற்குள்ளாகியதுடன் சாரதி காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கொடிகாமம் போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(5-30-114)





முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள றோயல் முன்பள்ளியில், சிறார்களுடைய சந்தை நிகழ்வு கடந்த புதன்கிழமை முன்பள்ளியின் முதன்மை ஆசிரியரான, திருமதி.ரதிக்குமார் - நடேஜினி தலைமையில், கள்ளப்பாடு பொது நோக்கு மண்டப வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா - ரவிகரன் கந்தையா - சிவசுப்பிரமணியம் (முன்பள்ளிகளின் வலயக் கல்விப் பணிப்பாளர்), கிறிஸ்னகுமார் கமலினி (முன்பள்ளிகளின் இணைப்பாளர்), சந்திரசேகரம் அகிலன் (கள்ளப்பாடு வடக்கு, றோயல் முன்பள்ளி அபிவிருத்தி சங்கத்தின் தலைவர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# திருக்கேதீஸ்வர வீதி நுழைவாயில் அமைப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தம்

(மன்னார்)

மன்னார் மாந்தை சந்தியில் வீதி நுழைவாயில் அமைப்பதற்கு மன்னார் பிரதேச சபை வழங்கி இருந்த அனுமதியை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது.

குறித்த தோரண நுழைவாயில் அமைக்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக மன்னார் பிரதேச சபையின் தலைவர் எஸ்.எச்.எம். முஜாகிர் கையெழுத்திட்ட கடிதம் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில்,

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை சந்தியில் தோரண நுழைவாயில் அமைக்க மன்னார் பிரதேச சபையால் கடந்த 14 ஆம் திகதி வழங்கப்பட்ட அனுமதியின் பின்னர் பல்வேறு தரப்பினரிடம் இருந்து எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனை கருத்திற் கொண்டு எமது பிரதேச சபை எல்லைக்குள் சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடலை ஏற்படுத்தி சுமுகமான தீர்வினை ஏற்படுத்தும் வரை என்னால் வழங்கப்பட்ட அனுமதியானது தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்படுகின்றது என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் வீதி நுழைவாயில் தொடர்பில் தொடர்ச்சியாக பல்வேறு சர்ச்சைகள் முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில் மன்னார் பிரதேச சபையின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து திருக்கேதீஸ்வரத்திற்கான தோரண நுழைவாயில் அமைப்பதற்கு அனுமதியை வழங்கிய நிலையில், மன்னார் பிரதேச சபையினால் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-285)

# பொது அமைப்புக்களுக்கு நிதி பத்திரங்கள் மூலம் வழங்கல்





(பனிக்கன்குளம்)

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவினால் கம்பரெலிய திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதி நேற்று முன்தினம் 42 பொது அமைப்புகளுக்கு பத்திரங்கள் மூலம் கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வு வவுனியா தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இத் திட்டத்தின் கீழ் 42 பொது அமைப்புகளுக்கான 113 திட்டங்கள் இதன் மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இந் நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சத்தியலிங்கம், வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.தணிகாசலம் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (7-281)




# தமிழர்களை யாரும் சீண்டுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு அனுமதிக்கவில்லை

## சிவமோகன் எம்.பி

அவசரகாலச்சட்டத்தினை பயன்படுத்தி தமிழர்களை எவரும் சீண்டுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்றுவரை அனுமதிக்கவில்லை என வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழலில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் போல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றுமையை வெளிப்படுத்துவதில்லை என்ற கருத்து மக்கள் மத்தியில் உள்ளதே இது தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தங்களது இனத்தின் மீதான அடக்குமுறைகள் உச்சத்திற்கு சென்று கொண்டிருந்தபோது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றுமையாக இராஜினாமா செய்தார்கள். அதுகூட தாங்கள் இருக்கும் அரசுக்கு எதிராக செய்யவில்லை.

தாம் இருக்கும் அரசுக்கு ஆதரவு தெரிவிப்போம் என்று தான் இராஜினாமா செய்தார்கள். அவர்கள் இவ்வாறு செய்தது இனவாத சிந்தனை உள்ள சிங்கள மேலாதிக்க அடிப்படை வாதிகளின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே இவ்வாறு அவர்கள் செய்தார்கள்.

ஞானசார தேரரும் ரத்ன தேரரும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் நாட்டையே மீண்டும் இனப்படுகொலைக்குள்ளும் கலவரத்துக்குள்ளும் தள்ளும் நடவடிக்கையாகவே பார்க்கப்பட்டது. ஆகவே தான் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த நடவடிக்கையை எடுத்தார்கள்.

இந் நிலையில் தமிழர்களை எவரும் சீண்டுவதற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு இன்று வரை அனுமதிக்கவில்லை. அவசரகால தடைச்சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னரும்கூட அநாவசியமாக எமது இளைஞர்கள் மீது இவர்கள் கைவைப்பார்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு இருந்தது.

ஆகவே இவ்வாறான நடவடிக்கைகளை நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். அவ்வாறான நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கக்கூடாது என தெரிவித்திருந்தோம்.

இது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்ட அவசரகால தடைச் சட்டம்.எனவே அதை நோக்கியே உங்கள் நகர்வுகள் இருக்க வேண்டுமே தவிர அநாவசியமாக தமிழ் இளைஞர்கள் மீது கைவைக்கும் செயற்பாட்டை எடுக்கக்கூடாது என நாங்கள் தெளிவாக சொல்லியிருந்தோம்.

அவரசகால தடைச்சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் இராணுவம் அதனை தன் கையில் எடுத்துக்கொண்டு சோதனை என்ற ரீதியில் வைத்தியசாலைகளுக்கு முன்பாகவும் பாடசாலைகளுக்கு முன்பாகவும் செயற்பட்டு வரும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என மேலும் தெரிவித்தார். (9)

# முல்லை.உயிலங்குளத்தினைப்புனரமைப்பதற்கு இதுவரை நிதி ஒதுக்கப்படவில்லை

முல்லைத்தீவு உயிலங்குளத்தினைப் புனரமைப்பதற்குரிய நிதிக்கான கோரிக்கைகளை தொடர்ந்து முன்வைத்திருக்கின்றோம்.

நிதி கிடைக்கும் பட்சத்தில் குறித்த குளத்தினை புனரமைக்க முடியும் என துணுக்காய் கமநல சேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டதில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உடைப்பெடுக்கும் நிலையில் காணப்பட்ட உயிலங்குளம் இதுவரை சீராக புனரமைக்கப்படவில்லை.

இதுதொடர்பில் மேற்படி கமநல சேவை நிலையத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு துணுக்காய் உயிலங்குளத்தின் அணைக்கட்டினைப் புனரமைப்பதற்கு சுமார் இருபது மில்லியன் ரூபா நிதியும் அணைக்கட்டின் கீழ் சேதமடைந்து காணப்படும் வீதியினை அமைப்பதற்கு 40 மில்லியன் ரூபாவும் தேவையென மதிப்பிடப்பட்டுள்ள போதும் அதற்கான நிதி இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட கோட்டைகட்டியகுளம்,தென்னியன்குளம், அம்பலப்பெருமாள்குளம், போன்ற பகுதிகளுக்கான போக்குவரத்து வீதியாகக் காணப்படும் வீதியின் குறிப்பிட்ட பகுதி உயிலங்குளம் அணைக்கட்டின் மீதான பாதையாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பெய்த மழை காரணமாக உயிலங்குளம் அணைக்கட்டு சேதமடைந்து அதனூடான போக்குவரத்துக்கள் தடைப்பட்ட நிலையில் இராணுவத்தினரும் பொதுமக்களும் இணைந்து குறித்த பகுதியை புனரமைத்து மக்கள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் தற்காலிகமாக புனரமைத்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த குளத்தின் அணைக்கட்டு அவசரமாக புனரமைக்க வேண்டிய தேவை காணப்படுவதாகவும் இவ் அணைக்கட்டினை புனரமைத்து தருமாறு இதன் கீழான விவசாயிகள் கோரியுள்ளதுடன், அணைக்கட்டின் கீழாக காணப்படும் வீதியினை புனரமைத்துத் தருமாறும் பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

குறித்த அணைக்கட்டின் கீழ் காணப்படும் வீதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான வீதியாகக் காணப்படுகின்றது.

அதனை புனரமைப்பதற்கு கிட்டத்தட்ட 40 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

இதேவேளை அணைக்கட்டினை புனரமைப்பதற்கு 20 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

நிதி இதுவரை கிடைக்கவில்லை. நிதிக்கான கோரிக்கைகளை தொடர்ந்து முன்வைத்திருக்கின்றோம்.

நிதி கிடைக்கும் பட்சத்தில் குறித்த குளத்தினை புனரமைக்க முடியும் என்று துணுக்காய் கமநலசேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்து விடாதே! ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் பேசும் மக்கள் என்று கௌரவித்தோம்

வழுவழுத்த உறவை விட வைரம் பாய்ச்சிய பகை மேல் என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு.பழமொழியின் அர்த்தம் ஆழமானது.

இந்த வகையில் இந்த நாட்டின் சிறு பான்மை இனங்களாக இருக்கக்கூடிய தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்குள் ஒற்றுமைப்படுவதாக இருந்தால் அதற்கான உடன்பாடிக்கை தேவையாக இருக்கும்.

இதைவிடுத்து, தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக இருப்பதுபோல முஸ்லிம் தரப்புகள் வெளிக்காட்டிக் கொண்டு தமிழினத்தை வேரறுக்க நினைத்தால்; உங்களுக்கும் எங்களுக்கும் ஆகாது என்று கைகழுவி விடுவதே சிறந்ததாக இருக்கும்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் செய்யப் போவதில்லை என்பதால் தமிழ் மக்கள் தங்கள் பாட்டில் சில தீர்மானங்களை எடுக்க வேண்டி இருக்கும்.

இஃது இன மோதலை ஏற்படுத்துமென யாரும் நினைத்து விடாதீர்கள்.

மாறாக முஸ்லிம் இனத்தாலும் தமிழினம் அழிக்கப்படுவதைத் தடுக்கின்ற முன்னேற்பாடாக இது இருக்கும்.

இதைவிடுத்து முஸ்லிம் சகோதரர்கள் என்று விழித்து, அவர்களின் தாய்மொழி தமிழ். இனத்தாலும் சமயத்தாலும் அவர்கள் வேறுபட்டிருந்தாலும் அவர்களும் தமிழர்களே என்று கருதிய தமிழ் மக்கள்; முஸ்லிம் சகோதரர்களை தமிழர்களாக ஏற்று, அங்கீகரித்து அவர்களுக்கு உரிய கௌரவம் கொடுத்தனர். தமிழ் பேசும் மக்கள் என்று அழகுபட அழைத்தனர்.

தமிழர்களின் இந்தக் கௌரவத்தை அன்றைய முஸ்லிம் சகோதரர்கள் பலர் ஏற்று ஒற்றுமையாக வாழ்ந்தனராயினும் இன்று நிலைமை அதுவன்று.

மாறாக, தமிழ் மக்களை எதிரிகளாகப் பார்ப்பதிலும் தமிழர்களின் நிலங்களை அபகரித்தாக வேண்டும் என்ற நயவஞ்சகத்தோடும் முஸ்லிம் இனத்தின் ஒரு தரப்பு மிகத் தீவிரமாக இறங்கியுள்ளது.

இந்நிலைமை தமிழினத்துக்குப் பேராபத்தாக முடியும்.

எனவே முஸ்லிம் இனத்துடனான தமிழர்களின் உறவு பற்றி நாம் தெளிவாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

இவ்வாறான ஒரு நிலைப்பாட்டுக்கு வர வேண்டுமென்ற கருத்தியல் எம்மிடம் இருந்து உற்பத்தியானதல்ல.

மாறாக முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ் ஆற்றிய உரையின் அடிப்படையில் இருந்துதான் மேற்போந்த தீர்மானத்துக்கு தமிழினம் வரவேண்டியுள்ளது.

நாங்கள் தமிழர்கள் அல்ல. நாங்கள் தமிழ் பேசுகின்றவர்களும் அல்ல. நாங்கள் அரபுத் தமிழ் பேசுபவர்கள் என்ற அதாவுல்லாவின் கருத்து; முஸ்லிம்கள் தமிழர்களின் உறவை அடியோடு வேரறுக்க வேண்டுமென்ற ஆழ்மன சிந்தனையில் இருந்து எழுந்ததாகும்.

எனவேதான் தமிழ் மக்கள் தங்கள் நிலைப்பாட்டை இனி வெளிப்படையாக அறிவிக்க வேண்டிய தேவை வந்துவிட்டது.

### உண்ணாவிரதிகளைக் காப்பாற்றாதுவிட்டால் நிலைமை மிக மோசமாகி

# தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் அடிபட்டுச் சாகக்கூடிய நிலை உருவாகும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் அச்சம்

(கிளிநொச்சி)

தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதாக அறிவித்து உண்ணாவிரதிகளின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். அவர்களின் கோரிக்கை நியாயமானது. அவர்களைக் காப்பாற்றாது விட்டால் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அடிபட்டு சாகக்கூடிய நிலைமை உருவாகக் கூடும்.

21 ஆம் திகதி குண்டு வெடிப்பு பற்றி அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்த அரசாங்கம் இதிலும் இவ்வாறான போக்கைக்கடைப்பிடிக்கக் கூடாது என்று வலியுறுத்துகின்றேன் என வடக்குமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கனடா "வாணிபம்" வியாபார தகவல் கையேட்டு நிறுவனத்தினரின் அனுசரணையில் மக்கள் நலன் காப்பகத்தின் "அன்பகம்" மூதாளர் மாதாந்த உதவித் திட்டத்தின்ஆரம்பநிகழ்வுநேற்றுகிளிநொச்சியில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் இருந்தும் கூடஇரட்ணகுமார் வைத்தியநாதன் போன்றவர்கள் இங்கே வந்து கலந்து கொண்டிருப்பது எமது பாதிக்கப்பட்ட மக்கள் மீது கடல் கடந்த நாடுகளில் வசிக்கின்ற எமது உறவுகள் எவ்வளவு கரிசனை கொண்டிருக்கின்றார்கள் என்பதனை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது.

இருப்பவர்கீள் இல்லாதவர்களுக்கு கொடுக்க முன் வருவதே ஈகை. எமது வெளிநாட்டு உறவுகள் தரும் உதவிகளை இங்கு பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்குக் கொண்டு செல்லும் புனிதப் பணியில் மக்கள் நலன் காப்பகம் ஈடுபட்டுள்ளது.

மக்கள் நலன் காப்பகம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளடங்கலாக தன்னார்வ பணியாளர்களின் உதவியுடன் போரினால் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியில் மிகவும் பினதங்கிய நிலையில் உள்ள மக்களை இலக்காகக்கொண்டு பல்வேறு வகையான உதவித் திட்டாங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள்,

வாழ்வாதார உதவிகள், இலவச மருத்துவ சேவைகள், திடீர் அனர்த்தங்களுக்கான உதவிகள், குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தும் உதவிகள் என பல்வேறு வகையான உதவித் திட்டங்களை அரச அங்கீகாரம் பெற்று ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமாக செயற்படுத்தி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்ற நீண்ட கால தொடர் யுத்தத்தின் காரணமாக தேவையுடைய ம்க்களின் எண்ணிக்கை பல மடங்காகப் பெருகியுள்ளது.

அரசாங்கம் உதவிகளை தருவதாக அறிவித்தும் எம் மக்களின் வாழ்வில் ஒளி பிறப்பதாக இல்லை. அரசாங்கம் தருபவை தகுந்தவர்களைப் போய்ச் சேருகின்றதா என்பதில் சந்தேகமே எழுகின்றது. ஆகவேதான் எமது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டியுள்ளது.

ஆனால் வழங்கப்பட வேண்டிய உதவு தொகைகளை வழங்குவதற்கு இவ்வகையான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நிதிப் பற்றாக்குறையினால் அல்லல்படுவதை பல்வேறு சந்தர்ப்பங்களில் அவதானித்திருக்கின்றோம். இருந்தும் கிடைப்பதை வஞ்சகமின்றி கொடுக்கவே காப்பகத்தினர் விரும்புகின்றார்கள்.

எம் மக்களின் மேம்பாடு தொடர்பில் நானும் எனது கட்சியும் அதீத அக்கறை உடையவர்களாக இருக்கின்ற போதிலும் இவர்களுக்கான உதவித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு கட்சி என்ற ரீதியில் எம்மால் முடியாமல் இருந்தது.

எனினும் எமது அவாவையும் உதவித் திட்டங்களை வழங்குவதற்கு நாம் எடுக்கின்ற முயற்சிகளையும் அவதானித்த அன்பர் ஒருவர் ஒரு தொகைப் பணத்தை ஆரம்ப உதவித் திட்டங்களுக்காக எமக்கு அனுப்ப முன் வைத்துள்ளார். அவர் தந்த நிதியை சமமாகப் பகிர்ந்தளிப்பதன் மூலமாக 35 அங்கத்தவர்களுக்கு தலா ரூபாய் 5000வீதம் உதவித் தொகையை இன்று வழங்கியிருக்கின்றோம்.

இது மிகவும் சிறிய அளவிலான உதவு தொகையாக இருப்பினும் இந்த உதவித் திட்டங்கள் பற்றி அறிந்து கொள்கின்ற அல்லது கேள்விப்படுகின்ற மேலும் பல அன்பர்கள் தமது உதவிக் கரங்களை நீட்டுவார்கள் என எண்ணுகின்றேன்.

வெளிநாடுகளில் வாழுகின்ற பல அன்பர்கள் இவ்வாறான வேலைத் திட்டங்களுக்கு நிதிகளை வழங்குவதற்கு விருப்பமுடையவர்களாக இருக்கின்ற போதிலும் தமது உதவுதொகைகள் முறையாகப் பயன்படுத்தப்படுமா என்பதில் சந்தேகம் கொண்டிருக்கினறார்கள். இவர்கள் அனைவருக்கும் நாம் பகிரங்கமாக ஒரு அழைப்பு விடுத்திருந்தோம்.

உங்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற நிதி மூலங்கள் அனைத்தும் முறையாக கணக்கு வைக்கப்பட்டு அதன் செலவீனங்கள் அனைத்தும் ஒருவிபரமான அறிக்கையாக தயாரிக்கப்பட்டு உங்களுக்கு அனுப்புவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம.

இந்த விசேட வேலைத் திட்டத்திற்கென ஒரு ஓய்வு பெற்ற பிரதம கணக்காளர் ஒருவரை கடமையில் அமர்த்தி கணக்கு வழக்குகள் அனைத்தும் மிக நேர்த்தியாக முன்னெடுக்கப்படுகின்றது என்ற செய்தியை உங்களுக்கு குறிப்பாக புலம்பெயர் மக்களுக்கு மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

நான் முதலமைச்சராக கடமையேற்ற காலத்தில் இருந்து எனது பதவிக்காலம் முடியும் வரை பலதரப்பட்ட மக்கள் உதவிகளை வழங்கியிருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் உதவு தொகைகளுக்கான செலவு விபரங்கள் முறையாக எம்மால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. செலவு விபரங்கள் எனக் குறிப்பிடும் போது நீங்கள் தவறாக எண்ணி விடக் கூடாது.

உதவிகள் அனைத்தும் தேவையுடைய மக்களுக கான உதவு தொகைகளாகவே செலவிடப்பட்டுள்ளன. அத் தொகைகளிலிருந்து எமது நிர்வாக செலவுகளுக்கோ/ பதில்கடிதங்கள் அனுப்புவதற்கான செலவுகளுக்கோ கூட ஒரு சதமேனும் எம் மக்களின் உதவு தொகைகளில் இருந்து செலவு செயயப்படவில்லை என்பதை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

எமது மக்களை உள் நாட்டு யுத்தம் என்ற பெயரல் அவர்களின் உடமைகளை உறவுகளை அழித்து ஏதிலிகளாக்கிய பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ள வேணடும். எவர் எவர்களின் வீடுகளை அரசபடைகள் அழித்து நிர்மூலமாக்கியதோ அவர்களுக்கான வீடுகள் அம் மக்களுக்கு அமைத்துக் கொடுககப்படவேண்டும்.

அதேபோன்று இல்லாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உலக நியமங்களிற்கு ஏற்ப நியாயமாக நடந்து கொள்வதுடன் அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். அரசாங்கம் பயங்கரவாதிகளுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கின்றது. பயங்கரவாதம் என்ற பதத்தை வைத்து எம் மக்களைப் பயங்கரமாகப் பதம் பார்த்தது அரசாங்கமே.

நாம் கேட்ட நியாயமான அரசியல் கோரிக்கைகளை அரசாங்கங்கள் தந்திருந்தால் மக்கள் கிளர்ந்தெழத் தேவை எழுந்திருக்காது. அரச பயங்கரவாதம் எம் மக்களின் வாழ்க்கையை நிர்மூலமாக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிராது. இவைபற்றியெல்லாம் அரசுடனும் சர்வதேசத்துடனும் பலவழிகளில் பேசிப்பார்த்தாயிற்று.

எமது அனைத்து முயற்சிகளும் ஏதோ வகைகளில் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றன. அரசியல்ரீதியாக நன்மை பெறவே அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதனால்தான் எமது அரசியல்வாதிகளைக் காசு கொடுத்து வாங்க எத்தனித்திருக்கின்றது.

இந் நிலையில் எமது பாதிக்கப்பட்ட உறவுகளை தாங்கிக் கொள்ள அவர்களை பொருளாதார நிலையில் ஓரளவுக்காவது முன்னேற்றிவிட அவர்களின் மன அழுத்தங்களில் இருந்து அவர்களை விடுவிக்க எம்மவர்களே முயற்சிக்க வேண்டும். அதற்கு இது போன்ற அமைப்புக்கள் பெரிதும் உதவுகின்றன.

மேலும் கடல் கடந்த நாடுகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற உதவிகள் ஒரு முறையான வரைமுறையில் செயற்பட வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். அதற்கு அனைவரும் கைகோர்த்து முன்வர வேண்டும் எனத் தெரிவிக்கின்றோம்.

மேலும் மேலும் எமது ஈகையானது பார் முழுதும் இருக்கும் எமது உறவுகளை பாதிக்கப்பட்ட எம் மக்களுடன் தொடர்புபடுத்துவதாக அமைய வேண்டும். இத் தருணத்தில் ஒரு முக்கியமான விடயத்தை நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவது சம்பந்தமாக நாங்கள் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி மட்டக்களப்பில் இருந்து கல்முனைக்கு நடைபவனி ஆரம்பித்திருந்தோம். சுமார் ஒரு கிலோமீற்றர் நாம் நடந்து போனபோது பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டோம்.

அங்கிருக்கும் கிறிஸ்தவ ஆலயத்தில் குண்டுவெடிப்பு அன்று காலை நடந்தது பற்றி அப்போதுதான் அறிந்து கொண்டோம். நடை பவனியை நாம் அன்று கைவிட்டாலும் பாதிக்கப்பட்ட மக்களுடன் இன்றுவரையில் தொடர்பில் இருந்து வருகின்றோம். உண்ணாவிரதிகளைக் கண்டு எமது ஆத்மார்த்த ஆதரவினை வெளிப்படுத்தி வருகின்றோம்.

ஆனால் நேற்று முன் தின சம்பவங்கள் எனக்கு அதிர்ச்சியூட்டுகின்றன. அரசாங்கம் காலம் கடத்தினால் உண்ணாவிரதிகளின் உயிருக்கு ஆபத்து விளையக் கூடுமஎன்றுபயப்படுகின்றோம்

தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதாக அறிவித்து உண்ணாவிரதிகளின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். அவர்களின் கோரிக்கை நியாயமானது. அவர்களைக் காப்பாற்றாது விட்டால் நிலைமை மிக மோசமாகிவிடும். தமிழ்,முஸ்லிம், சிங்கள மக்கள் அடிபட்டு சாகக்கூடிய நிலைமை உருவாகக்கூடும்.

21ஆம் திகதி குண்டு வெடிப்பு பற்றி அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்த அரசாங்கம் இதிலும் இவ்வாறான போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது என்று வலியுறுத்துகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரேவடி அணியை வீழ்த்தி மகுடம் சூடியது நேதாஜி





நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகம் நட த்தும் வல்லவைக் குட்பட்ட கழகங்களுக் கிடையிலான உதை பந்தாட்டச்சுற்றுத் தொட ரின் இறுதிப் போட்டி யில் ரேவடி அணியை எதிர் த்து நேதாஜி அணிகள் மோதின. ஆட்டநேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் நேதாஜி அணி யானது வெற்றி பெற்று சம்பி யனாகியது.

போட்டியின் ஆட்ட நாய கனாக நேதாஜி விளையாட் டுக்கழகத் தைச் சேர்ந்த ரசிகரன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த கோல்காப் பாளராக ரேவடி விளை யாட்டு க்கழகத்தைச் சேர்ந்த றொசஷான் தெரிவு செய்யப்பட் டார். (க)

# நொதேண் விளையாட்டுக் கழகத்தின் மின்னொளியிலான நிரந்தர கரப்பந்தாட்ட ஆடுகளத் திறப்பு விழா

நொதேண் விளை யாட்டுக் கழகத்தின் மின்னொளி யிலான நிரந்தர கரப்பந்தாட்ட ஆடுகளத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

நொதேண் விளை யாட்டுக் கழகத்தின் நல்லூர் கல்வி யங்காடு நண்பர்கள் அனு சரணையுடன் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விரு ந்தினராக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள் ளவுள்ளார்.

மேற்படி நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சைக்கு தோற்றவுள்ள மாணவர்களு க்கான பரிசில் வழங்கல், இல வச மூக்குக்கண்ணாடி வழங் கல் மற்றும் கரப்பந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டி என்பன நடை பெறவுள்ளது. (ம)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# பூப்பந்தாட்டப் போட்டியில் சாதித்தது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை







மன்னாரில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவில் சம்பியனும் 18 வயதுப் பெண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தினையும் பெற்றது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி. இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் மோதின. இப் போட்டியில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணி சம்பியன் பட்டத்தை வென்று அசத்தியுள்ளது. (க)




வடமாகாண பாடசா லைகளுக்கு இடையிலான 16 வயதிற்குட்பட்ட பெண் களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை சென். தோமஸ் றோமன் கத் தோலிக்க பெண்கள் பாட சாலை அணி வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றி யது. (க)



பாடசாலைகளுக்கிடை யிலான பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 20 வயதுப் பிரிவில் மகா ஜனக் கல்லூரி பெண்கள் அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

கட ந்த 2014, 2015, 2016, 2017, 2018, 2019 ஆகிய ஆறு ஆண்டுகள் தொடர்ச்சியாக சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளது. (கு)

# நேதாஜி அணியை வீழ்த்தி சம்பியனாகியது உதயசூரியன் அணி




நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய வல்வைக் குட் பட்ட கழகங்களுக் கிடை யிலான வலைப்பந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டியில் உதய சூரியன் அணியை எதிர்த்து நேதாஜி அணிகள் மோதின.

ஆட்டநேர முடிவில் 14:6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது உதய சூரியன் அணி. (க)

## இலங்கையில்...

அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களான இல்ஹான் ஓமர், பில்ஜோன்சன், ஜிம் மக்கவன் ஆகியோர் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இலங்கையில் பதற்ற நிலை அதிகரிக்கின்றது எனவும், அங்கு சமாதானம் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது எனவும் இல்ஹான் ஓமர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலை மோசமடையும் முன்னர் மத விவகாரங்கள் மற்றும் போர்க்குற்ற விவகாரங்களுக்கான தூதுவர்கள் உடனடியாக தலையிடவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவிலும் உலக நாடுகளிலும் மத சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய விடயங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாகவுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் மோசமான உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து நாங்கள் இலங்கையுடன் இணைந்து பணியாற்றும் அதேவேளை யுத்தத்திற்கு பிந்திய நல்லிணக்கம் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான அமெரிக்காவின் வலியுறுத்தல்கள் தொடர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் மத சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக ஜிம் மக்கவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் கடும் போராட்டத்தின் மூலம் பெற்ற இந்த உரிமைகள் பலவீனப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க கூடாது எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-3)

## எனக்குத் தெரி...

காக பதில் அமைச்சர்கள் ஜூன் 10 அன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

அதன்படி, நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி பதில் அமைச்சராக லக்கி ஜெயவர்தன நியமிக்கப்பட்டார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராகவும், நீடித்த இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றவும், கூட்டுறவு மேம்பாடு மற்றும் தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் பதில் அமைச்சராக புத்திக பத்திரண நியமிக்கப்பட்டுள்ளார்.

நெடுஞ்சாலை மற்றும் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள மேம்பாட்டு பதில் அமைச்சராக அனோமா கமகே நியமிக்கப்பட்டார்.

பதில் அமைச்சர்களை நியமிப்பது தொடர்பாக பிரதமருடன் கலந்தாலோசிக்காமலே ஜனாதிபதி முடிவெடுத்தார். மேலும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடைய நியமனங்களை வழங்குவதற்கு முன்னரும் பிரதமருக்கு அறிவிக்கப்படவில்லை.

பிரதமர் பரிந்துரைத்த பெயர்களும் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மக்களை நேசிக்கும் அரசை உருவாக்குவோம்...

வாதத் தாக்குதல் இடம்பெறாது என்று அரசாங்கத்தரப்பில் இருந்து இன்னும் நம்பகத்தன்மையான கருத்துக்கள் எதுவும் வெளியாகவில்லை.

## ஜனாதிபதி மைத்...

ஏற்கெனவே பிரதமரையும் அழைக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது எனினும், அவர்களை சாட்சியமளிக்க அழைக்கும் திகதி தீர்மானிக்கப்படவில்லை. (ம-3)

## யுத்தத்தால் பாதி...

போரினால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களிற்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள மக்கள் நலன் காப்பகத்தில் இடம்பெற்றது. குறித் நிகழ்வில் முன்னாள் வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உதவிகளை வழங்கி வைத்தார்.

இதன்போது யுத்தத்தில் உயிரிழந்த மாவீரர்களின் பெற்றோர் 30 பேருக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன், உலர் உணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இவ்வாறான குடும்பங்களிற்கு மக்கள் நலன் காப்பகம் மற்றும் புலம்பெயர் உறவுகள் பலரும் உதவ முன்வந்துள்ளமையை விக்னேஸ்வரன் பாராட்டினார்.

இதேவேளை யுத்தத்தினால் சிதைக்கப்பட்ட ஏழைகளின் வீடுகள் உள்ளிட்டவற்றை சீர்செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தினார். இதேவேளை கல்முனை சம்பவம் தொடர்பிலும் அவர் கருத்து தெரிவித்தார். (ம-3)

## அரச புலனாய்...

மாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தின் தகவல்கள் கூறுகின்றன.

புலனாய்வு பிரிவுகளின் பிரதானிகளிடம் விசாரணை நடத்த வேண்டாம் என ஜனாதிபதி கோரிக்கை விடுப்பதற்கு முன்னர், அரச புலனாய்வு சேவையின் பிரதானி நிலந்த ஜயவர்தன, புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன மற்றும் புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் ஷானி அபேசேகர போன்ற உயர்மட்ட புலனாய்வு அதிகாரிகளை அழைத்து விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு தீர்மானித்திருந்தது.

முன்னதாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் புலனாய்வு அதிகாரிகளை விசாரணைக்கு உட்படுத்துவதனால் நாட்டின் புலனாய்வுத் தகவல்கள் வெளியே செல்வதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்ததுடன், ஜனாதிபதி கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)



இன்னும் நான்கு மாதங்களில் இந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலம் நிறைவுக்கு வருகிறது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் மக்களின் பாதுகாப்புக்கு சிறப்புரிமை கொடுக்கும் நாட்டையும் மக்களையும் நேசிக்க கூடியதலைமைத்துவத்துடனான அரசாங்கமொன்றை உருவாக்குவோம் என்று எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தற்கொலை குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று இரண்டு மாத பூர்த்தியை முன்னிட்டு நேற்று கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் எதிரணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நினைவேந்தல் நிகழ்வு எதிர்க்கட்சி தலைவரின் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில, மஹிந்தானந்த அலுத்கமகே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

எதிர்க்கட்சி தலைவர் அங்கு மேலும் கூறியதாவது.

எதிர்வரும் நான்கு மாதங்களில் இந்த அரசாங்கத்தின் ஆட்சி காலம் நிறைவடைகிறது. இந்த நான்கு மாதங்களுக்கு பின்னர் கட்டாயம் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். தேர்தல்களுக்கு களமிறங்குவது அவசியமாகும். மாகாணசபைகளுக்கான தேர்தலே முதலில் இடம்பெற வேண்டும்.

ஆனால் அரசாங்கம் இந்த தேர்தலை நடத்தும் என்ற நம்பிக்கை எமக்கு கிடையாது. முதலில் ஜனாதிபதி தேர்தலே இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நாங்கள் உருவாக்கும் அரசாங்கத்தில் நிச்சயமாக மக்களின் பாதுகாப்புக்கு முக்கிய இடம் வழங்கப்படும். தேசிய பாதுகாப்புக்கு முக்கிய இடத்தை வழங்கும் வகையிலேயே எங்களின் அரசாங்கம் அமையும்.

ஏப்ரல் 21 தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று 2 மாதங்கள் நிறைவடைகின்றது. இந்த தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை நடவடிக்கைகள் இன்னும் இயல்பு நிலைமைக்கு திரும்பவில்லை.

அரசாங்கம் இது தொடர்பில் பொறுப்புடன் செயற்படுவதாக தெரியவில்லை. பொறுப்புக்களை அடிமட்ட அதிகாரிகளிடம் விட்டு விட்டு அரசாங்கம் தன்னை பாதுகாத்து கொள்ளவே முயற்சித்து வருகிறது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்பதற்கு சாதக மானதும் நம்பிக்கையானதுமான எந்த கருத்தும் இன்னும் அரசாங்கத்தரப்பில் இருந்து வெளியாகவில்லை. சிலர் பயங்கரவாதத்தை முழுமையாக ஒழித்து விட்டதாகவும் குறுகிய காலத்தில் தாங்களே பயங்கரவாத செயற்பாடுகளை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் மார்தட்டிக் கொள்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தரப்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைளில் அனுபவம் பெற்றவராக இருக்கிறார்.

இந்த நிலையை அவ்வளவு விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாது என்றும், கட்டுப்படுத்தா விட்டால் மீண்டும் தாக்குதல்களை சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கிறார்.

இவ்வாறானவொரு நிலையில் சகலரும் அச்சத்துடன் தமது அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளது. சிலரின் செயற்பாடுகளின் காரணமாக முழு முஸ்லிம் சமூகத்தின் மீதும் நம்பகமற்ற தன்மையை உருவாக்கியுள்ளது.

இவர்களின் செயற்பாடுகளினால் முஸ்லிம் சமுதாயமே பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் முஸ்லிம் சமய தலைவர்களுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் முக்கிய பொறுப்பு காணப்படுகிறது. சமுதாயத்தில் இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலை மீண்டும் உருவாகாத வகையிலும் இவ்வாறான செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் இருப்பார்களாக இருந்தால் அவர்களுக்கு புனர்வாழ்வை பெற்றுக்கொடுப்பதும் அவர்களின் முக்கிய பொறுப்பாக காணப்படுகிறது.

சமூகத்தில் ஏற்பட்டுள்ள அச்ச நிலைமையை போக்கி இயல்பு நிலையை உருவாக்குவதில் அரசாங்கத்துக்குப் பாரிய பொறுப்பு உள்ளது. ஆனால் அரசாங்கம் அந்த பொறுப்பை சரியாக நிறைவேற்றுகின்றதா என்ற சந்தேகமும் எமக்கு ஏற்பட்டுள்ளது. மாறாக எங்களையே அரசாங்க தரப்பு குற்றவாளியாக பார்க்கிறது. இந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

முப்பது வருடகால யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்து பத்து வருடங்கள் முழுமையடைவதற்கு முன்னர் மீண்டும் பயங்கரவாத தாக்குதல்களை சந்திக்க நேர்ந்துள்ளது.

குறைந்தது பத்துவருட காலமாவது நாட்டின் அமைதியை பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. இந்த தாக்குதல்கள் தொடர்பான விபரங்கள் ஏப்ரல் நான்காம் திகதி அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் அந்த முன் அறிவித்தல்கள் தொடர்பில் அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமல் இருந்திருக்கிறது.

சம்பந்தப்பட்ட தகவல்கள் பொறுப்பான அதிகாரிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள போதிலும் அது குறித்தும் கவனம் செலுத்தாமலேயே அரசாங்கத்தினர் செயற்பட்டுள்ளனர்.

நாட்டின் எதிர்காலம் தொடர்பில் எதிர்க்கட்சிக்கும் பாரிய பொறுப்பு இருக்கிறது. அதனை செய்யவே நாங்கள் முயற்சிக்கிறோம் என அவர் இதன் போது தெரிவித்தார். (ம-3)

### நிரந்தர நியமனத்துக்கு தெரிவாகாத

# தொண்டர் ஆசிரியர்கள் திங்கள் முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத்தீர்மானம்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களில் நிரந்தர நியமனம் வழங்கத் தெரிவாகாதவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர நியமனத்துக்கான பட்டியலின் இடம்பெறாதவர்கள் நேற்று கிளிநொச்சியில் ஒன்று கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆயிரத்து 17 தொண்டர் ஆசிரியர்களுக்கு வரும் 29ஆம் திகதி, நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

அவர்களது பெயர் விவரங்களை ஈக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பிரிவு வெளியிட்டிருந்தது. இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களில் நிரந்தர நியமனத்துக்கு தெரிவாகாத சுமார் 150 பேர் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று ஒன்று கூடினர்.

தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கான நிரந்தர நியமனத்தை உறுதிப்படுத்தும் வரை வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு முன்பாக சுழற்சி முறையில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் அவர்கள் இதன் போது தீர்மானித்தனர். (ம-3)

கொவிசெத
திகதி 2019.06.22
சீட்டிழுப்பு இலக்கம் 2156
T 13 29 44 70

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22-06-2019
சீட்டிழுப்பு இலக்கம் 950
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 2 3 5 2 8 6

திகதி 2019/06/22
சீட்டிழுப்பு இலக்கம் 1436
எழுத்து 24
வெற்றி இலக்கம் 13 14 38 62 05 51

சேவன
திகதி 2019/06/22
சீட்டிழுப்பு இலக்கம் 194
ஆங்கில எழுத்து P
வெல்லப்பட்ட இலக்கங்கள் 09 33 53 67

## காணாமல் போனவர் சடல...

யங்குளம், பெரியமடு காட்டுப் பகுதியிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவனியா பண்டாரிக்குளம் பகுதியில் வசித்து வந்த இளஞ் சிங்கம் தேவராசா 74 வயதுடைய வயோதிபர் கடந்த 08.06.2019 முதல் காணாமல் போயுள்ளதாக அவரது உறவினர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு (10.06.2019) அன்று மேற் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுக் காலை அவரது சொந்த இடமான புளியங்குளம் பெரிமடு காட்டுப்பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்
இருபாலை சந்திக்கு அண்மையில் (கிழக்கு வீதி)
திருமணத்தடை, புத்திரபாக்கியம் / புத்திரபாக்கியதடை, தொழில் வியா பாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங் கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக் குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் - வவுனியா)
தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:-
076 328 7119 (9342)

வீடு வாடகைக்கு
சுன்னாகம் பெரிய மதவடியில் 100 M தொலைவில் உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள 4 பரப்புக் காணியில் 3 Rooms, Dinning Hall, Kitchen, Living Room, Visiters Hall, Verandah, Attached Bathroom, Servant Toilet and Bathroom, Vehicle Garage உடன் தற்சமயம் பயன்தரும் தென்னை, பலா, மா மரங்கள் அடங்கிய சோலையுடன் 4 புறமும் சுற்றுமதிலுடன் வசதியான வீடு வாடகைக்குண்டு. (9212)
077 611 9313, 077 605 1971

வேலை வாய்ப்பு
100 வருடங்களாக சேவையாற்றிவரும் AIA காப்புறுதி நிறுவனத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
- நிதி ஆலோசகர் (Wealth Planner)
  - O/L சித்தியடைந்திருந்தல்
  - இல்லத்தரசிகள் / ஓய்வுபெற்றவர்கள்.
- அலுவலக உத்தியோகத்தர் (Insurance Traine)
  - A/L சித்தியடைந்திருத்தல்
  - ஆங்கிலம் சரளமாக பேசுதல்
  - கணனி அனுபவம் (MS Office)
- அலுவலக உதவியாளர் (Peon)
மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு தகுதியுடையவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையினை கீழ் வரும் முகவரிக்கு 25.06.2019 ற்கு முன்னராக அனுப்பிவைக்கவும்.
தொடர்புகளுக்கு : AIA Insurance Lanka PLC 62/6, Stanley Road, Jaffna. 076 285 5601 (9347)

## பாராளுமன்ற தெரிவுக்குழுவில்...

டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழு இதுவரையில் 7 தடவைகள் கூடியுள்ளது.

இந்த அமர்வுகளில் பாதுகாப்பு செயலாளர் சாந்த கோட்டேகொட, தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைமை அதிகாரி சிசிர மெண்டிஸ் மற்றும் நாலக டி சில்வா, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா, காத்தான்குடி பொலிஸில் சேவையாற்றிய முன்னாள் பொறுப்பதிகாரி மற்றும் தற்போதைய பொறுப்பதிகாரி ஆகியோருடன், சுஃபீ முஸ்லிம் அமைப்பின் பிரதி நிதி மற்றும் சிலோன் தௌஹீத் ஜமாத்தின் செயலாளர் அப்துல் ராசிக் ஆகியோரிடம் சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன.

இவர்கள் வழங்கிய சாட்சியங் கள் மூலம் பல உண்மைகள் அம் பலமாகியுள்ளன. இதனையடுத்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு எதிர்ப்புகளும் வெளியிடப்பட்டன. குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரியிருந்தார்.

எனினும் சர்ச்சைகளுக்கு மத்தியில் குறித்த குழுவின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான நிலையிலேயே பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கல்முனைக்கான உணவுத் தவிர்ப்பு...

எனினும், தீர்வு கிட்டும் வரை சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. பிரதேச செயலகத்தினை தரமுயர்த்த வேண்டாம் என கோரி கல்முனையில் நான்காவது நாளாகவும் சத்தியாக்கிரக போராட்டம் இடம்பெற்று வருகின்றது. அம்பாறை-கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஆறாவது நாளாக நேற்று நண்பகல் வரை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நாவாந்துறையில்...

ஸார் தெரிவித்தனர்.

நாவாந்துறை - பொம்மைவெளியில் உள்ள அரச காணியை முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் அபகரித்து வைத்துள்ளார் என்றும் அதனை தமக்கு பகிர்ந்து வழங்குமாறும் தமிழ் மக்கள் நேற்று முன்தினம் வலியுறுத்தினர். அத்துடன், அந்தக் காணிக்குள் நுழைந்து எல்லைக்கு கயிறு கட்டி தமக்குள் பகிர்ந்து கொண்டனர்.

எனினும் முஸ்லிம் பிரதிநிதி சார்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து அங்கு வந்த சிறப்பு அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் அப்பகுதியிலிருந்த மக்களை வெளியேற்றினர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அந்தக் காணிக்குள் மாதா சொரூபம் ஒன்று பீடம் அமைக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. (ம-3)

## அமைச்சர் ரவி வவு...

ரவி கருணாநாயக்க நேற்று விஜயம் மேற் கொண்டார்.

வட பகுதிக்கான மின்சார விநியோகம் மற்றும் பாவனையாளர்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்குவது தொடர்பாக ஆராயும் நோக்குடனேயே தனது விஜயம் அமைந்திருந்தாக ஊடகவியலாளர்களுக்கு இதன்போது தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் மின்பிறப்பாக்கி நிலையத்தின் மின்விநியோக செயற்பாடுகளை பார்வையிட்ட அவர் மின் பொறியியலாளர்களுடனும் கலந்துரையாடியிருந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், மின்சாரசபையின் வட பகுதிக்கு காணப்படும் வெற்றிடங்களை மிக விரைவில் நிரப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (ம-250)


வேலைவாய்ப்பு The Inner Circle
Job ! Job ! Job !
நீங்கள் O/L பயின்றவரா? இவ் விலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. வடக்கில் 40 பேருக்கு முன்னுரிமை.
- நிர்வாக அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- மேற்பார்வையாளர்
- செயல்திட்ட அதிகாரி
- முகாமைத்துவ உதவியாளர்

அனுபவம் இல்லையா?
தங்குமிட வசதியுடன் நிரந்தர வருமானம்
45,000 + EPF, ETE
The Inner Circle (Pvt) ITD)
3/100 ManiPay Road, Jaffna. (9351)
தொடர்புகளுக்கு : 077 999 4807 076 770 7759

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
இப்பொழுது!!!
மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 350/=
France, Germany, Italy, Denmark - 500/=
திருமுருகன் கொம்யூனிகேசன்
321, K.K.S.Road, Jaffna. (C-6656) 0777 554 528

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
அருள்
இல.1. NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576 (C-6615)

Northern Academic and Leadership Training Center
"Kindergarten"
ஆரம்ப பாலர் பாடசாலை
3+, 4+, 5+
2020ம் ஆண்டிற்கான அனுமதி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
- ஆங்கில மொழி மூலமான கற்கைச் செயற்பாடுகள் (English Medium)
- தமிழ் மொழி மூலமான கற்கைச் செயற்பாடுகள் (Tamil Medium)
- விளையாட்டுடன் கூடிய செயற்பாடுகள் (There are Much fun Activities For entertainment of Kids)
Please Note : எவ்வித அனுமதிக்கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.
(No Admission and no donation) - Admission Limited)
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
Contact No. 070 375 0002 (93)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com
சம்பளம் -15'000/- (C-6728)

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அன்னா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

வீடு விற்பனைக்கு
பிரம்படிலேன், கொக்குவிலில் 2 பரப்பு காணியில் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 076 702 3565 (9348)

வாகன சாரதி
கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய கனரக வாகன சாரதி தேவை. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 076 690 8976, 076 690 8986 (9348)

வீடு வாடகைக்கு
யாழ். திருநெல்வேலி சந்தியிலிருந்து 500m தொலைவில் பலாலி வீதியில் நான்கு அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 077 7460 441 (C-6753)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240 V2 TRAVELS
மானிப்பாய், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-6532)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 222

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 23.06.2019 | தொலைபேசி : 021 222 3378





## தமிழர்களுக்கு எதிராக...



## கிழிந்தது முகத்திரை

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஜூன் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினம். நாங்கள் அனைவரும் யோகாசனத்தை ஒவ்வொரு நாளும் நிச்சயம் செய்தாக வேணும். பண்டிதர் இவ்வாறு கூறியதை சாத்திரியார் சதாசிவம் அங்கீகரித்தார்.

யோகாசனம் ஆன்ம சுகத்தைத் தருகின்ற மிகப் பெரிய பொக்கிசம். மாணவப் பருவத்தில் யோகக் கலையைக் கற்றுக் கொண்டால் நோய் நொடியின்றி பூரண ஆயுளோடு வாழ முடியும்.

இவ்வாறு சாத்திரியார் கூற, உண்மைதான் யோகாசனத்தைக் கற்றுக் கொள்வதோட சைவபோசனத்தை உணவாகக் கொள்ளுகின்ற புனிதத்தையும் நாங்கள் பின்பற்ற வேணும் என்று வாத்தியார் வைத்திலிங்கம் கூறினார்.

மூப்பர்: வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இந்த உடம்பு சைவபோசனத்துக்கு உரியதாகவே படைக்கப்பட்டது.

ஆனால் நாங்கள் ஊர்வன, பறப்பன, நடப்பன என உயிர்களைக் கொன்று இவற்றின் இறைச்சிகளை உண்டு கொன்ற பாவத்தையும் தின்ற பாவத்தையும் செய்யிறம்.


விதானையார்: அதுதான் நான் அடிக்கடி சொல்லுறனான் சைவசமயம் ஒன்றுதான் இந்த உலகில ஓர் உயிர்க்கும் தீங்கில்லாத சமயம் எண்டு. நேற்று முன்தினம் ஜூன் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினத்தில யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதரகத்தின்ர ஏற்பாட்டில சைவ உணவு என்ற கருப்பொருளில ஒரு நிகழ்வு நடந்தது. அதின்ர முழு நோக்கமும் சைவ உணவை உண்டு ஒவ்வொரு மனிதர்களும் புனிதர்களாக வாழ வேண்டும் என்பது தான்.

கங்காணியார்: மாமிசங்களை உண்ணுகின்றவர்களின் மனங்களும் அவர்கள் திண்ட மிருகங்கள் மாதிரித்தானே மாறியிருக்குது.

மூப்பர்: சில மதத் தலைவர்களே ஆடு, மாடு சாப்பிடுவதிலேயே ஆசை கொண்டிருக்கினம். அவர்கள் வைத்திருக்கிற குளிர்சாதனப் பெட்டிகளைத் திறந்து பார்த்தால் தெரியும் ஆடு, மாடு, கோழி, கடல்வாழ் உயிரினங்கள் எல்லாம் அந்தக் காம்பறாப் பெட்டிக்குள்ள வைக்கப்பட்டிருக்கும்.

மூப்பர்: என்ன செய்யிறது. சமயப் பணி செய்வதற்கென வந்த சிலர் சுகபோக வாழ்க்கை அனுபவித்துக் கொண்டு பிற சமயங்களுக்கு எதிராகவும் செயற்படுகினம். இந்த அநியாயத்தால தானே எங்கட நாடு இன்னமும் முன்னேற முடியாமல் இருக்குது.

விதானையார்: பிந்தி வந்த சமயங்கள் ஆதிச் சமயங்களை அழிக்க திடசங்கற்பம் எடுத்திட்டினம். இந்த அழிப்பு நடவடிக்கை மன்னாரில இருந்துதான் ஆரம்பிக்கப்படுகுது.



## 118 பேரில் 70 வீதமானவர்கள் முஸ்லிம் தரப்பினராம்

வாத்தியார்: விதானையார் மன்னாரில சமய வன்முறையை ஏற்படுத்தி அதனூடு தமிழின் ஒற்றுமையைக் குலைக்கிறதும் திருக்கேதீச்சர சிவாலயத்தை சிதைக்கிறதுமான திட்டம் ஒண்டு இருப்பதாகக் கேள்வி.

இது விடயத்தில, ஒரு சிலர் கடுமையான வன்முறைப் பயிற்சிகளையும் பெற்றிருக்கினமாம்.

என்னைப் பொறுத்த வரை சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேணும் எண்ட நல்ல எண்ணத்தோட எத்தனையோ மத குருமார் இருக்கினம். அவையள் நிச்சயம் வன்முறையாளர்களுக்கு இடம் கொடுக்கமாட்டினம் எண்ட நம்பிக்கை எனக்கிருக்குது. அதுதான் முடியல்ல எண்டாலும் சிவன் மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்குது. அவர் எல்லாம் பார்த்துக் கொள்வார். வாத்தியார் இப்படிக் கூறியதும் விதானையார் விசுவலிங்கம் கடும் கோபப்பட்டார்.

விதானையார்: வாத்தியார் ஒரு நாளும் இப்படிச் சொல்லாதீங்கோ. திருஞானசம்பந்தர் முதல் எங்கட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வரை சைவமும் தமிழும் வாழ்வதற்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்கள். சிவன் பார்த்துக் கொள்வார் எண்டு ஞானசம்பந்தர் நினைத்திருந்தால், ஆறுமுகநாவலர் சொல்லியிருந்தால் எங்கட சைவத்திற்கும் தமிழுக்கும் சமாதி கட்டியிருப்பினம்.

(இவ்வாறு கூறியபடி விதானையார் ஆலடியில இருந்து வெளிக்கிட்டார், நிலைமை முறுகிவிட்டதை உணர்ந்த ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் விதானையாரை ஆசுவாசப்படுத்த முற்பட்டனராயினும் அவர் ஆலடியில் இருந்து வேகமாக வெளிச் சென்றார். விதானையாரின் விடயத்தை அடுத்த ஆலடி மாநாட்டில் பார்க்கலாமென்று கூறிய வாத்தியார், பண்டிதரைப் பார்க்க பண்டிதர் குரல் கொடுத்தார்).

பண்டிதர்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில கல்விசாரா ஊழியர்களை நியமிக்கிறதுக்கான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்குது. பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனுப்பின பட்டியலில இருந்துதான் இந்த நியமனம் நடக்கப் போகுதாம்.

மூப்பர்: நான் அறிந்த மட்டில முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அனுப்பின பட்டியலில இருந்துதான் சுமார் 118 பேருக்கு பரீட்சை நடத்தியிருக்கினம்.

கங்காணியார்: கடவுளே அதையேன் கேக்கிறியள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பட்டியலில பெயர் உள்ளவர்களிட்ட விண்ணப்பம் வாங்கி அண்டைக்கு ஒரு மணியிலிருந்து இரண்டு மணிவரை பரீட்சை நடத்தியிருக்கினம்.

சிறாப்பர்: என்ன கங்காணியார் விண்ணப்பம் வாங்கினதும் பரீட்சை நடந்ததும் ஒரே நாளிலேயோ.

கங்காணியார்: அது மட்டுமல்ல சிறாப்பர் அண்ணே.

ஒரு மணியில இருந்து இரண்டு மணி வரை நடந்த பரீட்சையின்ர விடைத்தாள் அதிரடியாகத் திருத்தப்பட்டிருக்குது. பிற்பகல் இரண்டு மணிக்குத் தொடங்கிய திருத்தும் பணி பிற்பகல் 3.30 மணிக்கு முடிந்திருக்குதாம். யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த நான்கு பேர் இந்தத் திருத்தும் பணியில ஈடுபட்டிருந்ததாகவும் கேள்வி.

சாத்திரியார்: எல்லாப் பரீட்சைகளும் இந்த வேகத்தில நடத்தி முடித்து பெறுபேற்றை வெளியிட்டால் எங்கட பிள்ளைகள் உடனடியாக பட்டச் சான்றிதழைப் பெற்று வேலை வாய்ப்போ அல்லது பின் பட்டப் படிப்புக்கோ போகலாம். என்ன செய்யிறது.

பண்டிதர்: இதில இன்னொரு சங்கதியும் இருக்குது.

மூப்பர்: என்ன பண்டிதர் சொல்லுறியள். 118 பேரில 70% மாணவர்கள் முஸ்லிம் இனம் சார்ந்தவர்களாம்.

சிறாப்பர்: அதுதானே பார்த்தன். தமிழ்ப் பிள்ளைகளுக்கெண்டால் இந்த வேகத்தில வேலை நடக்குமோ?

சாத்திரியார்: அப்ப இனி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில ஆட்களைப் பரிசோதிக்கத் தேவையில்லைப் போல. சாத்திரியார் இவ்வாறு கூறியதன் பொருள் ஒருவருக்கும் புரியவில்லையாயினும் அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணி ஒலித்ததால் ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# காலங்கடத்தும் கபடத்தனம் கிழக்கில் கிழிபட்டுப் போனது

சிங்களப் பேரினவாதத்தால் நசுக்கி ஒடுக்கப்பட்ட தமிழினத்தை இப்போது முஸ்லிம் தரப்பு தாக்கத் தொடங்கியுள்ளது.



விடுதலைப்புலிகள் என்ற தமிழர் தலைமை தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழினம் பல வீனப்பட்டுப் போய்விட்டதென்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மை.

விடுதலைப்புலிகள் என்ற போராட்ட அமைப்பு தமிழ் மக்களின் மிகப்பெரும் பலமாக இருந்தது. 2009 ஆம் ஆண்டு அந்த அமைப்பை இல்லாது செய்துவிட்ட பின்பு தமிழ்மக்கள் மீது வன்மம் தீர்க்க முஸ்லிம் தரப்பு முன்னெழுந்துள்ளது.

அதன் ஒரு கட்டமே கிழக்கு மாகாணத்தைத் தம்வசப்படுத்துகின்ற நடவடிக்கையை முஸ்லிம் தீவிரவாதம் முன்னெடுத்துள்ளது.

தமிழ்மக்களின் காணிகளை கள்ள உறுதி முடித்து தமதாக்கிக் கொண்டதுடன் சைவ ஆலயங்களுக்குச் சொந்தமான காணிகளை கையகப்படுத்தி சந்தைகளும் மாட்டிறைச்சிக் கடைகளும் கட்டப்பட்டன. இவையெல்லாம் நடந்தபோதிலும் தமிழ் அரசியல் தரப்புகள் வாய்திறக்கவில்லை.

மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் கிழக்கு மாகாணத்தை முஸ்லிம்களுக்கு தாரைவார்த்து விடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் முஸ்லிம் இனத்தவராக இருப்பதை ஏற்றுக்கொண்ட கூட்டமைப்பு அதனைச் செய்தும் காட்டியது. இந்நிலையில் கிழக்கில் முஸ்லிம்களின் கை ஓங்கிக் கொண்டது.

தமிழ்மக்களை இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்கின்ற கொடுமைத்தனம் சர்வசாதாரணமாக நடந்து வருவதை தேசியப் பத்திரிகைகளில் ஒவ்வொரு நாளும் வருகின்ற மதமாற்ற விளம்பர அறிவித்தல்கள் உறுதி செய்கின்றன.

நிலைமை கிரந்தம் முற்றிப் பௌத்திரமாக ஆகிவிட்ட போதிலும் சூழ்நிலையை கூட்டமைப்பு புரிந்துகொள்வதாக இல்லை.

இவை ஒருபுறமிருக்க, கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு தமிழ்மக்கள் முன்வைக்கின்ற கோரிக்கையை முறியடிக்கும் வகையில் முஸ்லிம் தீவிரவாதம் மாபெரும் பேரணிகளையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றது.

அவ்வாறு நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய அதாவுல்லா, தமிழினத்தை மிக மோசமாகத் தாக்கிப் பேசியிருந்ததுடன் தமிழினத்தை தமது எதிரிகள் என்ற பொருள்படவும் உரையாற்றியுள்ளார்.

அதாவுல்லாவின் உரையில் இருந்து கிழக்கில் வாழும் தமிழ் மக்களை முஸ்லிம் தீவிரவாதம் விரைவில் தாக்கவும் வெளியேற்றவும் தயாராகிவிட்டது என்பது தெளிவாகிறது.

ஏலவே கிழக்கில் உள்ள பள்ளிவாசல்களில் இருந்து மீட்கப்பட்டவாள்கள் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கும் வன்செயல்களைத் தூண்டி கலவரத்தை உருவாக்கி தமிழ் மக்களை வெட்டிச் சாய்ப்பதற்குமான ஏற்பாடு என நாம் முன்பே கூறியிருந்தோம்.

நாம் முன்வைத்த அந்தக் கருத்தை உறுதி செய்வதாக தற்போது தமிழ்மக்களுக்கு எதிராகக் கிழக்கில் நடக்கும் முஸ்லிம் தரப்பின் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் அமைந்திருப்பதைக் காணமுடியும்.

எனினும் கிழக்குத் தமிழ் மக்களும் தங்கள் பூர்வீகத்தை- தமிழ் இனத்தின் தாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர். அதன் வழி கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேசத்தைத் தரமுயர்த்துவதை வலியுறுத்தி அஹிம்சைவழியில் தமிழ் மக்கள் தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.



இதில் வேடிக்கை என்னவெனில், தமிழ்மக்களின் கோரிக்கைக்குச் சமாதிகட்டி விடும் கபட நோக்கில், மூன்று மாதங்களில் எல்லாம் செய்யப்படும் என்பது போன்ற ஒரு கடிதத்தைத் தயாரித்துக் கொண்டு சென்ற கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்மக்கள் முகத்தில் அறைந்தது போல அவர்கள் வழங்கிய கடிதத்தைக் கிழித்தெறிந்து அவர்களின் முகத்தில் வீசியுள்ளனர்.

வழமையில் காலம் கடத்துவதனூடாக தங்கள் அரசியலை நடத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முதன்முதலில் கிழித்தெறிந்த பெருமை கிழக்கு மாகாணத் தமிழ் மக்களையே சாரும்.

மூன்று மாதங்களின்பின் எல்லாம் செய்யப்படும் என்பது காலம் கடத்தும் கபட நாடகம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். வழமையில் இதுபோன்ற காலங்கடத்தலைச் செய்வதுதான் கூட்டமைப்பின் அரசியல் வியூகம்.

இங்கும் மூன்று மாத அவகாசம் என்பது, கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதில் இருந்து தவிர்த்து விடுகின்ற செயல் என்பது தெரிந்த விடயம்.

மூன்று மாத கால அசைவில் தேர்தல்கள், அரசியல் குழப்பங்கள் வந்துபோக இப்போது எதுவும் செய்ய முடியாது என்று கூறித் தட்டிக் கழித்துவிடலாமல்லவா.

எனினும் கூட்டமைப்பின் இந்த கபடத்தனத்தை கிழக்கு தமிழ் மக்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டு கடிதம் கொண்டு சென்ற கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்குத் தக்க பாடம் புகட்டியுள்ளனர்.

தமிழ் மக்களின் இச்செயலை உலகத் தமிழினம் வரவேற்றுள்ளது. இனி கிழக்கு மாகாணத் தமிழர்கள் அத்துரலிய ரத்னதேரர், ஞானசார தேரர், சுமணரத்ன தேரர் போன்றவர்களின் ஆதரவைத் தமக்குத் துணையாக்கிக் கொண்டு தங்களின் தாயகத்தை மீட்க அஹிம்சை வழிப்போராட்டத்தைத் தொடர வேண்டும். இதுவே கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற ஒரேவழியாகும்.

திருநீலகண்டன்

# அத்வைத நம்பிக்கை!

அத்வைதம் என்பது ஓர் உன்னத அனுபூதிநிலை. மனம், மொழி கடந்த அந்த அனுபவம் பேச்சுக்கும் விவாதத்திற்கும் உரியதல்ல.

மணிவாசகர் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் குருவாக வந்திருக்கும் இறைவனை பூரண சரணாகதியடைந்து குதிரை வாங்க கொண்டு வந்த பொருள் அனைத்தும் இறைவனிடம் காணிக்கையாக்கி அனுபூதி நிலையில் இருந்தார். இதை திருவாசகத்தில் காணலாம்.

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமையெல்லாம்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எமக்குண்டோ? எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே"

ஒருநாள் இராமகிருஷ்ணர் அறையில் நரேந்திரர் இருக்கும்போது அத்வைத கருத்துக்கள் பல குருவால் கூறப்பட்டது. சிறிது நேரத்தில் நரேந்திரர் வெளியில் வந்தபோது அவருடைய நண்பனிடம் இப்படிக்கூட இருக்க முடியுமா? பானை, பாத்திரம் நீங்கள், நான் காணும் அத்தனை பொருட்களும் இறைவன் இதை ஏற்றுக்கொள்ள முடியுமா



மாணிக்கவாசகர்

என கூறி இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அப்போது தெய்வீக பரவச நிலையில் இருந்த இராமகிருஷ்ணர் சிரிப்பொலிகேட்டு வெளியே வந்து நரேந்திரா என்ன சிரிப்பு என அன்புடன் நரேந்திரனின் உடம்பில் தொட்டார். அதன் பின்பு நரேந்திரர் என்ன நடந்தது என பிற்காலத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

ராமகிருஷ்ணர் என்னைத் தொட்டதும் என் மனதில் பெரிய ஒரு புரட்சியே ஏற்பட்டது. உண்மையில் இந்த பிரபஞ்சத்தில் இறைவனைத்தவிர வேறு ஏதுமில்லை என்பதை உணர்ந்து பிரமித்துப்போனேன். வீட்டிற்குச் சென்றேன். சாப்பிட உட்கார்ந்தேன். அங்கு தட்டு, உணவு, உணவு பரிமாறியவர், அத்தனையிலும் இறைவனே என்ற உணர்வுதான் என்னிடம் இருந்தது. சாலையில் செல்லும்போது வண்டிகள், வாகனங்கள் அதற்காகத் தான் ஒதுங்கவேண்டும் என்ற எண்ணம் கூட எனக்குத் தோன்றவில்லை! அந்த வண்டிகளும் நானும் ஒரே பொருளால் ஆனவை என்று எனக்குத் தோன்றியது. இப்படிச் சில நாட்களுக்கு அந்த உணர்வின் தீவிரமான ஆதிக்கத்தில் இருந்து என்னால் விடுபட முடியவில்லை. இறைவன் தான் அனைத்துமாக ஆகியிருக்கிறார் என்ற அந்த உணர்வு என்னிடம் சிறிது குறைந்த போது உலகம் ஒரு கனவுபோல் எனக்குத் தோன்றியது. மீண்டும் என்னுடைய இயல்பான நிலையை நான் அடைந்தபோது இதுதான் அத்வைத அனுபவம் என்று நினைத்தேன். அப்படியானால் சாஸ்திரங்களில் எழுதப்பட்டிருப்பது பொய்யல்ல என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. அதன் பிறகு அத்வைத தத்துவத்தின் முடிவுகளை என்னால் மறுக்க முடியவில்லை என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

வேகிற சோறு பானைக்கு சொந்தமில்லை, சுற்றும் மேகம் ஆகாயத்திற்கு சொந்தமில்லை, விளையும் பயிர் பூமிக்கு சொந்தமில்லை, தாகம் எடுத்தவன் தண்ணீரைத் தேடுவான், பசி எடுத்தவன் உணவைத்தேடுவான், வசதி உள்ளவன் சுகத்தை தேடுவான், பக்தி உள்ளவன் ஆண்டவனைத் தேடுவான், தன்னை அறிந்தவன் ஆன்ம ஈடேற்றம் காண்பான். -சிவனடியான்-






ம.கோபிநாத்,
SOS சிறுவர் கிராமம், அனுசம் இல்லம்,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

## விடுகதைகள்

- அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும். அது என்ன?

கரும்பு

- பாறைமேல் இட்ட விதை பார்ப்பவர் வியக்க முளைத்த விதை. அந்த விதை?

பல்

- மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையுது. அது என்ன?

நிலா

- நீரிலே கொண்டாட்டம், நிலத்திலே திண்டாட்டம். அது என்ன?

மீன்



**வந்தவர் :** என் மனைவிக்கு 'வீசிங்' ப்ராப்ளம் டாக்டர்

**டாக்டர் :** அதுக்காக ஏன் இவ்வளவு கவலைப்படுறீங்க

**வந்தவர் :** பாத்திரங்களை 'வீசி' எறியறாளே என் மேல

**டாக்டர் :** ???

## 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



# மெத்தப்படிப்பும்... உருகிய வெண்ணெயும்..

ஒரு ஊரில அண்ணன் தம்பி இரண்டு பேர்.

அண்ணனுக்கு படிப்பு வரலை. அதனால அவன் ஆடு, மாடுகளை வயலுக்கு அழைத்துச் சென்று மேய்க்கத் தொடங்கினான்.

தம்பி கெட்டிக்காரன். அவன் பள்ளிக்கூடம் சென்று படித்து வந்தான். வகுப்பிலும் அவன் தான் முதலிடம்.

அவர்களுடைய அம்மா பெரிய மகன் அலைந்து திரிந்து மாடுகளை மேய்க்கிறான் என்பதற்காக அவனுக்கு நல்ல சாப்பாடு, முட்டை, பால் எல்லாம் கொடுப்பார்.

தம்பி பாடம்தானே படிக்கிறான். அவனுக்கு அதிக உழைப்பு இல்லை என்பதால் அண்ணனுக்குக் கொடுப்பதை விட குறைவாகவே கொடுப்பார்.

ஒரு நாள் அவங்க வீட்டுக்கு ஒரு உறவுக்காரப் பாட்டி வந்தாங்க. அம்மா செய்வதைப் பார்த்து ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்க அம்மா கடினமான உழைப்பு மாடு மேய்ப்பவனுக்குத்தானே. படிப்பவனுக்கு அவ்வளவு சக்தி விரயமாகாது என்றாள்.

பாட்டி சொன்னாங்க பெரியவன் மாடுகளை வயலில் அவிழ்த்து விட்டு விட்டு நன்றாக மரத்தடியில் படுத்துத் தூங்குகிறான். அவனுக்கு எந்தக் கவலையும் இல்லை.

ஆனால் படிப்பவனுக்குத்தான் அதிக உழைப்பு தேவைப்படும்.



பாடங்களைப் படிக்கவும் எழுதவும் மனனம் செய்யவும் பரீட்சைக்குத் தயாராகவும் என இவனுக்கு வேலை இருந்து கொண்டேயிருக்கும். மேலும் பள்ளியில் பல போட்டிகளில் கலந்து கொள்ளவும் செய்கிறான்.

இப்படி படிக்க, விளையாட என அதிக சக்தி தேவைப்படும். படிப்பது என்பது சுலபமல்ல என்று கூறினாள். இதைச் சோதித்துப் பார்க்க அம்மாவுக்கு ஒரு உபாயமும் சொன்னாள்.

இரவு தூங்கும் போது இருவரின் தொண்டைக்குழியிலும் ஒரு உருண்டை வெண்ணெயை வைக்கச் சொன்னாள்.

மறுநாள் காலையில் எழுந்து பார்த்த போது மாடு மேய்க்கும் பெரியவனின் தொண்டைக் குழியில் வெண்ணெய் அப்படியே இருந்தது. படிக்கும் சின்னவனின் தொண்டைக் குழியில் வெண்ணெய் உருகி விட்டிருந்தது.

பாட்டி சொன்னாள் 'படிப்பவனுக்கு எந்த நேரமும் அதே சிந்தனை, கவலை, பயம். அதனால் உடல் சூடாகி வெண்ணெய் உருகி விட்டது.

ஆனால் மாடு வீட்டுக்கு வந்த பிறகு மறுநாள் வரை பெரியவன் கவலைப்படுவதில்லை.

எனவே அவன் உடல் குளிர்ச்சியாக இருக்கிறது. எனவே தான் வெண்ணெய் உருகவில்லை.

அம்மா புரிந்து கொண்டு படிக்கும் சின்ன மகனுக்கும் நல்ல உணவு, பால், பழம் எல்லாம் தரத் தொடங்கினாள்.

குட்டீஸ் படிப்பதாலும் விளையாடுவதாலும் வீணாகும் சக்திக்கு ஈடுசெய்ய நீங்கள் நல்ல சத்துள்ள உணவைச் சாப்பிடப் பழகனும். காய்கறிகள், கீரை வகைகள், பழங்கள் பால் எல்லாம் சாப்பிடனும்.

சில குட்டீஸ் காய்கறிகளே சாப்பிட மாட்டாங்க. சிலபேர் பால் வாசனை பிடிக்காதுன்னு நோ சொல்லிடுவாங்க.

சில குட்டீஸ் சாப்பாடு சாப்பிடாம ஒன்லி 'நொறுக்ஸ்' "ஸ்நேக்ஸ்" மட்டும் சாப்பிடுவாங்க. வெறும் ஸ்நேக்ஸ், சாக்லெட்ஸ், பிஸ்கட்ஸ் மட்டும் சாப்பிடுதலும் பெப்ஸி, கோக் மட்டுமே அடிக்கடி குடிப்பதும் தப்பு.








**பில்லி சூனியம் அறிவு ரீதியாக ஏதும் நிரூபிக்கப்பட்டதா?**

**ஆழமாக அன்பு செலுத்திவிட்டு விட்டுச் செல்லும் நண்பர்கள் பற்றி?**

**கூட்டில் அடைக்கப்பட்டிருந்த கடி நாயை வெளியே விட்டால் என்ன நடக்கும்?**

வசந்தன் — அல்வாய்

**ஆழமாக அன்பு செலுத்திவிட்டு விட்டுச் செல்லும் நண்பர்கள் பற்றி?**

அன்பை புரிந்து கொள்ளாமல் வார்த்தை களைக் கொட்டி இதயத்தை காயப்படுத்தும் ஜீவன்கள் அதிகம். ஒருவிட்யம் எதற்காக நடக்கிறது. அது நடந்தால் அதன் விளை வுகள் எப்படி இருக்கும் என்றெல்லாம் அறிவ தில்லை. ஏதோ எமக்குத்தான் சோகம், கவலை இருக்கிறது, மற்றவருக்கு இருக்காது என்று இதயத்தை வார்த்தைகளால் நொருக்கி விடுகிறார்கள்.

கோகிலன் — வரணி

**பில்லி சூனியம் அறிவு ரீதியாக ஏதும் நிரூபிக்கப்பட்டதா?**

ஒருவர் தேங்காயை வைத்து சூனியம் இரு க்கா? இல்லையா? என்று உருட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் கை நழுவி தேங்காய் கீழே விழுந்து விட்டது. கீழே விழுந்த தேங்காய் உடைய உள்ளிருந்த எலி ஒன்று பாய்ந்து சென்றது. தேங்காயை உருட்டியது சூனியமா? எலியா? தேசிக்காயை வெட்டும் கத்தியில் செவ்வரத்தம் பூவை நன்றாகத் தேய்த்து விட்டு வெட்டினால் இரத்தம் வழிந்தோடுவது போல இருக்கும். இதிலும் விஞ்ஞானம் இருக்கிறது.

தமிழ் — பருத்தித்துறை

**முல்லைத்தீவு பறிபோகுமோ?**

போச்சுது போச்சுது எல்லாம் பறிபோச்சுது. பிள்ளையார் கோவிலை ஒருபக்கத்தால் புத்தர் ஆக்கிரமிக்கிறார். கடல் வளங்களை தென் பகுதி மீனவர் சூறையாடுகிறார்.

குடியேற்றம், காடழிப்பு எல்லாம் தாராளமாக நடக்கிறது. தடுப்பார் யாருமில்லை, பறி போகா மல் என்ன நடக்கும். இதுமட்டுமல்ல என்னம் என்னம் பறிபோகும் கவனம்.

கலை — மிருசுவில்

**ஒரு பெண்ணைப் பிடித்து விட்டால் காதல் சொல்வதில் என்ன தவறு?**

எந்தத் தவறும் இல்லை. அதற்கு முன் காத லைச் சொல்லும் உனக்கு திருமணம் ஆகி இருக்கக் கூடாது.

அதிலும் மிக முக்கியமானது உனக்குப் பிடி த்த அந்தப் பெண்ணுக்கு திருமணம் முடிந் திருக்கக் கூடாது.

இந்த இரண்டில் ஒன்று பிசகினாலும் தம்பி யைப் புரட்டி எடுப்பார்கள். தம்பி கவனம்.

செல்லா — மானிப்பாய்

**மனைவிக்குப் பயப்படாத கணவர் என்று யாரும் உண்டோ வியாசரே?**

என்னதான் காட்டுக்கு ராஜாவாக இருந்தாலும் சிங்கம் மனைவியிடம் அசிங்கப்பட்டுத்தான் ஆகணும்.

இது ஆண் இனத்துக்கான விதி என்பதை விட வேறில்லை.

இரண்டு இலட்சம் பணத்தை தொலைத்து விட்ட போது வராத கிறுகிறுப்பு மனைவியின் இரண்டு மிஸ் கோல் கொண்டு வருகிறது என் றால் ஆண் இனம் என்ன டிசைனோ தெரியலபா சாமி.

சுதன் — குப்பிளான்

**கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமா?**

காணும் காணும். எத்தினை பொங்கல் வந் திட்டு, எத்தனை புதுவருடம் வந்திட்டு, எத்தனை நத்தார் வந்திட்டு, எத்தனை தரம் நாசமறுத் தாச்சு. ஆனாலும் அந்தத் தீர்வு வரவில் லையே. இந்த இலட்சணத்தில இனியும் தீர்வு வரும் எண்டு நம்பிக் காத்திருக்க உங்களுக்கு (தமிழருக்கு) வெட்கம், ரோசம், சூடு, சுறனை ஏதும் இல்லையோ?

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

தருண் — யாழ்ப்பாணம்

**பொல்லாத விசமுள்ள பாம்புகள் ஊருக்குள் வரத் தொடங்கிவிட்டதே?**

பரமசிவன் கழுத்திலிருந்து கருடனைப் பார்த்து சௌக்கியம் கேட்ட பாம்புகள் இப்போது தான் இறங்கி ஊருக்குள் வருகின்றன. அடுத்த தென்ன. அடித்து முடிக்க வேண்டியது தானே. அடிக்க முடிவெடுத்தால் ஒரே அடி அதுவும் தலை அடியாக இருக்க வேண்டும்.

அதை விடுத்து வால் பக்கம், வயிற்றுப் பக்கம் என்று அடித்தால்...

“அடிபட்ட பாம்பு கடிக்காமல் விடாது” கவனம்.

யோன்சன் — ஸ்கந்தபுரம்

**அவசரகால சட்டம் நீக்காதது ஏன் வியாசரே?**

அவசரகாலச் சட்டம் பாராளுமன்ற அனுமதியு டன் அரங்கேறியது. நாட்டில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்காக சடுதியான நடவடிக்கைகள் தேவை என்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.

அதற்கு முதலில் கைதூக்கியது நமது கூட்ட மைப்பு. இப்போது அதை நீக்கவில்லை. ஏன் என்று கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் விதி.

வருமுன் தெரியாமல் ஆதரவு கொடுப்பது, வந்த பின்பு என்ன செய்வது என்று தெரியாது முழிப்பது. இது அன்றிலிருந்து இன்றுவரை நடக்கிறது.

ஜபா — கரவெட்டி

**விக்னேஸ்வரனுடன் கஜேந்திரகுமார் சேர்ந் தால் விடிவு கிடைக்குமா?**

துரோகிகளை அடித்து வீட்டுக்கு விரட்டி விடலாம் என்பதை விட வேறு எதையும் செய்து விட முடியாது. ஏனென்றால் எமக்கான தீர்வைத் தர பேரினவாத அரசும் தயாராக இல்லை. தீர்வை கொடு என்று பெற்றுத்தர சர்வதேசமும் தயரா யில்லை. இந்த இலட்சணத்தில் எப்படி தீர்வைப் பெறமுடியும். ஒன்று எமது ஒற்றுமையில் பல த்தை, எம்மை ஏமாற்றி பிழைப்பவர்களுக்குக் காட்டலாம்.

திகழன் — யாக்கரு

**பேரினவாத அரசை நம்பலாமா?**

அடப் போங்கடா எனக்குப் படிப்பிச்ச வாத்தி அடிக்கடி சொல்லும் ‘‘மேற்கால வெளிக்கு மென்று பிடரியைச் சொறிந்து கொண்டு நில்லுங்கடா ’’ எண்டு! அது இப்ப மட்டு மில்லை தந்தை செல்வா காலத்திலி ருந்து தமிழருக்கு நல்லாப் பொருந்துது.

என்னமோ எம்மை ஏமாற்றி எம் ஓட்டுக்களை வாங்கியவர்கள் எமக்குத் தந்த வாக்குறுதி யில் ஒன்றைக் கூட இன்னும் செய்யவில்லையே அதை நினைக்கும் போது நெஞ்சு வெடிக்கிது.

இனியவன் — அல்வாய்

**கூட்டில் அடைக்கப்பட்டிருந்த கடி நாயை வெளியே விட்டால் என்ன நடக்கும்?**


வீதியில் போகிறவர் வருகிறவர்களை எல்லாம் கடித்துக் குதறும். நாய்க்கு ஊசி போட்டிருந் தால் எமக்கு ஊசி குறையும். போடவில்லை என்றாலோ எங்களுக்கு ஊசி கூடும்.

அதைவிட 25 நாட்கள் அந்த நாய் உயிருடன் இருக்கிறதா என்று பார்க்கும் வேலை வேறு எமக்குண்டு. அதனால் அந்த கடி நாய்களை கூண்டில் வைத்திருப்பதே நன்று.

## காத்திருப்பு

பகலைத் துரத்திய
பட்டாடித்தோடு வானம்
மின்மினிகளின் மென் ஒளியில்
மேகங்களோடு மோகம் தணிக்கையில்
நான் உன்னை நினைக்கின்றேன்...
என் இதயவறையில்
உதயமாயிருந்த நேசமலரின்
ஒவ்வொரு சிற்றிதழும்
ஆயுள் தீர்ப்புக்காக
அர்ப்பணிக்கப்பட்ட பின்பு
மீதமிருப்பது
நேசமலரை நிமிர்த்தி வைத்திருந்த
நெட்டித் தண்டுதான்
நீண்ட தொலைவிலிருந்து
நான் வரைகின்ற
இந்தப் பாசமடல்கள்
உன்வசம் கிட்டாமல் போகலாம்
எனினும்
பூங்கனிச்சோலையில்
தேன் வண்டாய்
என் இதயவறையில் நீயிருக்கின்றாய்
உனை நிமிர்த்தி வைத்திருந்து
நெட்டித்தண்டு
இன்றுவரை அகற்றப்படவில்லை
உயிரே
மீண்டுமொரு மொட்டவிழ்வுக்காய்
சிறையில் காத்துக்கிடக்கிறது
ஆயினும்
அந்த மொட்டவிழ்ப்பு
நீயும் நானும் எதிர்பார்த்துள்ள
நாளைய பொழுதின்
நீண்ட நிமிடத்தில்
நிச்சயம் நிறைவேறி
நிறைந்தவாசம் வீசும்!

விவேகானந்தனூர் சதீஸ் கிளிநொச்சி




## அரசியல் பிழைத்தோர்க்கு

பாட்டுடைத் தலைவன் எனும்
பதவி வேண்டாமே!
ஆட்டு மந்தைக் கூட்டத்தின்
தலைமை வேண்டாமே!
கூடும் கூட்டத்தில்
முதன்மை வேண்டாமே!
போடும் மாலைக்கு
தலைநீட்ட வேண்டாமே!
கொடுத்த வாக்குறுதிகளை
மறந்திட வேண்டாமே!
கொட்டும் பணத்தைத் தேடி
அலைந்திட வேண்டாமே!
எடுத்த எடுப்புக்கெல்லாம்
ஆட வேண்டாமே!
ஏன் என்ற கேள்விகளை
கேட்காதிருக்க வேண்டாமே!
மக்கள் குறைகளைக் காணாது
இருக்க வேண்டாமே!
அவர் குறைகளைச் சொல்வோரை
கோபிக்க வேண்டாமே!
மக்கள் குறைதீர்க்காத
பதவி வேண்டாமே!
பகுத்தறிவில்லாது
நடந்திட வேண்டாமே!
பொல்லாத கதைகளைப்
பேசிட வேண்டாமே!
இதையும் கொஞ்சம்
கவனித்துக் கொள்ளலாமே!
ஏகும் காலத்தில்
அரசியல் வேண்டாமே!

மாவை. நா.கஜேந்திரன்

## போதையில் உலகம் புரளுது பார்



போதையின் பாதையில்-இன்று
புதைகுழிக்கு போகின்றதே
புரிந்துகொள்ள யாருமின்றி
புன்னகைத்தும் அழும்கூட்டம்
சுயநினைவிழந்து-தினம்
சுற்றங்களைத்தான் மறந்து
தள்ளாடும் மனிதம் இங்கே
தலைநிமிர்வதுதான் எப்போது
கசிப்பு உலாவியது அன்று
கஞ்சாவும் வருகிறது இன்று
அருந்தவோ மனம்தான் இல்லையே
ஆசைதான் விடுவதாயில்லை
உயிர் ஊசலாடுகின்றதே
உறவுகள் கதிகலங்கி நிற்குதே
கனத்த இதயமது-இன்று
கனவுலகம் போனதேனோ

தனா. தெல்லிப்பழை

## மனிதன்

ஆறு அறிவு உடையவன்
ஆறாத மனமும் அளவற்ற
ஆசைகளையும் கொண்டவன்
காலத்தை வென்றவன்
உலகில் காலனை வெல்லாதவன்
அன்பு எனும் பிணைப்புக்கு
கட்டுப்பட்டவன்
வாழ்க்கை எனும் நரகத்தில்
முட்டப்பட்டவன்
விலங்குக்குணம் உள்ளவன்
இவனை எண்ணற்ற எத்தனை
வரிகளைக் கொண்டும்
இலகுவில் விளக்க முடியாது
அவன்தான் மனிதன்

த.மயூரதன், இணுவில்

## குப்பிவிளக்கு

ஏழைக்குடியின் கூழைக்குடிக்க
தோழைக்கொடுத்து
துவண்டுபோகும்
ஓலைக்குடிசையின்
எழில்மிகு அரசியே
கூழைக்குடித்து கண்ணை விழித்து
கல்வியைத் தொடரும்
கவிமான்களின்
கறைபடியா கடவுளே!
கண்டங்கள்தோறும்
கரண்டைக் கண்டாலும்
இடர்கள் கண்ட இடமெல்லாம்
இல்லங்கள் தோறும் இருள் அகற்றி
எம் இல்லத்து அரசியே
(குப்பி) எம் விளக்கு....

கிளியூர் எஸ்.கே. இசை

## மௌனத்தின் தேடல்- 452



## மனநலம் (வாழ்வைத்தேடி)

வீட்டிற்கு அடி
அத்திபாரம் போல்
மனிதர்களுக்கு
இளமைப்பருவம்
ஐந்தில் வளையாதது
ஐம்பதில் வளையுமா!
இக்கூற்றானது
இதையே இயம்பும்
மனிதமேம்பாட்டிற்கு
மனநலமானதென்றும்
இன்றியமையாதது
கல்வியைப் போன்று
சிறுவர் நலம் காக்க
பெரு முயற்சி தேவை

க.நாகராசா
நுணாவில்

## மௌனத்தின் தேடல் -453



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.07,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

## வாழு எழு

குளிர்தேசம் பிறந்தனையோ
குளிர் தரு ஆதவனின் வெம்மை
தளிர் உடலில் படவில்லையோ
தாய் தந்தை யாரும் உனைத்
தாங்குவதற்கு வரவில்லையோ
வாய்ப்பிருக்கு எதிர்காலம்
வாழு எழு ஏடு எடு நாடு
தாய் தமிழை நேசியதைப் பூசி

த.சிவகாமி
நல்லூர்

## கைவிடப்படும்

தாய்ப்பாசம் இயற்கையானது
தந்தையின் பாசம் பண்பாட்டின்
பரிணாமம், ஆனால் படைத்த
இறைவனோ பற்றற்றவன்!
பிரிவும் துயர்களும் விதியின்
விளையாட்டு! கருணையே
கடவுளாக கடமையைச்
செய்து வாழ்ந்த முன்னோர்கள்
காமக் கொடூரச் சிந்தனைகளால்
கைவிடப்படும் சிறார்கள்

இ.ஜெ.பாலன்

## இதுவா வாழ்வு

அழுவதற்குக் காரணமென்ன
அன்னை தந்தை விடுத்தனையோ
பழுதுவரா எதிர்காலம்தனை
பாரினுக்கு உணர்த்தலையோ
பொழுது இருண்டு விடிவதுபோல்
பூமிதனில் இன்ப துன்பம்
எழுந்து நிமிர் இதுவா வாழ்வு
காமி உன்னுள் கருத்து காரமுண்டு

வைகுதன்
கொக்குவில்

## புறப்படடா கண்ணே

காதருகில் கையணைத்து
கதறும் வேட்டொலியோ கவலை
பாதகரோ பச்சிளம் யாரார்
பாதகத்தை விளைப்பர்
ஆதரவே தரா ஆருமிலை என
அவசர முடிவெடுத்திடாதே
போர் முடிந்தும்
புலரவில்லை வாழ்வு
புரட்சி செய்யப்
புறப்படடா கண்ணே

வாகை வளவன்
நாரந்தனை

## அதனாலென் அறிவு ஒளி பெறவே...

எதற்குச் செல்லம்
அழுகின்றாய்
ஏற்பதற்கு
உணவில்லையா
பதமான இளம் பருவத்தில்
பெற்றோரை இழந்தனையா?
இதமான
எதிர்காலம் இனும்
இயற்கை உனை
ஏற்கலையா?
அதனாலென் அறிவு
ஒளி பெறவே
ஆங்கு கல்வி பெற
எழுந்திடடா

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்

## எந்தவகை அநாதையோ?

தம்பி! உன் அழுகைக்கு
காரணம் என்னவோ
சுனாமி காவிச்
சென்றது என்றும்
ஆகாயவழி குண்டுத்
தாக்குதல் என்றும்
தற்போது ஆலயத்
தாக்குதல் என்றும்
ஐயகோ பல வகையிலும்
அநாதையாக்கப்பட்ட
சிறுவர்களில் நீ
எந்தவகை
அநாதையடா தம்பி
கலங்காதே...
காலங்கடந்து செல்லட்டும்
உன் கவலை மாறட்டும்

அபிகுலமாலிகா
சங்கானை

## மகனே நீ

கண்ணீர் விட்டோம்
கதறியழுதோம்
கவலைகள் தீரவில்லை
காலம்தான் வீணானது
அழுவதலாவதிங்கே
ஆவதென்றுமில்லை
மகனே நீ அழுவதை மறந்துவிடு
அடுத்து நடப்பதை
நினைத்துவிடு
கலங்கியழுது கண்ணீர்விட்டு
கவலையைக் காட்ட இதுவா நேரம்
காலம் ஒருநாள் மாறும் அங்குன்
கவலைகள் யாவும் தீரும்
எதையும் தாங்கும்
இதயமிருந்தால்
ஏற்றம் வாழ்வில் என்றுமுண்டு

சி.திவ்வியா
யா/ப.மெ.ம.வி.



# நிலைகெட்ட வாழ்வதிலே...

இனி மல்லிகா வரமாட்டாள். காந்தனுக்கு நன்றாகவே புரிந்து விட்டது. தினமும் மனைவி மல்லிகாவைத் திட்டித் தீர்ப்பது காந்தனின் அன்றாடக் கடமைகளென்றாகி விட்டன. நினைத்த நேரமெல்லாம் அடி உதைகள், அவளை வீட்டை விட்டு விரட்டியடிப்பது வாராந்தக் கடமைகளிலொன்று என்றொரு எழுதப்படாத சட்டத்தை உருவாக்கியிருந்தான்.

அவளும் தாய் வீடு போவாள். ஒருநாள் அங்கே தங்குவாள். மறுநாள் மீண்டும் கணவனிடம் திரும்பி விடுவாள். இப்போதும் அதுபோலவே அவள் வருவாள் என்று மனப்பால் குடித்தவனுக்கு பெரியதொரு ஏமாற்றமாகிவிட்டது. மாதம் ஒன்றாகிவிட்டது. மல்லிகா தன் தாய் வீடே தஞ்சமென அங்கேயே முகாமிட்டுவிட்டாள்.

திருமணம் முடித்து இரண்டாண்டுகளில் அவள்பட்ட வேதனைகள் சொல்லிமாளாதவை. அடி உதைகளைத் தாங்கினாலும் அவளை அடிக்கொருதடவை மலடி என்று திட்டுவதை அவளால் தாங்க முடியாமலிருந்தது.

அவளில்லாத வீடு வெறிச்சோடிக் கிடந்தது. அவன் கூறுவது போல மல்லிகா மலடியாகியிருந்தாலும் கூட அவளுடன் வாழ்ந்த அந்த இரண்டாண்டுகளில் வீட்டில் துலங்கிய பரிமளிப்பும் இலட்சுமி கரமும் இப்போது எங்கே ஓடி ஒளிந்து கொண்டனவோ.

மாலை ஐந்து மணிக்கு அலுவலகத்திலிருந்து வீடு திரும்பினால் ஒரு பேச்சுத் துணைக்குக் கூட யாருமேயில்லாத ஒரு சூன்யமான நிலைமை.

வீட்டுச் சுவர்களில் வரிசையாக மாட்டப்பட்டிருந்த எழில் கொஞ்சும் மழலைகளின் படங்களைப் பார்த்து ரசிப்பதிலேயே கணிசமான நேரம் கழிந்துவிடும். பட்டு மேனியில் பால்வடியும் முகங்களில் பொக்கைவாய் சிரிப்பில் அந்தக் குழந்தைகளின் அழகை எத்தனை தடவைகள் பார்த்தாலும் அவனுக்குச் சலிப்பதில்லை.

இயல்பாகவே குழந்தைகள் மீது அலாதிப்பிரியம் கொண்டவன் தான் காந்தன். தனக்கொரு குழந்தை கொஞ்சி விளையாட இல்லை. ஏன் தனக்கென ஒரு வாரிசுகூட இல்லாமற் போய்விட்டதே! இந்த இலட்சணத்தில் குடும்பமாவது கத்தரிக்காயாவது! மல்லிகாவுடன் ஏற்பட்ட விரிசலுக்கு அடிப்படைக் காரணமே இதுதான்.

ஒரு மலடியைத் திருமணம் செய்திருந்தபடியால் தான் இத்தனை விபரீதங்களும். இல்லையெனில் மகிழ்ச்சியாகவே வாழ்ந்திருக்கலாம்.

திருமணம் முடித்த புதிதில் மல்லிகா நறுமல்லிகையாக நறுமணம் பரப்பினாள். நாளடைவில் அந்த மல்லிகைப்பூ ஒரு மாம்பூவின் வாசனையைக் கூடக் காந்தனுக்குக் கொடுத்திருக்கவில்லை. அவர்கள் திருமணப் பொருத்தம் பார்த்திருந்தும் இப்படியாகிவிட்டதே! புத்திரபாக்கியம் உத்தமம் என்று தானே சண்முகம் சாஸ்திரியார் உறுதி கூறியிருந்தார். அப்படியிருந்தும் ஏனிந்தச் சோதனை!

தாய்வீடு சென்றவள் தாயுடனே இருக்கட்டும். இனி அவள் தன்வழி. இவன் தனிவழி. காந்தனுக்கு வயது இருபத்தெட்டுதான் ஆகிறது. இளமை உணர்ச்சிகள் பொங்கிப் பிரவாகிக்கும் பருவம். அதற்கு ஒரு வடிகால் வேண்டும்.

அதுமட்டுமல்ல இப்படியே தனிமரமாக வாழ்ந்தால் அவனுடைய அந்தஸ்துக்கு இழுக்கு ஏற்பட்டு விடும் அபாயம். எல்லாவற்றிற்கும் மேலாக அவனுக்குக் குழந்தைப் பாக்கியம் வேண்டும். மறுமணம் செய்வது ஒன்றும் கடினமான காரியமல்ல. அவனுடைய தாலியைச் சுமந்து தாரமாகிவிட்டாள் சுகன்யா. காலங்கள் கடுகதி ரயிலாக ஓடியது.

மல்லிகா ஒரு பேரழகி என்றால் அது அபத்தம். சாதாரண ஒரு அழகியென்றால் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கல்வி ஒழுக்கங்களிலும் சும்மா சொல்லக்கூடாது. அவளுக்கு உயர்புள்ளிகள்தான். அவளுக்கும் வயது அதிகமில்லை. இருபத்து மூன்றுதான். வாழ வேண்டிய வயது.

ஆனாலும் செத்தவன் மனைவியைக் கட்டினாலும் விட்டவன் மனைவியைக் கட்டக் கூடாதென்னும் புரையோடிப் போன முதுமொழி புதிய வாழ்க்கையை அமைக்கத் தடைக்கல்லாயிருந்தது. திக்கற்றவனுக்குத் தெய்வம் துணை செய்யுமாம். தெய்வம் துணை செய்தது மல்லிகாவுக்கு.

மனோரம்மியமான அழகுடன் மாசில்லா ஒழுக்கத்துடன் மனோகரன் மல்லிகாவின் மணவாளன் என்னும் உரிமையைப் பெற்றுவிட்டது ஒரு யோகம்தான். கூடவே உத்தியோகமும் அவனுக்கு இருந்தது. காலங்கள் ஓடி ஓடி மூன்று வருடங்கள் மறைந்து கொண்டன.

இன்டைக்கெண்டாலும் அந்த டொக்டரைப் பார்த்துச் செக்கப் பண்ணோணுமெண்டால் இந்தப் பஸ் இப்போதைக்கு வெளிக்கிடாது போலை இருக்கு.

காந்தன் அவசரப்பட்டு எரிச்சலடைந்தான். பஸ் நிலையத்தை விட்டு இன்னமும் பஸ் நகரவில்லை. மல்லிகாவை அன்று மலடி என்றான். இன்றும் மூன்று வருடம் சுகன்யாவுடனான வாழ்க்கையிலும் காந்தனுக்கு இன்றுவரை பிள்ளைச் செல்வம் கிடைக்கவேயில்லை. இப்போது தன்னைப் பரிசோதித்துப் பார்க்கவே கிளம்பியிருந்தான்.

தனித்து நின்ற பஸ் வண்டியில் தனித்து ஒரு குழந்தை சுதந்திரமாக ஓடி விளையாடிக் கொண்டிருந்தது. மூன்று வயது மதிக்கலாம். அழகான குழந்தை. தாய் மடியை விட்டிறங்கிக் குறும்புகள் செய்தபடி காந்தனின் இருக்கையை நெருங்கியது. அட! என்ன அழகு! ஆசையை அடக்கமுடியாது குழந்தையை வாரியணைத்து ஆசை தீர முத்தமிட்டான்.

குழந்தையின் தாயானவள் இப்போதுதான் விழித்துக்கொண்டாள் போலும். மடியில் தூக்கி வைத்திருந்த ஆறுமாதக் குழந்தையுடன் ஓடோடி வந்து அந்தக் குறும்புக்காரக் குழந்தையை அழைத்துச் சென்றாள். இப்போது தான் காந்தன் அவளைக் கவனித்தான். அவள் வேறு யாருமல்ல மலடி என விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் மனைவி மல்லிகா. இனி அவனுக்குப் பரிசோதனை தேவைப் படாது. பஸ்ஸை விட்டிறங்கினான் மெல்ல.

(யாவும் கற்பனையே)

மிருசுவில் தமிழ்தாசன்
மீசாலை கிழக்கு, மீசாலை

சிறுகதை

# சபதம்

உச்சி சுடும் மதிய வெயிலில் உழைத்துக் களைத்த அலுப்போடு வந்த தணிகாசலம் கிணற்றடிக்குச் சென்று முகத்தினைக் கழுவிக்கொண்டு தோளில் கிடந்த துண்டினால் முகத்தைத் துடைத்தவாறு வந்த தணிகாசலத்திற்கு அவரது மனைவி பார்வதி கொடுத்த தேநீரைப் பருகியபடி பார்வதி நந்தன் எங்கே போயிற்றான். வேலை வெட்டி ஒன்றுமில்லாமல் இப்பிடியே ஊர்சுற்றிக் கொண்டு திரியட்டும். எல்லாம் என்ர தலைவிதி எனப் பெருமூச்சுவிட்டார் தணிகாசலம்.

இரண்டு பெண் பிள்ளைகளுக்குப் பிறகு நந்தன் பிறந்தான். இதனால் அவன் மீது அளவு கடந்த பாசத்தை வைத்திருந்தாள் பார்வதி. தனது கணவர் நந்தனைப் பேசும் போதெல்லாம் ஊசியால் குத்துவது போல் பார்வதியின் இதயம் வலிக்கும். இருந்தும் தன் கணவர் சொல்வதிலும் நியாயம் இருப்பதை உணர்ந்ததனால் மௌனமாகவே நின்றாள்.

தனது படிப்பிற்கு ஏற்ற வேலை தேடிக்கொண்டு குடும்பத்தில் பொறுப்பில்லாமல் திரியும் மகனைப் பார்க்கும் போதெல்லாம் பார்வதிக்கு வேதனையாகவே இருக்கும். எப்படியாவது தனது பெண்பிள்ளைகளைக் கரைசேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு வயசானகாலத்திலும் ஊண், உறக்கமின்றி அயராது உழைக்கும் கணவனின் பரிதாபநிலையை நினைத்தபோது பார்வதியின் விழிகளில் கண்ணீர் சொட்டியது.

"பார்வதி நந்தன் வந்தால் தோட்டப் பக்கம் வரச்சொல்" என அவளது மௌனத்தைக் கலைத்தார் தணிகாசலம். பார்வதியும் ஓர் தடுமாற்றத்தோடு முந்தானைச் சேலையால் கண்ணீரைத் துடைத்தப்படி "ஓம்" சொல்லுறன் என்றாள்.

" நந்தன் எதற்காக நீங்கள் என்னை வெறுக்கிறீர்கள் என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" எனப் பூவிழி கேட்டாள். நந்தனும் பூவிழியும் உயர்தரத்தில் கலைப்பிரிவுத் துறையில் ஒன்றாகப் படித்தவர்கள். படிக்கும் காலத்தில் இருந்தே பூவிழி நந்தனைக் காதலித்து வந்தாள். நந்தனும் அவளை விரும்பினான். ஆனால் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தனது காதலை மனதிற்குள்ளேயே போட்டுப் புதைத்தான்.

பூவிழி பணக்கார வீட்டுப்பெண். மாளிகையில் வாழ்ந்தவளை மண்குடிசையில் வாழவைக்க அவன் விரும்பவில்லை. "பூவிழி எனக்கு குடும்பப் பொறுப்புகள் இருக்கிறது. எனக்கு மூத்த சகோதரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்லதொரு வாழ்வை அமைத்துக்கொடுக்கும் வரை எனது வாழ்வைப் பற்றிச் சிந்திக்கமாட்டேன். நானும் ஒரு தொழிலும் இல்லாமல் இருக்கிறன். எனக்காக காத்திருந்து நீ உன் வாழ்வை அழிக்கவேண்டாம் எனக் கூறினான் நந்தன்.

நந்தன் கூறியதைக் கேட்டு பூவிழி ஏதோ சொல்ல வாயெடுத்த போது " பூவிழி நீங்கள் எனக்கு எதுவும் சொல்ல வேண்டாம்" எனக்கூறியபடி சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்றான் நந்தன். அவன் செல்லும் வழியினைப் பார்த்தபடி விழிகளில் நீர்வடியத் திகைத்து நின்றாள் பூவிழி.

வீடு சென்ற நந்தன் தனக்கு அதிர்ச்சி தரும் சம்பவம் நடந்ததை அறிந்திருக்க வில்லை. தணிகாசலம் மாரடைப்பு நோயினால் படுக்கை யில் கிடந்தார். தங்கள் குடும்பத்திற்காக தன்னையே மெழுகாய் உருக்கி உழைத்த நடமாடும் தெய்வம் பாயில் படுத்திருப்பதைப் பார்த்ததும் குளறி அழுதாள்.

"இனி நாங்கள் என்ன செய்வது. என்ர இரண்டு பிள்ளைகளையும் எப்படி வாழ வைப்பது" எனப் புலம்பி அழுதாள் பார்வதி. தாயின் வார்த்தைகள் அம்புபோல் மனதைத் தைக்க மனதில் ஒரு வேகம் பிறந்தவனாய் தாயின் விழிகளில் வழிந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு "அப்பா இவ்வளவு காலமும் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்குமென்ற நம்பிக்கையில் உங்களைக் கஷ்டப்படுத்தி விட்டேன். என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்" எனத் தந்தையின் கரங்களைப் பிடித்து அழுதுவிட்டு எங்களைப் போன்ற ஏழைகளின் ஆசையெல்லாம் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதைப் போன்றது என நினைத்தபடி மனதில் ஒரு உறுதியெடுத்தவனாக மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு தோட்டப்பக்கம் செல்லும் மகனைப் பார்த்ததும் தணிகாசலத்திற்கு மீண்டும் புத்துயிர் பெற்றதைப் போன்று முகத்தில் புத்தொளி வீச மனைவியைப் பார்த்து புன்னகைத்தார் தணிகாசலம்.

மா.செழியன்
வேலணை-03

# சிரச்சேதத்திற்கு காத்திருக்கும் சிறுவன்

# ‘அரக்க தேசமான’ அரபு தேசம்

உலகில் 106 நாடுகளில் மரண தண்டனை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. மரண தண்டனை நடைமுறையிலிருக்கும் 56 நாடுகளிலும் அதை ஒழிப்பதற்கான விவாதங்கள் நடந்து வருகின்றன. இப்படியான சூழலில், 10 வயது சிறுவனாக இருந்தபோது அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக, மூன்று ஆண்டுகள் கழித்து அந்தச் சிறுவனை கைது செய்தது சவுதி அரேபிய அரசு.

இப்போது அந்தச் சிறுவனுக்கு 18 வயது நெருங்கும் நிலையில், அரசுக்கு எதிராகப் போராடிய குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்க தீர்மானித்திருக்கிறது சவுதி அரேபியா. அந்த நாட்டில் சிறுவர்களுக்கு மரண தண்டனை விதிக்கச் சட்டத்தில் இடம் இல்லை என்பதால், 18 வயதாகும் வரை காத்திருந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கூறுகிறது அந்த அரசு. அதற்காக உலகம் முழுவதும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

கடந்த 2011ஆம் ஆண்டு சவுதி அரேபிய அரசுக்கு எதிராக ஷியா முஸ்லிம் பிரிவினர் க்வெய்ஃப் மாகாணத்தில் போராட்டம் நடத்தினர். அப்போது 10 வயது சிறுவனாக இருந்த முர்டாஜா க்வெரிரிஸும் விளையாட்டுத்தனமாகப் போராட்டத்தில் கலந்துகொண்டான். அந்தப் போராட்டம் நடந்தபோது அரசு தரப்பு தாக்குதலில் சிறுவனின் அண்ணன் அலி கெவெரிரிஸ் கொல்லப்பட்டான். தொடர்ந்து, போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறித்து உளவுத்துறை மூலம் துப்பறிந்து, நடவடிக்கை எடுத்து வந்தது சவுதி அரேபிய அரசு.

இந்த நிலையில், கடந்த 2014ஆம் ஆண்டு வெளிநாடு செல்லும் தன் தந்தையை வழியனுப்ப, கிங்ஃபாட் காஸ்வே என்கிற இடத்துக்கு குடும்பத்துடன் வந்த முர்டாஜாவைக் கைது செய்தனர் பொலிஸார். கைது நடவடிக்கையின்போது சிறுவனுக்கு பிடியாணை, சம்மன் எதுவும் வழங்கப்படவில்லை. பின்னர் நான்கு ஆண்டுகள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டான் சிறுவன். விசாரணை தொடங்கும் வரை சட்டத்தரணியைத் தொடர்பு கொள்ளக்கூட அந்தச் சிறுவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

‘குற்றத்தை நிரூபிக்க ஆதாரங்கள் இல்லாததால், ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக அந்தச் சிறுவனைக் கடுமையாகச் சித்திரவதை செய்திருக்கிறார்கள், பொலிஸார்’ என்கிறது, ஐரோப்பிய மனித உரிமைக் கழகம்.


‘ஆயுதம் வைத்திருந்தது, பொலிஸ் வாகனத்தை நோக்கிச் சுட்டது, பொலிஸ் நிலையத்தின்மீது பெற்றோல் குண்டு வீசியது, கலவரத்தைத் தூண்டியது’ எனப் பல தேசத் துரோகக் குற்றங்கள் முர்டாஜா மீது சுமத்தப்பட்டுள்ளன. அதனால்தான் அவனுக்கு மரண தண்டனை வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது’ என மத்திய கிழக்கு ஆம்னெஸ்டி இன்டர்நஷனல் அமைப்பு உறுதிசெய்துள்ளது.

வெகுவிரைவில் முர்டாஜாவுக்கு 18 வயது நெருங்கவுள்ளது. முர்டாஜா மட்டுமல்ல... இவனைப்போலவே சிறுவர்களாக இருந்தபோது கைது செய்யப்பட்ட அலி அல் நிமர் தாவூத் அல்-மர்ஹூன், அப்துல்லா அல் ஜாஹிர் ஆகிய மூன்று பேரும் மரண தண்டனையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள்.

கடந்த 2011ஆம் ஆண்டில் மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க நாடுகளில் மன்னர் ஆட்சிக்கு எதிராக ‘அரபு வசந்தம்’ என்கிற பெயரில் எழுச்சிப் போராட்டங்கள் வெடித்தன. ஷியா இனமக்கள் அதிகம் வாழும் அரேபியாவின் கிழக்கு மாகாணங்களிலும் அது தீயாகப் பரவியது. இதனால், அரசக் குடும்பம் ஆடிப்போனது. அந்தப் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கியதுடன், ஒட்டுமொத்த ஷியா இனத்தையும் அழிக்கும் வகையில் பழிவாங்கத் தொடங்கியது அரேபிய அரசு. அதற்கான ஆயுதம்தான் மரண தண்டனை. அதாவது, சிரச்சேதம்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் 37 பேருக்கு ஒரே நேரத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவர்களில் 33 பேர் ஷியா முஸ்லிம்கள். கடந்த 2016ஆம் ஆண்டில், ஒரே நேரத்தில், ஷியா மதகுரு ஷேக் நிமர்-அல்-நிமர் உட்பட 47 பேர் சிரச்சேதம் செய்யப்பட்டனர். கடந்த 17 மாதங்களில் இதுவரை 249 பேர் இப்படிக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடுமைகளுக்கு எதிராக அரேபியாவை அதட்டக்கூட முன்வரவில்லை, வல்லரசுகள். காரணம் அவர்களின் வர்த்தக நலன்கள். சந்தர்ப்பவாதிகளுக்கும் சுயநலவாதிகளுக்கும் முர்டாஜாவின் கதறல் எப்படிக் கேட்கும்?



**“‘குற்றத்தை நிரூபிக்க ஆதாரங்கள் இல்லாததால், ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக அந்தச் சிறுவனைக் கடுமையாகச் சித்திரவதை செய்திருக்கிறார்கள், பொலிஸார்’ என்கிறது, ஐரோப்பிய மனித உரிமைக் கழகம். ‘ஆயுதம் வைத்திருந்தது, பொலிஸ் வாகனத்தை நோக்கிச் சுட்டது, பொலிஸ் நிலையத்தின்மீது பெற்றோல் குண்டு வீசியது, கலவரத்தைத் தூண்டியது’ எனப் பல தேசத்துரோகக் குற்றங்கள் முர்டாஜா மீது சுமத்தப்பட்டுள்ளன. அதனால்தான் அவனுக்கு மரண தண்டனை வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது”**

# அகதிகளாகும் குழந்தைகள்

## ஐ.நா. அதிர்ச்சி

பஞ்சம், அரசியல் குழப்பம், இனப் பகை, மதவாதப் போர்கள் போன்றவைதான் மக்கள் அகதிகளாக இடம்பெயர்வதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. ஆபிரிக்க நாடுகளில் வரட்சி, உணவுப் பஞ்சம், வேலைவாய்ப்பின்மை மிகப்பெரிய பிரச்சினைகளாக உள்ளன. இதன் காரணமாக பலரும் அகதிகளாக வேறு நாடுகளுக்குப் பிழைக்கச் செல்கிறார்கள். சிரியா மீதான ஏவுகணைத் தாக்குதல்களால் வாழ்விடங்களையும் உறவினர்களையும் பறிகொடுத்தவர்கள் அங்கு இருந்து உயிர் தப்பி, அகதிகளாக வெளியேறுகிறார்கள். அவர்களில் 40 சதவீதத்தினர் சிரியாவைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். கொங்கோ, துருக்கி, லைபனான், ஜோர்தான், கென்யா, எதியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்களும் அகதிகளாகப் பல்வேறு நாடுகளில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

அகதிகளின் வாழ்க்கை மிகவும் கொடுமையானது. சொந்தமாக வீடு கிடையாது. உத்தரவாதமான வேலையோ, சம்பளமோ கிடைக்காது. வாழ்ந்துவந்த சமூகத்தை இழக்கிறார்கள். குடும்ப உறவுகளை, நண்பர்களை இழக்கிறார்கள்... குழந்தைகளுக்குப் பால், பிஸ்கட், ஊட்டச்சத்து மாவுகள் சரிவரக் கிடைக்காததால் குழந்தைகளை வளர்ப்பது சவாலான ஒன்று.

ஐ.நாவின் கணக்கெடுப்புப்படி, 2018ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 7 கோடியே 8 இலட்சம் மக்கள் அகதிகளாக வாழ்கிறார்கள். இவர்களில், 2 கோடியே 59 இலட்சம் மக்கள் தங்களது பாதுகாப்புக்காக அகதிகளாக வாழிடத்தைவிட்டு வெளியேறுகிறார்கள். 4 கோடியே 13 இலட்சம் மக்கள் ஒரே நாட்டுக்குள் வலுக்கட்டாயமாக இடமாற்றம் செய்யப்படுகிறார்கள். மீதமுள்ளவர்கள், வேறு காரணங்களுக்காக அகதிகளாக வாழ்கிறார்கள். உலகம் முழுவதும் உள்ள அகதிகளில் மூன்றில் ஒரு பங்கினர் சிரியா, ஆப்கானிஸ்தான், தெற்கு சூடான், மியன்மார் மற்றும் சோமாலியா ஆகிய ஐந்தே ஐந்து நாடுகளிலிருந்து வெளியேறியவர்களாக இருக்கிறார்கள்.

இதில் மிகவும் அதிர்ச்சியான தகவல் என்னவென்றால், அகதிகளில் சரிபாதி அளவு குழந்தைகளாக இருக்கிறார்கள்.

அகதிகள், யாருமே அகதிகளாகப் பிறப்பதில்லை... மனிதநேயமில்லாத உலகத்தால் அகதிகளாக்கப்படுகிறார்கள். போர்களை நடத்தி நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதைவிட, மனிதநேயத்தை விரிவுபடுத்தினால் அகதிகள் உருவாகாமல் தடுக்கலாம்.

உலகின் இன்னொரு பகுதியில் பஞ்சம், வரட்சியால் வாடும் மக்களுக்கு, வளர்ச்சியடைந்த நாடுகள் உதவிக்கரம் நீட்டினால் அங்குள்ள மக்களும் அகதிகளாக அலைந்து திரியாமல் நிம்மதியான வாழ்க்கையை வாழலாம். ஐ.நா. சபையின் அகதிகள், அகதிகளின் பாதுகாப்பு, உணவு, உடை, தற்காலிக உறைவிடம், குழந்தைகளின் கல்வி போன்ற உதவிகளைச் செய்துவருகிறது. மனிதநேயமிக்க தனிநபர்கள், நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் முடிந்தவரை உதவிகள் செய்கிறார்கள். இந்த உலகம் அனைவருக்குமானது என்பதை நாம் அனைவரும் புரிந்துகொண்டால் அகதியற்ற சொல்லிற்கு இடமே இருக்காது.

# முழு நாட்டிற்கும் ஒரே சட்டமுறைமை சாத்தியமா?

ஐ.எஸ். தாக்குதல் சம்பவங்களுக்குப் பிறகு இலங்கையின் பாதுகாப்பு தொடர்பில் அதிக அக்கறைகள் எழுந்துள்ளன. தற்போது முழு நாட்டிற்கும் அனைத்து இன மக்களுக்கும் ஒரே சட்டம் என்ற விடயம் பேசப்பட்டு வருகிறது. இது எந்த ளவுக்கு சாத்தியப்படப் போகின்றது என்பது தெரியவில்லை.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவங்களுக்குப் பிறகு முஸ்லிம்கள் அணியும் ஆடை கள் தொடர்பில் சில கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டிருந்தன. பின்பு அரச நிறுவனங்களில் அணியக்கூடிய ஆடை கள் தொடர்பில் சுற்றுநிருபம் ஒன்று வந்தது. அதற்கு மனித உரிமை ஆணைக்குழு தனது கடுமையான ஆட்சேபனையை தெரிவித்திருந்தமை முக்கிய விடயம்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பின் போது முஸ்லிம் விவகாரத்து மற்றும் திருமண விவகாரங்களில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தால் முன்மொழியப் பட்டுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வரைபானது உலகளாவிய பயங்கர வாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் ஒன்றாக இருக்கலாம். ஆனால் ஒரு நாட்டில் வாழ்ந்து வரும் பல்லின மக்களின் சுதந்திரத்துக்கு அது எந்த வகையிலும் இடையூறாக இருக்கக் கூடாது என்ற கருத்து தற்போது பரவலாக எழுந்துள்ளது. மக்களின் சுதந்திரம் என்பது அவர்களின் அன்றாட நடவடிக்கைகளிலிருந்து அவர்கள் அணியும் ஆடை மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகள், வழிபாடுகள் என்பதாக அமைகின்றது.

ஆகவே நாடு முழுவதுக்குமான பொதுவான ஒரே சட்டம் பயங்கரவா தத்தை கட்டுப்படுத்துவதாக இருந்தா லும் நாட்டு குடிமக்களின் அடிப்படை சுதந்திரங்களை குறைப்பதற்கு வழி ஏற்படுத்தும் விதமாக அமைந்து விடக் கூடாது என்பது பொதுவான கருத்தாக உள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்என்பது அது தொடர்பான எதிர்ப்பு நடவடிக்கைகள், கைது நடவடிக்கைகள் போன்றவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இதன் மூலம் தீவிரமயமாக்குதலுடன் தொடர்புடைய ஆழமான முரண்பாடு களையோ பிரச்சினைகளையோ தீர்க்க முடியாது என மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவிக்கின்ற னர்.

## அமெரிக்காவின் அணுகு முறை வெற்றியளித்ததா?

பயங்கரவாதத்தை தடுப்பதற்கு அமெரிக்கா முன்னெடுத்த முயற்சிகள் குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது. அல் கொய்தாவின் இரட்டை கோபுரத் தாக்குதல் (செப்டெம்பர் தாக்குதல்) சம்பவத்துக்குப் பிறகு பயங்கரவாதத் துக்கு எதிராக உலகளாவிய எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா அக்கறை செலுத்தியது.

உலக பொலிஸ்காரனாக தன்னை காட்டி வந்த அமெரிக்கா இத்தாக்குதல் சம்பவத்தை தனது தன்மானத்துக்கும் கௌரவத்துக்கும் விழுந்த அடியாகவே பார்த்தது. அமெரிக்கா கொண்டிருக்கக் கூடிய இராணுவ மற்றும் புலனாய்வு வளங்கள் , உளவுத்துறை சேவைகள் என்பவற்றைக் கொண்டு 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற விடயத்தை முன்னெடுத்தது .

எனினும் செப்டெம்பர் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று 18 வருடங்களின் பின்னர் சுமார் நான்கரை டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் இரண்டரை மில்லியன் இராணுவ சக்தி இதற்காக முதலீடு செய்யப்பட்டும் அமெரிக்கா இதில் குறிப்பிடத்தக்க வெற்றி களை பெறவில்லை என்றே கூறப்படு கின்றது. ஆகவே இவ்வாறான நடவடிக்கை களை சிறிய நாடாக இருக்கும் இலங் கையில் முன்னெடுப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் பற்றி பரிசீலிக்க வேண்டி யுள்ளது.



## உலக பயங்கரவாதம்

அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல்களுக்குப்பிறகே 'இஸ்லாமிய பயங்கரவாதம்' என்ற சொல் வலுப்பெற்ற தொன்றாக உருவானது. இதற்குக் காரணம் இஸ்லாம் மதத்தை அடிப் படையாகக்கொண்டே அல்லது அம் மதத்தில் கூறப்பட்டுள்ளவற்றையே தாம் பின்பற்றுவதாக குறித்த அடிப்படைவாத குழுக்கள் கூறி வந்தன. இது உலகளா விய ரீதியில் இஸ்லாம் மதத்தைப்பற்றிய விமர்சனங்களையும் முஸ்லிம் இன மக்களின் மீதான சந்தேகங்களையும் ஏற்பட வழிவகுத்தது.

எனினும் புனித இஸ்லாம் மதமானது எவ்வகையிலும் எவ்விதத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் தீவிரவாதத்தை ஆதரிக்க வில்லை என்ற கோஷம் குறித்த இன மக்களிடையே ஒலித்து வரு கின்றது. இஸ்லாம் கூறும் கருத்துக் களை விளங்கிக் கொள்ளாத தன்மையே இவ்வளவுக்கும் காரணம் என்று கூறப்பட்டது. இவ்வாறான மத தீவிரவாதமானது அதில் இணைந்து கொள்வோரை ஏதோ ஒரு வகையில் சிந்திக்க விட முடியாத ஒரு தீவிரவாதியாக மட்டுமே மாற்றியது.

எமக்கு என்ன தேவை இலக்கு என்ன? என்ற சிந்தனை இவ்வாறான மத தீவிரவாத குழுக்களிடம் இல்லை. ஏனெனில் இவர்களுக்கு அரசியல் ரீதியான தேவைகள் கோரிக்கைகள் இல்லை என்பதனாலாகும்.

30 ஆண்டு கால யுத்தத்தில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் உலகில் பல நாடுகளால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகவே வர்ணிக்கப் பட்டது. எனினும் அவர்களுக்கு ஒரு அரசியல் கோரிக்கையும் தேவையும் இருந்த தால் அவர்களுடன் அரசாங்கமோ அல்லது சமாதான தூதுவர்களோ ஒரு பேச்சுவார்த்தை மேசைகளுக்கு செல்ல முடிந்தது.

ஆனால் மத தீவிரவாதக்குழுக்கள் அப்படியில்லை. இதன் காரணமாகவே வெவ்வேறு பிராந்தியங்கள் மொழி களை கடந்தும் இக்குழுக்கள் மதத்தால் ஒன்று பட்டு தாக்குதல்களை முன்னெடுக்கின்றன. உலக வரைபடத்தில் ஒரு குறித்த புவியியல் இடத்தில் மட்டும் இவ்வாறான குழுக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதற்கு இதுவே பிரதான காரணங் களாகும். உதாரணமாக ஈராக் மற்றும் சிரியாவில் தாக்குதல்களை மேற்கொண்ட ஐ.எஸ். அமைப்பு அங்கு தோல்வியை தழுவியவுடன் எவரும் எதிர்பாராத இலங்கையில் அது வெளிப்பட்டது.

இவ்வாறான மத தீவிரவாதத்தால் மூளைச்சலவை செய்யப்படும் தற்கொலை குண்டுதாரி ஒருவர் தான் இறந்தவுடன் சொர்க்கத்துக்கு செல்வேன் என்ற இறுதி நம்பிக்கையில்மட்டுமே வாழ்ந்து கொண்டிருப்பார். இதன் காரணமாகவே இக் குழுக்களின் தாக்குதல்கள் மிகவும் மோசமானதாகவும் தீவிரமானதாகவும் இருக் கின்றன. ஆகவே பயங்கரவாதத்தி ற்கு எதிரான நடவடிக்கைகளில் மத தீவிர வாதத்துக்கு எதிரான விடயங்கள் குறித்து மிகவும் பொறுப்பாகவும் கவன மாகவும் ஆராயவேண்டியுள்ளது.

## இறப்பை பொறுப்பேற்கும் குழுக்கள்

பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் குழுக்களின் புள்ளி விபரங்களை பார்க்கும் போது 2016 ஆம் ஆண்டு உலகில் பல பாகங்களிலும் இடம்பெற்றபயங்கரவாத தாக்குதல் களில் கொல்லப்பட்டவர்களில் 75 வீதமானோரின் மரணத்துக்கு நான்கு அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்பு களே காரணமாகவுள்ளன. அவையாவன ஐ.எஸ், போகோ ஹராம், தலிபான் மற்றும் அல்-கொய்தா என்பனவாகும்.

இஸ்லாமிய பயங்கரவாத செயற்பாடுகளின் விரிவாக்கத்துக்கு பிரதான காரணம் பயங்கரமான ஆயுதங்களும் தொழில்நுட்ப செயற்பாடுகளும் இல்லை. மாறாக மத தீவிரவாதத்தை வளர்க்கக் கூடிய ஒரு மத கட்டமைப்பை அவர்கள் கொண்டிருக்கின்றனர்.

பயங்கரவாதம் குறித்த ஆரா ய்வுகள் கூறுவது என்ன வென்றால்,பயங்கரவாதத்தில் மத பயங்கரவாதம் ஒரு ஆபத்தான முகமாகும். இது ஒரு மத சடங்கு வடிவமாக இவர்களால் முன்னெடுக்கப் பட்டு வருவதால் இது அவர்களு க்கு எந்தவிதக் குற்ற உணர்வையும் ஏற்படுத்துவதில்லை.

## ஏன் இந்த நிலைமை?

ஒரு காலத்தில் அற்புதமான கலா சாரத்தை முன்னெடுத்த இஸ்லாமிய நாகரிகம் பின்னர் ஏன் இவ்வாறு தீவிர வாதத் தோடு தொடர்புடையதாக மாறியது என்பதற்கு வரலாற்றாசிரியர்கள் கூறும் காரணம் ஆரம்ப கால போர் நிலைமைகள் அதற்குப்பின்னரான கோஷங்கள் என்பன வாகும்.

நாடுகளை கைப்பற்றிய பின்னர் மதத்தின் பெயரால் வன்முறைகளும் , போர்க்குற்றங்களும் புரியப்பட்டன. இவை குறித்த ஒரு சிலரால் ஊக்குவிக்கப்பட்டன. இவை வன்முறைகளையும் வழிபாட்டு நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தின. இவையின் நீட்சியே தற்போது இம்மதத்தை அடிப்படையாகக்கொண்டு உருவான குழுக்களாகும் என ஆய்வுகள் கூறுகின்றன.

## ஒரே சட்டம் ஏற்புடையதா?

எது எப்படியானாலும் தற்போது எமது நாட்டில் தோன்றியுள்ள பயங்கர வாத செயற்பாடுகளை எதிர்காலத்தில் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப் படும் நடவடிக்கைகள் விமர்சனங்க ளுக்கு உட்பட்டுள்ளன.'ஒரே தேசம் ஒரே குரல் 'என்ற தொனிப் பொருளில் நாடு முழுவதற்கும் ஒரே சட்டமுறைமையைக்கொண்டு வரல் , நாட்டில் தற்போது காணப்படும் இன, மத, மொழியினை பிரதிநிதித்து வப்படுத்தும் அரசியலை இல்லாதொழித்து புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக் குதல், தேசிய பாதுகாப்பை பிரதானமாகக் கொண்டு தேசிய கொள்கைகளை உருவாக்குதல், இதே விடயத்தை அடிப்படையாகக்கொண்டு சாதாரண மக்கள் மீது கவனம் செலுத்தும் பொதுவான நெறிமுறை மற்றும் நடத்தை விதி களை அறிமுகம் செய்தல் போன்ற விடயங் களுக்காக மக்கள் ஆணை யைப்பெறும் ஒரு திட்டம் தற்போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பான விடயங்களை ஊடகங் களில் பிரசுரித்து மக்களின் கைெயாப் பங்களை பெறும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. எமது நாடு பயங்கரவாத ஆபத்திலிருந்து பாதுகாக்கப்படல் அவசியம் என்றாலும் அதில் சிறுபான்மை மக்களின் சில சுதந்திரங்கள் நசுக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் அரசாங்கம் அக் கறை செலுத்துதல் அவசியம்.


எங்கிருந்தாலும் வாழ்க என்கிற நிலை இன்றைக்கு இல்லை.

"உனக்கும் எனக்கும் ஒத்துவராது; ஒத்து வரும்னு தோணல" ஸோ, பிரேக் அப் பண்ணிக்கலாம்"- இந்தத் தலைமுறை காதல் தோல்வி "பிரேக் - அப்" என்கிற ஒற்றை வார்த்தையில் ஓர் உறவை முறித்துக் கொள்கிறது அல்லது முடித்துக் கொள்கிறது. காதல் போயின் சாதல் என்று உயிரை விடுவதற்கும், அசிட், கத்தி என்று உயிரை எடுப்பதற்கும் பிரேக் அப் நல்லதுதான்.

"இன்றைக்கு இருபதுகளில் இருக்கிற பெண்கள் காதலையும் வேக வேகமாகச் சொல்கிறார்கள். பிரிவையும் வேக வேகமாக முடிவெடுக்கிறார்கள். "சம்பந்தப்பட்ட ஆணுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம் அல்லது "நாம பிரிஞ்சுடலாம்" என்று சொல்வதற்கு முன்னால் கொஞ்சம் யோசித்துப் பார்க்கலாம்" என்கிற நிதானம் குறைந்து போய்விட்டது. இதற்கு, அவர்களுடைய உணர்வுகளை உடனுக்குடன் சொல்வதற்கு உதவி செய்கிற செல்போனைத்தான் குறை சொல்ல வேண்டும். (இந்த நியாயம் பெண்களுக்கு மட்டுமல்லாமல் ஆண்களுக்கும் சேர்த்துத்தான்) பிரேக் - அப்பை உடனே சொல்வதற்கு உதவி செய்கிற அதே செல்போன்தான், இன்றைக்குப் பல காதலரிடையே பிரிவு ஏற்படுவதற்கும் காரணமாகி விட்டது.

மெசேஜ் போட்டு உடனே ரிப்ளை வரவில்லையென்றால் டென்ஷனாகி விடுகிறார்கள். "நான் மெசேஜ் போடறப்போ நீ ஒன்லைன்ல தான் இருந்திருக்கே. ஆனா, எனக்கு ரிப்ளை பண்ணலை. அப்ப யார்கூட சட் பண்ணிக்கிட்டிருந்தே..." என்பதில் ஆரம்பிக்கிறது இன்றைய பிரேக் அப்-கள்.

# — அதீத அன்பு —
## அளவுக்கு மீறிய சந்தேகம் பிரிவுக்கான காரணங்கள்



என்னதான் உறவில் இருந்தாலும் இரண்டு பேருமே இரண்டு தனித்தனி மனிதர்கள். காதலைத்தாண்டி குடும்பம், வேலை, நண்பர்கள் என்று எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன அல்லவா..?

காதலிக்கும்போது பொசிட்டிவ் பக்கம் மட்டும்தான் தெரியும். நெகட்டிவ் பக்கம் தெரிஞ்சாலும் பெரிதாகக் கண்டுகொள்ளமாட்டார்கள். தவிர, காதலிக்கும்போது அந்த நபருடன் 24 மணி நேரமும் தொடர்ந்து இருக்கப் போவதில்லை. ஆனால், கல்யாணமாகி விட்டால் அதிகபட்ச நேரம் அவரோடுதான் இருக்கப் போகிறீர்கள். அதனால், இதுவரை கவனிக்காமல் விட்ட, கண்டுகொள்ளாமல்விட்ட எல்லா நெகட்டிவ்களும் கண்களுக்குத் தெரிய ஆரம்பிக்கும். தவிர, பெண்கள் பக்கமும் சில தவறுகள் இருக்கின்றன"

"இன்றைய பெண்களிடம் ஒரு இயல்பு உருவாகியிருக்கிறது. இவர்களுக்கு எதிலும் திருப்தியில்லை. இதுவும்கூட பிரேக் - அப்களுக்கு முக்கியமான காரணம்தான். பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் கட்டாயம் தேவை. ஆனால், ஒரு சிலருக்கு அது "டோன்ட் கேர்" ஆட்டிட்யூடை கொடுத்து விடுகிறது. ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதும் உறவின் ஒரு அங்கம்தான்.

"எங்கிருந்தாலும் வாழ்க" என்கிற நிலை இன்றைக்கு இல்லை. "அவனுக்கு இன்னொரு பொண்ணோட கல்யாணம் ஆகப்போகுது. அவன் எப்படி நிம்மதியா வாழ்ந்துடறான்னு பார்க்கிறேன்" என்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும்விட இன்றைய பெண்கள், பிரேக் அப் சொல்வதற்கு இன்னும் இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஆண்களின் அதீத அன்பு மற்றும் சந்தேகம் என்கிற இரண்டும் தான் அவை. காலங்காலமாக இருக்கிற விடயங்கள். ஆனால், இன்றைக்கு அதன் முகம் வேறு மாதிரி மாறியிருக்கிறது. "நான் உன்மேலே ரொம்ப நம்பிக்கையா இருக்கேன். அதனால, நான் நினைக்கிற மாதிரித்தான் நீ செய்யணும். மத்த பசங்க கிட்டே பேசக் கூடாது..." - இதன் பெயர் அதீத அன்பு கிடையாது. சந்தேகம். அதீத அன்பு தன் துணையைப் புரிந்துகொள்ளும். அவர்களை சுதந்திரமாக விடும்.

"நான் போன் பண்ணா எடுக்கணும். காலையில மறக்காம குட் மார்னிங் மேசேஜ் அனுப்பணும். நைட் குட் நைட் சொல்ல மறந்துட்டே, அப்ப நீ என்னை மறந்துட்டே. புரொஃபைல் பிக்சரை மாத்தினதை ஏன் சொல்லலை. அந்த டிபியை எனக்குத் தெரியாம எப்ப எடுத்தே" என்பதும் அன்பு கிடையாது. உறவை மூச்சு முட்ட வைக்கிற எதிர்பார்ப்பு.

காதலியோ, மனைவியோ அவளுடைய போனை அவளுக்குத் தெரியாமல் எடுத்துப் பார்ப்பது; மெயிலை செக் செய்வதெல்லாம் சரி என்றா நினைக்கிறீர்கள்? வேலைக்குப் போகும் பெண்கள் பல இடங்களுக்கு செல்ல வேண்டி வரும். பல பேரை சந்திக்க வேண்டி வரும். இதில் சந்தேகம் வந்தால், பிரேக் - அப்பும் பின்னாலேயே தான் வரும்"

# இது நம்ம கதைகள்... 49

## நினைப்புக்களும் நிதர்சனங்களும்



எம் வாழ்வின் பல நினைப்புக்கள் - எதிர்பார்ப்புக்கள் நிதர்சனத்தில் புஸ்வாணமாகியதை நிச்சயமாக அனுபவித்திருப்போம்.

பொதுவாழ்விலும் பலரது கருத்துக்கணிப்புக்கள், மதிப்பீடுகள் நிஜத்தில் தலைகீழாகிய சந்தர்ப்பங்களும் உண்டு.

மூன்று பிரபலமானவர்கள் பற்றிய குறிப்புக்கள் கீழே தரப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் மிகச்சிறந்த மனிதர் - தலைவராக எவரை மக்கள் போற்றியிருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?. யார் உங்கள் தெரிவு?.

"X" - என்பவர் மிக மோசமான அரசியல்வாதிகள், சூனியக்காரர்கள் போன்றோருடன் நெருக்கமான தொடர்பைப் பேணியவர் . தொடர்ச்சியாக புகைபிடிப்பவர். மதுவுக்கு அடிமை. தினமும் ஐந்து தடவையாவது தண்ணியடிப்பவர். அவருக்கு இரண்டு மனைவியர்.

"Y" - என்பவர் சோம்பேறி. நண்பகல் வரை நித்திரையால் எழுந்திருக்கவே மாட்டார். வேலையிலிருந்து இரு தடவைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டவர் . கஞ்சா புகைப்பவர். விஸ்கி அடிக்காவிட்டால் அவருக்கு தூக்கமே வராது. நிலை மாறுபவர். மற்றவர்கள் பற்றி எப்போதும் புறணிபேசுபவர்.

"Z" - என்பவர் சைவ உணவு மட்டுமே புசிப்பவர். அசைவத்தை அருவருப்பாகப் பார்ப்பவர். புகைபிடிக்கும் பழக்கமோ, மது அருந்தும் பழக்கமோ அற்றவர். மனைவிக்கு என்றும் விசுவாசமாக இருந்தவர். சுறு சுறுப்பானவர். கொள்கை மாறாதவர். நாட்டுக்காக போர்க்களம் சென்று பதக்கங்கள் சூடியவர்.




இப்போது உங்கள் மதிப்பீடு என்ன? யாரை சிறந்த மனிதர் என்று நினைக்கின்றீர்கள்?.

எம்மில் பெரும்பாலானவர்களின் பதில் "Z" என்றே அமைந்திருக்கும்.

சரி இவர்கள் யார் என்று அறிய ஆவலா, இதோ அவர்கள் பற்றிய அறிமுகம்.

"X" என்பவர் வேறு யாருமல்ல. அமெரிக்காவின் 32ஆவது ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டு நல்லாட்சியின் சின்னமாக விளங்கி பிராங்கிளின் ரூஸ்வெல்ட்.

"Y" என்பவர் மிகச்சிறந்த அரசியல் சாணக்கியர். இரண்டாம் உலகப் போர் அழிவுகளிலிருந்து நேச நாட்டு மக்களைக் காத்த பெரும் தலைவர். அவர்தான் பிரித்தானியாவின் பிரதமராகவிருந்த சேர் வின்சன்ற் சேர்ச்சில்.

அப்படியானால் உங்களில் பெரும்பாலானவர்களின் சிறந்த மனிதர் என்ற தெரிவுக்குரிய அந்த " Z" யார் என்பதே உங்களின் இப்போதைய கேள்வியாகும்.

அவர் வேறு யாருமல்ல. உலகமே அஞ்சி நடுங்கிய, பல்லாயிரக்கணக்கான உயிர்களை மனிதாபிமானமற்ற வகையில் காவுகொண்ட அடோல்ப் ஹிட்லர் தான் அந்த " Z".

மனிதர்களின் குணாம்சங்களை வைத்து அவர்களின் செயற்பாடுகளை மதிப்பிடுவது கடினமானதொரு முயற்சிதான். ஏனென்றால் குணாம்சம் என்பது சிக்கலானதொரு தோற்றப்பாடு. ஆகவே குணாம்சத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு யாரையும் தீர்ப்பிடுவதையோ, மதிப்பிடுவதையோ தவிர்ப்போம். மாறாக அவர்களை அவர்கள் நிலைகளிலேயே ஏற்றுக்கொள்வோம்.

கொதிநீரில் இடப்படும்போது முட்டை கடினமாகிறது. ஆனால் அதே கொதிநீரில் உருளைக்கிழங்கு மென்மையாகிறது. அதாவது ஒவ்வொரு தனியன்களும் குறித்த நெருக்கீடுகளுக்கு அல்லது அழுத்தம்மிக்க சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும்போது வெளிப்படுத்தும் எதிர்வினையே வாழ்வின் செல் நெறியைத் தீர்மானிக்கின்றது என்பதே நிஜம். எனவே நினைப்புக்களில் வாழ்வதை விடுத்து நிதர்சனங்களை எதிர்கொள்வோம்.

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்
தெய்வம் ஏதுமில்லை....
( கவியரசு கண்ணதாசன்)

எய்.எக்ஸ்.அன்ரன்

# மழையும் குடையுமான உலகக் கோப்பை

**சென்ற வாரம் முழுக்க மழையும் குடையுமாக உலகக் கோப்பை முழுக்க ஈரக்காற்று சுழன்று அடித்தது. இளையராஜா பாட்டும் சூடான போண்டாவும் தான் மிஸ்ஸிங். ஏதோ வருணபகவான் கருணையால் அவ்வப்போது ஒன்றிரண்டு மேட்சுகள் உருப்படியாக நடந்தன. மைதானத்தின் உள்ளேயும் வெளியேயும் நடந்த சுவாரஸ்யங்களின் தொகுப்பு இங்கே...**

● ஏழாவது முறையாக உலகக் கோப்பைப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தியிருக்கிறது இந்திய 'அணி. "ஒருகாலத்துல எப்படி இருந்த டீம்" என வர்ணனை செய்த மஞ்ச்ரேக்கர் உசுப்பேற்றிவிட, "உள்ளூர் கிரிக்கெட்டை மோசமாக நடத்திக்கொண்டிருந்தால் இப்படித்தான்" என கமென்டரியில் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டை ஆவேசமாக கடிந்துகொண்டிருந்தார் வசிம் அக்ரம்.

● பாகிஸ்தான் கப்டன் சர்ஃபராஸ் அஹமது போட்டியின்போது கொட்டாவி விட்டதுதான் உச்சம். 'அவனவன் இந்தியா - பாகிஸ்தான் மேட்ச்னு உருண்டுகிட்டு இருக்கான். இவன் என்னய்யா கொட்டாவி விட்டுட்டிருக்கான்' என்று ரசிகர்கள் கலாய்க்க, 'இவ்ளோ ரணகளத்துலயும், எவ்ளோ கூலா இருக்காரு பாரு சிங்கம்' எனப் பாராட்டுகிறார்கள் இன்னொரு தரப்பு ரசிகர்கள்!

● யூடியூபில் தடதடத்துக்கொண்டிருக்கிறது. ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ். சொந்தமாக ஒரு யூடியூப் சனல் தொடங்கி, ஆறு மாதங்களாக வீடியோக்கள் பதி விட்டு வருகிறார் ஷோயப் அக்தர். தன் பழைய நினைவுகள், உலகக் கோப்பை பிரிவ்யூ, ரிப்போர்ட், அனாலசிஸ் என ரவுண்டு கட்டி அடிக்கிறார். அவ்வப்போது சில இந்திய வீரர்களும் இதில் நட்புக்காக வந்து முகம் காட்டுகிறார்கள். ஹர்பஜன் சிங், சேவாக் போன்றவர்களுடனான வீடியோ உரையாடல்களையும் அவர் பதிவிட, செம டிரெண்ட் ஆகியிருக்கிறது ஷோயப் சனல். எந்த சென்சார் கட்டும் இல்லாமல், தன் மனதில் இருப்பதையெல்லாம் மன்கிபாத் தாகப் பேசுகிறார்... இது ஒன்று போதாதா வைரல் ஆக?!


● இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் கிறிஸ் கெய்ல் ஃபீல்டிங் செய்த போது, கீழே விழுந்து (டைவ் அடித்து அல்ல... கீழே விழுந்து..!) பந்தைத் தடுக்க, ரசிகர்கள் ஸ்டாண்டிங் ஒவேஷனே கொடுத்தார்கள். அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட அவர், பௌலிங்கின்போது செய்தது தான் உச்சக்கட்டம். இவரது பந்தை அடிக்க நினைத்துத் தவற விட்டார் ஜோ ரூட். உடனே கையைக் கண்களுக்கு மேல் வைத்து எதையோ தேடுவதுபோல் செய்தார் கெய்ல். அதுமட்டுமல்லாமல், ரூட் ரன் ஓடியபோது, கிரீஸ்க்கு முன்னால் நின்று அவரைத்தடுப்பதுபோல் பாவனை செய்தார். சிரிக்காமல் இதையெல்லாம் செய்ய, மனிதன் விளையாடுகிறாரா இல்லை சீரியஸாக வம்பிழுக்கிறாரா என்று முதலில் புரியாமல்தான் இருந்தது. ஜோ ரூட் இதற்கெல்லாம் சிரித்துக்கொண்டே இருந்ததால், எல்லோரும் அதை ஜாலியாகவே எடுத்துக்கொண்டனர்.

● களத்துக்குள் ஒரு வெஸ்ட் இண்டீஸ் வீரர் கலகலவென இருக்க, கமென்டரி பொக்ஸில் கலகம் செய்துள்ளார் ஒரு வெஸ்ட் இண்டீஸ் ஜாம்பவான். நடுவர்களின் தீர்ப்புகள் மிகவும் மோசமாக இருக்கிறது என்பதை கமென்டரியில் இருக்கும்போது அப்படியே சொல்லிவிட்டார் மைக்கேல் ஹோல்டிங்.



அதற்கு ஐ.சி.சி, 'இதைப் பற்றியெல்லாம் வெளிப்படையாக வர்ணனையில் சொல்ல வேண்டாம்' என அவருக்கு மெயில் அனுப்பியிருக்கிறது. அதையெல்லாம் பெரிதாக அலட்டிக்கொள்ளாத ஹோல்டிங், "இதுவே ஃபிஃபாவாக இருந் திருந்தால், அந்த நடுவர் இந்நேரம் மூட்டை முடிச்சைக் கட்டிக்கொண்டு ஊருக்குக் கிளம்பியிருப்பார். இன்னொரு உலகக் கோப்பைப் போட்டியில் அவரால் நடுவராக நின்றிருக்கவே முடியாது. ஆனால், இங்கு தான் எதுவும் சரியாக இல்லை" என்று நெத்தியடியாக பதிலளித்திருக்கிறார். நடுவரைக் குறைசொல்லக் கூடாது என்று தானே மெயில் வந்தது. இப்போ மெயில் அனுப்பியவர்களையே போட்டுத்தள்ளிவிட் டார் ஹோல்டிங்!

● இந்த வாரத்தின் ஆச்சர்யம், போல்டாகி சிக்ஸருக்குப் பறந்த பந்து. வங்கதேசத்துக்கு எதிரான போட்டியில், இங்கிலாந்து வீரர் ஜோஃப்ரா ஆர்ச்சர் வீசிய பந்துதான் செம ஹைலைட். மணிக்கு 143 கி.மீ வேகத்தில் ஆஃப் ஸ்டம்புக்குச் சற்று வெளியே பிட்சான பந்து, ஸ்விங்காகி உள்ளே வந்து ஆஃப் ஸ்டம்பைப் பதம் பார்த்தது. அற்புதமான பந்து. அதைவிட அற்புதம் என்னவென்றால், ஸ்டம்ப்பில் பட்ட பந்து, எங்கேயும் பிட்சாகாமல் நேரே சிக்ஸ் லைனில் விழுந்ததுதான்.




ஸ்டம்ப்பில் பட்ட வேகத்தில், 54 மீற்றர் பயணம் செய்திருக்கிறது அந்தப் பந்து. கிரிக்கெட் வரலாற்றில் ஒரு ஸ்டம்ப் சிக்ஸரடித்திருப்பது இதுவே முதல் முறை. ஆர்ச்சரும் வெஸ்ட் இண்டீஸில் பிறந்தவர் என்பதை நோட் பண்ணிக்கங்க மக்கள்!

● நான்கு போட்டிகளில் 7 புள்ளிகள் பெற்று செம கெத்தாக வலம் வந்து கொண்டிருக்கிறது இந்திய அணி. ஒரே பிரச்சினை, வீரர்களின் காயம்தான். ஏற்கனவே தவான் காயத்தால் ஓய்வில் இருக்க, இப்போது புவனேஷ்வர் குமார் காயமடைந்திருக்கிறார். அவர்கள் விரைவில் குணமடையாவிட்டால் கொஞ்சம் சிக்கல் தான். ஆனாலும், ராகுல் இருக்காக, ஷமி இருக்காக எனக் கொஞ்சமும் கெத்து குறையாமல்தான் வலம் வருகிறது இந்திய அணி!

● உலகக்கிண்ணம் வரலாற்றில், குறைந்த போட்டிகளில் 50 விக்கெட்டுகளை அள்ளியவர் என்ற சாதனையை இலங்கை அணியின் வேகப்புயல் மலிங்க படைத்துள்ளார்.

● உலகக் கிண்ண தொடரில் இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான போட்டி லீட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் மலிங்க குறைந்த போட்டிகளில் 50 விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

மலிங்க இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய போது இந்தச் சாதனையைத் தன் வசப்படுத்தினார்.

25 போட்டிகளில் அவர் இச்சாதனையை எட்டியுள்ளார். 30 போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் மெக்ராத், முத்தையா முரளிதரன், வசிம் அக்ரம் ஆகிய வீரர்கள் 50 விக்கெட்டுகள் வீழ்த்தியதே சாதனையாக இருந்தது.

இச் சாதனையையே இலங்கை அணி யின் வேகப்புயல் லசித் மலிங்க முறியடித்து புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

● உலகக்கிண்ணம் போட்டியின் இடையே மைதானத்தில் வைத்து தன்னுடைய காதலியிடம் இளைஞர் காதலை கூறும் வீடியோ காட்சி ஒன்று இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான உலகக்கிண்ணம் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது.

இதில் இந்திய அணி டக்வத் லூயிஸ் விதிப்படி, 89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் இளைஞர் பாகிஸ்தான் அணி பட்டிங் செய்துகொண்டிருந்த போது, அன்விதா என்கிற இளம் பெண்ணின் காதலர், தன்னுடைய காதலை வெளிப்படுத்தியுள்ளார்.

சற்றும் எதிர்பாராத அந்த இளம் பெண் சிரித்தபடியே அவருடைய காதலை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதனை பார்த்த அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான ரசிகர்களும் அவர்களை வாழ்த்தியுள்ளனர்.

இந்த வீடியோ காட்சியானது தற்போது இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

● இந்திய அணி உலகக்கோப்பை வெல்ல வாழ்த்துகிறேன் என்று கூறிய பாகிஸ்தான் வீரரின் டுவிட் தற்போது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை தொடரில் பாகிஸ்தான் அணிக்கெதிரான ஆட்டத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றிக்கு பின் பெண் பத்திரிகையாளர் ஒருவர் இந்தியாவுக்கு வாழ்த்து தெரிவித்ததுடன், உலகக்கோப்பையையும் வெல்லவும் வாழ்த்து தெரிவித்திருந்தார்.

இதைக் கண்ட பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர் ஹசன் அலி, உங்கள் விருப்பம் நிறைவேறட்டும் அதற்கு வாழ்த்துகிறேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

இவரின் இந்த டுவிட் பாகிஸ்தான் ரசிகர்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதால், டுவிட் போட்ட சில நிமிடங்களிலே அதை அவர் நீக்கி விட்டார்.

இருப்பினும் ஒரு பாகிஸ்தான் வீரராக இருந்து கொண்டு, எப்படி இப்படி சொல்ல முடிகிறது என்று தொடர்ந்து ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

# கல்முனை பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுமா?

இலங்கைத் "திரு"நாட்டில் 25 மாவட்ட செயலகங்களும் அதன் கீழ் தற்போது வரை 331 பிரதேச செயலகங்களும் உள்ளன. (இதில் அண்மையில் அமைச்சரவையில் புதிதாக பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேச செயலக எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை).

இதில் வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் குறைந்தளவான, தலா 4 பிரதேச செயலகங்களும் குருநாகல் மாவட்டத்தில் அதிகமாக 30 பிரதேச செயலகங்களும் உள்ளன.

இதில் ஒரு மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் 14 பிரதேச செயலகங்களில் ஒன்றுதான் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம்.

கல்முனையானது, அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கரையோர நகராங்களுள் ஒன்று. 2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரலையின் போது பலமாக பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும்.

கல்முனையில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக மாநகர சபை, தளவட்டுவான், பாண்டிருப்பு, மருதமுனை, நீலாவணை, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, சவளக்கடை இந்த சவளக்கடையில் தான் 01.08.1990 ஆம் ஆண்டு ஊர் காவல் படையினரால் தமிழர்கள் மீது படுகொலைகள் நிகழ்த்தப்பட்டது. மணல் சேனை போன்ற பிரதேசங்கள் அதிக மக்கள் பரம்பலை கொண்டவை.

கல்முனையின் எல்லைகளாக கிழக்கே வங்காள விரிகுடாவையும் வடக்கே பெரிய நீலாவணையையும் தெற்கே காரைதீவையும் மேற்கே களப்பின் கடல் நீரேரியையும் குறிப்பிடலாம்.

கல்முனையில் முஸ்லிம்கள், தமிழர், சிங்களவர், பறங்கியர் என நான்கு இன மக்களும் வாழ்கின்றனர்.

இங்கு மூன்று பிரதேச செயலகங்கள் இருக்கின்றன அவையாவன,

• கல்முனை பிரதேச செயலகம் (முஸ்லிம்) (15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்).
• கல்முனை பிரதேச செயலகம் (தமிழ்) (29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்).
• சாய்ந்தமருது பிரதேச செயலகம் (17 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்) என்பனவாகும்.

இதில் கல்முனை பிரதேச செயலகம் (முஸ்லிம்) மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகம் என்பவற்றில் வாழும் மக்களில் 90 வீதமானவர்கள் முஸ்லிம் மக்களும் கல்முனை பிரதேச செயலகம் (தமிழ்) இல் வாழும் மக்களில் 90 வீதமான மக்கள் தமிழர்களாகவுமே இருக்கின்றனர்.

வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தை தன் அரசியல் பலத் தால் தோற்றுவித்தவரும் செங்கலடியைச் சேர்ந்தவருமான அப்போதைய சாணக்கியராக கருதப்பட்ட கலாநிதி க.வி.வேதநாயகம், 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசில் நிதி அமைச்சராகவும் பின்னர் 1980 இல் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் இருந்த போது உருவாக்கப்பட்டதே இந்த கல்முனை பிரதேச செயலகம் (தமிழ்).

அந்த உருவாக்க காலத்தில், அனைத்துப் பிரதேச செயலகங்களும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களாகவே காணப்பட்டன. அவற்றிடம் பணம் கொடுக்கல்- வாங்கல்கள், ஒய்வூதியம், இறப்பு-பிறப்பு பதிவு, மோட்டார் வாகனப் பதிவு, அரச காணி உரித்து போன்றன இருக்காமல் அவை மாவட்ட செயலகத்தில் மட்டுமே இருந்தன. மக்களும் அதன் தேவைகளுக்கு மாவட்ட செயலகத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது .

காலப்போக்கில், மேற்சொன்ன விடயங்களை உள் வாங்கி பிரதேச மட்டத்தில் அவற்றைக்கொடுக்கும் விதமாக, 1993 ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள், பிரதேச செயலகங்களாக தர உயர்வு பெற்றன. இந்தக் காலத்தில் தான் மாகாண சபைகளிடம் இருந்த காணி அதிகாரங்களில் முக்கியமானவை பிரதேச செயலருக்கு பாரப்படுத்தப்பட்டன. முதலில் ஓய்வூதியம், மோட்டார் வாகனப் பதிவு, அரச காணி உரித்து, பணம் கொடுக்கல்-வாங்கல்கள் என்பன பாரப்படுத்தப்பட்டுடன் காலப்போக்கில் இறப்பு-பிறப்பு பதிவு போன்றன பாரப்படுத்தப்பட்டன.

குறித்த 1993 ஆம் ஆண்டு பிரதேச செயலக தர உயர்வின் போது சாதாரணமாகவே தரமுயர வேண்டிய கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கடும் எதிர்ப்பினால் தரமுயர்த்தப்படாமல் இன்றுவரை மக்களுக்கு தேவையான விடயங்களைச் செய்ய முடியாத ஒரு பிரதேச செயலகமாகவே காணப்படுகின்றது.



சாதாரணமாகக் கிடைக்க வேண்டிய ஒரு உரிமையை கிடைக்கவிடாமல் செய்வதற்கு ஒரு இனத்தரப்பால் முடிகின்ற போது, இதுவரை அங்கு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் தரப்பும் அது சார்ந்த கட்சிகளும் கூட வாய்மூடி இருப்பது ஒரு இனத்துக்குச் செய்யும் துரோகமாகும்.

வவுனியாவில் சிங்கள மக்களுக்கு என ஒரு பிரதேச செயலகம் முழுப் பிரதேச செயலக அதிகாரத்துடன் இயங்க முடியும் எனில், அந்தச் சனத்தொகையைவிட அதிகமான மக்களைக் கொண்ட கல்முனையில், முழு அதிகாரத்துடன் தமிழ் பிரதேச செயலகம் முழு தர உயர்வுடன் இருக்க தடை ஏற்படுத்தப்படுகின்றது என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் இது.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : என் அண்ணன்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



கடவுள் ஏன் கல்லானான்? மனம்
கல்லாய்ப் போன மனிதர்களாலே
கடவுள் ஏன் கல்லானான்? மனம்
கல்லாய்ப் போன மனிதர்களாலே
கடவுள் ஏன் கல்லானான்? மனம்
கல்லாய்ப் போன மனிதர்களாலே

கொடுமையைக் கண்டவன் கண்ணையிழந்தான் - அதைக்
கோபித்துத் தடுத்தவன் சொல்லையிழந்தான்
கொடுமையைக் கண்டவன் கண்ணையிழந்தான் - அதைக்
கோபித்துத் தடுத்தவன் சொல்லையிழந்தான்
இரக்கத்தை நினைத்தவன் பொன்னையிழந்தான்
இரக்கத்தை நினைத்தவன் பொன்னையிழந்தான் - இங்கு
எல்லோர்க்கும் நல்லவன் தன்னையிழந்தான்
எல்லோர்க்கும் நல்லவன் தன்னையிழந்தான்

கடவுள் ஏன் கல்லானான்? மனம்
கல்லாய்ப் போன மனிதர்களாலே

நெஞ்சுக்குத் தேவை மனசாட்சி - அது
நீதி தேவனின் அரசாட்சி
நெஞ்சுக்குத் தேவை மனசாட்சி - அது
நீதி தேவனின் அரசாட்சி
அத்தனை உண்மைக்கும் அவன் சாட்சி
அத்தனை உண்மைக்கும் அவன் சாட்சி - மக்கள்
அரங்கத்தில் வராது அவன் சாட்சி
அரங்கத்தில் வராது அவன் சாட்சி

கடவுள் ஏன் கல்லானான்? மனம்
கல்லாய்ப் போன மனிதர்களாலே

சதிச் செயல் செய்தவன் புத்திசாலி - அதை
சகித்துக் கொண்டிருந்தவன் குற்றவாளி
சதிச் செயல் செய்தவன் புத்திசாலி - அதை
சகித்துக் கொண்டிருந்தவன் குற்றவாளி
உண்மையைச் சொல்பவன் சதிகாரன்
உண்மையைச் சொல்பவன் சதிகாரன் - இது
உலகத்தில் ஆண்டவன் அதிகாரம் - இது
உலகத்தில் ஆண்டவன் அதிகாரம்

கடவுள் ஏன் கல்லானான்? மனம்
கல்லாய்ப் போன மனிதர்களாலே
கடவுள் ஏன் கல்லானான்? மனம்
கல்லாய்ப் போன மனிதர்களாலே

# சுட்டுப் பிடிக்க உத்தரவு




தமிழுக்கு எண் 1-ஐ அழுத்தவும் படத்தை இயக்கிய ராம் பிரகாஷ் இயக்கத்தில் வெளிவந்துள்ள படம் தான் சுட்டு பிடிக்க உத்தரவு. அந்த படத்தை போலவே இதுவும் வெற்றி பெற்றதா? பார்ப்போம்.

ஒரு தனியார் வங்கியில் படத்தின் ஆரம்பத்திலேயே விக்ராந்த், சுசீந்திரன் ஒரு பணத்தை கொள்ளையடித்து விட்டு தப்பிக்கின்றனர். இவர்களை மிஷ்கின் தன் பொலிஸ் படையுடன் துரத்துகின்றார்.

அவர்கள் ஒரு குடியிருப்பு பகுதிக்குள் செல்கின்றனர். எப்படியாவது விக்ராந்த், சுசீந்திரனை பிடித்துவிட வேண்டும் என மிஷ்கின் அவர்களை நெருங்க, நெருங்க, கடைசியில் அவர்களை பிடித்தாரா? என்பதே மீதிக்கதை.

ராம்பிரகாஷ் முதல் படத்திலேயே கவனம் ஈர்த்தவர். இரண்டு, மூன்று கதைகளை ஒரே புள்ளியில் சந்திக்க வைத்து அனைவரையும் கவர்ந்தார். அதேபோல் இந்த படத்தின் முதல் காட்சியிலேயே தீப்பற்றிக் கொள்கின்றது.

அதற்கு அடுத்து காட்சிக்கு காட்சி விறுவிறுப்பு தான். அதிலும் மிஷ்கின், விக்ராந்த், சுசீந்திரனை பிடிக்க நெருங்கும் போது நமக்கே பதற்றம் வந்து விடுகின்றது.

படத்தின் சேஸிங் காட்சிகள் நன்றாக இருந்தாலும், அங்கு நடக்கும் விடயங்களை லைவ் கவரேஜ் செய்யும் மீடியாக்காரர்கள் என்று காட்டுவது இன்னும் எத்தனை படத்தில் இதையே பார்ப்பது என்பது போல் தோன்ற வைக்கின்றது.

படத்தின் மிகப்பெரிய பலம் பின்னணி இசை மற்றும் ஒளிப்பதிவும், அதுவும் வேகவேகமாக ஓடும் காட்சிகளுக்கு ஒளிப்பதிவாளரும் ஓடியது மட்டுமல்லாமல், நம்மையும் கூட்டி ஓடுகின்றார். சுப்பர்.

படத்தின் திரைக்கதை ரொம்ப விறுவிறுப்பாக செல்கின்றது.

படத்தின் டெக்னிக்கல் விடயங்கள்.

ஒரு சில காட்சிகள் நாடகத் தன்மையுடன் இருப்பது. மொத்தத்தில் லொஜிக் இல்லை என்றாலும் விக்ராந்த், சுசீந்திரன், மிஷ்கின் பரபரப்பான ஓட்டத்தில் நாமும் பங்கேற்கலாம்.






# கேம் ஓவர்

டாப்ஸி தமிழ் சினிமாவில் மரத்தை சுற்றி பாட்டு பாடும் ஹீரோயினாக அறிமுகமாகி ஹிந்தி பக்கம் சென்று பிங்க் மூலம் ஓவர் நைட்டில் உலக பேமஸ் ஆனவர். அதை தொடர்ந்து இனி தனக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் மட்டுமே நடிப்பேன் என்று கங்கணம் கட்டி கலக்கி வருகின்றார். அந்த வகையில் மாயா என்ற திகில் படத்தை கொடுத்த இயக்குநர் அஸ்வினுடன் கைக்கோர்த்து கேம் ஓவர் என்ற படத்தை கொடுத்துள்ளார் டாப்ஸி. இதிலும் முத்திரை படைத்தாரா. பார்ப்போம்.

படம் ஆரம்பத்திலேயே ஒரு பெண்ணை மர்ம கும்பல் கொலை செய்கின்றது. அதைத் தொடர்ந்து டாப்ஸி நியூ இயர் கொண்டாட்டத்தில் ஏற்பட்ட சில கசப்பான சம்பவத்தால் மன உளைச்சலில் இருக்கின்றார்.

அதைத்தொடர்ந்து அவருக்கு இருட்டை கண்டாலே பயமாக இருக்க, ஒரு கட்டத்தில் இவர் கையில் குத்தியிருக்கும் டாட்டூ அடிக்கடி வலிக்க ஆரம்பிக்கின்றது.

ஏன் அந்த டாட்டூ இவருக்கு வலிக்க ஆரம்பிக்கின்றது, இதற்கு பின் இருக்கும் மர்மங்கள் என்ன என்று டாப்ஸி தேட ஆரம்பிக்க, அதன் பின் நடக்கும் திகில் சம்பவங்களே இந்த கேம் ஓவர்.

டாப்ஸி தேர்ந்தெடுத்து நடித்தாலே அது தரமான படம் தான் என்பதை மீண்டும் நிரூபித்து விட்டார். காட்சிக்கு காட்சி அவர் பயப்படுகிறாரோ, இல்லையோ, அவர் வழியாக நமக்கு பயத்தை கடத்துகின்றார்.

திகில் படம் எடுப்பதில் செம்ம எக்ஸ்பெட் என்பதை அஸ்வின் இதிலும் நிரூபித்துள்ளார். படத்தில் நடித்திருக்கும் நடிகர், நடிகைகள் அனைவருமே சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதிலும், டாப்ஸி உதவியாளராக வரும் வினோதினி எப்போதும் போல் யதார்த்த நடிப்பில் அசத்துகிறார். படமே ஒரு வீடியோ கேம் பின்னணியில் ஆரம்பித்து, அதன் வழியாக கதை சொன்ன விதம் சுப்பர்.

கண்டிப்பாக ஒரு மிகப்பெரிய இடத்தை அஸ்வின் அடைவார். படத்தின் மிகப்பெரும் பலமாக பார்க்கப்படுவது பின்னணி இசை மற்றும் ஒளிப்பதிவு தான். ரான் ஈதன் இசை கண்டிப்பாக தமிழ் சினிமாவிற்கு நல்ல வர வேற்பு.

டாப்ஸி மற்ற நடிகர், நடிகைகள் நடிப்பு, படத்தின் டெக்னிக்கல் விடயங்கள், இசை, ஒளிப்பதிவு, எடிட்டிங் என அனைத்தும் தரம்.

அனைத்து தரப்பு அதாவது பி, சி ஆடியன்ஸ்"க்கு எளிதில் புரியுமா? என்றால் கேள்விக்குறி தான்.


மொத்தத்தில் ஒரு திகில் கலந்த வீடியோ கேமிற்குள் சென்று அதை வெற்றிகரமாக முடித்து வந்த அனுபவம் இந்த கேம் ஓவர்.








# தண்ணீர்... தண்ணீர்... தவிக்கும் தமிழகம்



தமிழ்நாட்டில் வரலாறு காணாத வரட்சி மக் களை வாட்டுகிறது. நிலத்தடி நீர் முழுவதும் இல்லாது போய்விட்டதாகவே உணரமுடிகிறது. நிலத்திலிருந்து நீரடிக்கான தூரம் கிட்டத்தட்ட 4 கிலோ மீற்றர் என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தண்ணீருக்காய் அலையும் தமிழகத்தின் அவலத்தை எதிர்காலத்தில் நாமும் அனுபவிக்க நேரும் என்பதற்காக மழைநீரைச் சேமித்து நிலத்தடி நீரைப் பாதுகாக்க விழிப்புணர்வுக்காய் இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)

சென்னையில் பாலைவனம் இல்லாத குறையைப் போக்கியிருக்கிறது இந்தக் கோடைக்காலம். ஆம். பாலைவனத்தின் முக்கிய அம்சமே அதிக வெயிலும் தண்ணீர் இல்லாத வரட்சியும்தானே! அப்படித்தான் இருக்கிறது இப்போதைய சென்னையும்.

கத்திரிக்காலம் கழிந்த பிறகும் சூரியன் தன் வெப்பத்தைத் தணித்துக் கொள்ளத் தயாராய் இல்லாத அதன் பிடிவாதம் மற்ற மாவட்டங்களைவிடச் சென்னையில் இன்னும் மூர்க்கமாக வெளிப்படுகிறது. இந்த மூர்க்கத்துடன் குடிநீர்ப் பிரச்சினையும் சேர்ந்துகொள்ள, நரகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் சென்னைவாசிகள்.

சென்னையின் பல பகுதிகளில் நிலத்தடி நீர் வற்றிவிட, மக்கள் லொறித் தண்ணீரைத்தான் நம்பியிருக்கிறார்கள். லொறி வருவதற்கு முன்னரே வரிசையில் குடங்களைப் போட்டுக் காத்திருக்கிறார்கள். தண்ணீர் கொண்டுவரும் லொறியின் சத்தம் கேட்டதும் போருக்குத்தயாராவது போன்ற ஆயத்தத்துடன் பரபரப்பாகிறார்கள். குடிநீரால் ஏற்படும் இந்தப் பரபரப்பும் பரிதவிப்பும் விளிம்புநிலை மக்களுக்கு மட்டுமே இருந்த நிலவரம் போய், தண்ணீர்ப் பிரச்சினை அடுத்த கட்டத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது. பணம் கொடுத்து லொறித் தண்ணீர் வாங்கியவர்கள் கூட அது முடியாமல் கையறு நிலைக்கு வந்துவிட்டார்கள்.

உணவகங்கள் மூடப்படும் நிலையில் இருக்கின்றன. ஓ.எம்.ஆர் பகுதியில் இருக்கும் ஐ.டி நிறுவனங்களில் கிட்டத்தட்ட 12 நிறுவனங்கள் தண்ணீர்ப் பற்றாக் குறை காரணமாகத் தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்தே வேலை செய்யப் பரிந்துரைத்திருக்கிறது என்த் தகவல் வந்திருக்கிறது. இன்னொரு புறம், தண்ணீர் போதுமான அளவு இல்லாததால் தீயணைப்புத் துறையே செயற்படாத நிலைமை.

தண்ணீர்ப் பற்றாக்குறையால் ஒரு பாடசாலையை மூடியிருக்கிறார்கள். அந்தப் பாடசாலையில் பயிலும் குழந்தையின் தந்தையிடம் பேசினேன். "மடிப்பாக்கத்துல என் பொண்ணு படிக்கிற ஸ்கூல்ல போதுமான அளவுதண்ணீரில்லன்னு எம் பொண்ணை வீட்டுக்குத் திருப்பி அனுப்பிட்டாங்க. மறுநாள் ஸ்கூல்க்குப் போய் விசாரிச்சா, 'கார்ப்பரேஷன்ல தண்ணி ஆர்டர் பண்ணாலும் ஐந்து டேங்கர்களை ஒரே நேரத்தில் வாங்கணும்னு கண்டிஷன் போடுறாங்க. அதாவது, 5 டேங்கருக்கான பணத்தைக் கட்டினா 3 டேங்கர் தண்ணீர் உடனே கிடைக்கும். மீதி 2 டேங்கருக்கான பணத்தை வாங்கினாலும் அந்தத் தண்ணியை வெளியே வித்துடுறாங்கன்னு குறைப்பட்டுக்கிறாங்க. பிள்ளைங்கள ஸ்கூல் அனுப்பவே யோசனையா இருக்கு" என்கிறார்.

ஐ.டி ஊழியர் சங்கப் பிரமுகர் வினோத் களிகை, "ஐ.டி நிறுவனங்களைப் பொறுத்தவரை தண்ணீர்ப் பிரச்சினை இன்னும் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தல. ஆனால், சில நிறுவனங்கள்ல ஒரு தளத்தில் நான்கு கழிப்பறைகள் இருந்தா அதுல ரெண்டை மூடிவெச்சுருக்காங்க. குழாயைத் திறந்தா வர்ற தண்ணீரோட அடர்த்தி பாதியா குறைக்கப்பட்டிருக்கு. தண்ணீரைக் குறைவாகப் பயன்படுத்துங்கள் என்று ரெஸ்ட் ரூமில் அங்கங்க பிரின்ட் பண்ணி ஒட்டியிருக்காங்க. அதே போல 'Work From Home' கொடுக்கப்பட்டும் வருது. ஆனால், வீட்டுக்கு வந்தாலும் அதே தண்ணீர்ப் பிரச்சினை தானே. சொல்லப்போனால் அலுவலகத்தைவிட வீட்டுல உட்கார்ந்து வேலை செய்வது இணையத்தின் வேகம், இதர சூழல்கள் என்று பல சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கு" என்கிறார் ஆதங்கத்துடன்.

சைதாப்பேட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மா. சுப்பிரமணியம், தன் தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க, திருப்போரூரில் உள்ள விவசாயக் கிணற்றிலிருந்து லொறி மூலம் குடிநீர் வரவழைத்து ஒருநாளுக்கு ஒரு பகுதி என அவரே உடனிருந்து தண்ணீர் விநியோகமும் செய்கிறார் என் கிற தகவல் கிடைக்கவே அங்கு சென்று அவரைச் சந்தித்துப் பேசினேன்.

"ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணத்தை எடுத்துச் செலவு பண்ணினாலே தன் தொகுதி மக்களுக்கு அவங்களால தண்ணீர் கொண்டு வந்துட முடியும். பணம்கூட ஒரு பெரிய விடயமே இல்லை. நம்மள நம்பி ஓட்டுபோட்ட மக்களுக்கு இந்த மாதிரி சூழல்லகூட நம்மோட அதிகாரத்தைப் பயன்படுத்த முடியலன்னா அப்புறம் எதுக்கு இந்தப் பதவி!

சென்னைப் புறநகர்ப்பகுதிகளில் உள்ள விவசாயக் கிணறுகளில் தண்ணீர் இருக்கு. அங்குள்ள மக்கள்கிட்ட அரசுத் தரப்பு சுமுகமாகப் பேசி, தண்ணீரை லொறி மூலம் சென்னைக்குக் கொண்டு வரலாம். ஆனா, செய்ய மாட்டாங்க. ஒரு பிரச்சினைன்னா மக்கள் முதல்ல கவுன்சிலரைத்தான் அணுகுவாங்க. அவங்களுக்கு வேறெந்த ஆபீஸரும் தெரியாது. ஆனா, உள்ளாட்சித் தேர்தல் குளறுபடியால் மக்களுக்கு என்ன செய்றதுன்னே தெரியலை. தண்ணி பிரச்சினை தீர்ற வரைக்கும் என்னால முடிஞ்சத என் தொகுதி மக்களுக்குச் செய்வேன்" என்றவர் பேசிவிட்டு மீண்டும் உட்கார்ந்து தண்ணீர் விடத் தொடங்கிவிட்டார்.

சென்னையில் ஒருசில உணவகங்கள் தண்ணீர்ப் பிரச்சினையால் மூடப்பட்டுவிட்டது எனச் செய்தி வர, நுங்கம்பாக்கத்தில் மூடப்பட்ட உணவக முதலாளியைச் சென்று சந்தித்தோம். துக்கம் விசாரிக்க வந்தவர்களிடம் புலம்பும் தொனியில் பேசத்தொடங்கினார் அவர்.

"கஸ்டமர்ஸ் குடிக்கிறதுக்கு கேன் வாட்டர்கூட வாங்கிக்கலாம். ஆனா, சமையல் செய்யவும் மற்ற விடயங்களுக்கும் கேன் வாட்டர் வாங்க வசதி இல்லை. போனமாசம் ஒரு லொறி தண்ணி 1,500க்கு வாங்கிட்டிருந்தோம். இப்போ 12,000 வரைக்கும் விக்குறாங்க. அந்தத் தண்ணியும் ஒரு நாளைக்குத்தான் சரியா வரும். பெரிய ஹோட்டல்களுக்கு இது கட்டுப்படி ஆகலாம்.

ஆனா, எங்களால சமாளிக்க முடியல. பசியோடு சாப்பிட வரவங்களை தண்ணி இல்லன்னு சொல்லித் திருப்பி அனுப்ப கஷ்டமா இருக்கு. அதான் ஹோட்டல மூடிட்டோம்" என்கிறார்.

சி.ஐ.டி நகரில் அபார்ட்மென்டில் வசிக்கும் ஒரு பெண், "போர் வாட்டரை ஆர்.ஓ. தண்ணியா சுத்தப்படுத்திக் குடிச்சு சமாளிச்சோம். அதுக்கு அப்புறம், நிலத்தடி நீர் வற்றிப்போய் 'போர் வாட்டரே' வராமல் போன பிறகு, மெட்ரோவுக்குப் பணம்கட்டி லொறியை அப்பார்ட்மென்ட்டுக்கு உள்ளே வரவெச்சு சமாளிச்சோம்.

இப்போது லொறித் தண்ணீரின் தேவை அதிகமா இருக்கிறதால, அவங்களையும் அவ்வளவு ஈஸியா வரவைக்க முடியல. இப்போ தண்ணிக்காக நாங்களும் குடத்தை எடுத்துகிட்டு ரோட்டுக்கு வந்து நிக்குற நிலைமையிலதான் இருக்கோம்" என்றார். இது சென்னையில் மட்டும என்றி, தமிழகம் முழுக்க நிலைமை மோசமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது.

வர்க்க பேதமின்றித் தண்ணீர் பூதம் எல்லோரையும் முழுதாக விழுங்கக் காத்திருக்கிறது. எந்த ஒரு கோணத்தில் பார்த்தாலும் தண்ணீர் குறித்து நடப்பவை எல்லாம் மிகப் பெரிய அழிவின் தொடக்கமாகத்தான் இருக்கின்றன.

இது தொடருமாயின் மிக அசாதாரணமான ஒரு சூழலை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் என்பது மட்டும் உறுதி.

தண்ணீர் தண்ணீர் என்கிற குரலுக்குப் பின்னால் அரசின் அலட்சியம், மழைநீரைச் சேகரிக்கத் தவறிய மக்களின் பொறுப்பின்மை, பொய்த்துப் போன மழை என்று ஏராளமான விடயங்கள் வரிசையில் நிற்கின்றன, தண்ணீர் லொறிக்காகக் காத்துக்கிடக்கும் குடங்களைப்போல.


ஜூனியர் விகடன்


# facebook அணுக்கழிவு ஒரு தனிப்பட்ட பயங்கர அனுபவம்

## சு.ப.உதயகுமாரன் பேஸ்புக் பதிவிலிருந்து

கடந்த 2009 ஜூன் மாதம் அணுக்கழிவு பூதத்தை நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஜேர்மனி நாட்டில் கோர்லிபன் பகுதியிலுள்ள அஸ்சே-2 உப்புச் சுரங்கத்திலுள்ள அணுக் கழிவு மையத்துக்குச் சென்றிருந் தேன். பார்வையாளர் கட்டடத்திலி ருந்த ஓர் அறையில் எனது பெயரை எழுதித் தொங்கவிட்டிருந்தார்கள். அங்கிருந்த ஓர் அதிகாரி எனக்காக வைத்திருந்த உள்ளாடைகளை, வெளியாடைகளை, பூட்ஸை அணியச் சொன்னார்கள்.

தலையில் அதிக எடைகொண்ட ஒரு ஹெல்மெட்டை மாட்டிவிட்டு, என் கழுத்தில் கதிர்வீச்சை அளக் கும் டோசிமீட்டரைத் தொங்க விட் டார்கள். என் வலது தோளில் கன மான பற்றரி ஒன்றைத் தொங்க விட்டு, தலையில் ஒரு ஹெட்லைட் டைப் பொருத்தினார்கள். இடது தோளில் ஒட்சிசன் உபகரணம் ஒன்று தொங்கவிடப்பட்டது. இவை அனைத்தும் என்மீது ஏற்றப்பட் டதும், எனது தோள்கள் லேசாக வலிக் கத் தொடங்கின. சுரங்கத்துக்குள் இருக்கும்போது, தீ விபத்தோ, நிலச்சரிவோ, வேறு விபத்துகளோ நிகழ்ந்தால்எப்படி இயங்குவது என்று அவர்கள் விளக்கும்போது, நெஞ்சு படபடக்க ஆரம்பித்தது. ஓரிருவர் மட்டுமே பயணிக்கக்கூடிய, சுழன்று சுழன்றுக் கீழிறங்கும் மிகக் குறு கலான வட்டவடிவ லிஃப்ட்டில் 590 மீற்றர் ஆழம் கொண்ட சுரங்கத்துக் குள் பயணித்தேன். அங்கே ஒரு ஜீப்பில் இரண்டு ஜேர்மன் நாட்டு அதிகாரிகள் நின்றிருந்தனர். ஜீப் பில் ஏறி அந்தச் சுரங்கத்தின் ஒரு பகுதியை நோக்கிப் பயணித் தோம்.





நூற்றுக்கணக்கான மிகக் கொடிய அணுக் கழிவுகள் அடங்கிய பீப்பாய்கள் ஒரு பெரும் உலோகப் பேழைக்குள் புதைக்கப்பட்டிருந் தன. அதிலிருந்து ஆறடி உயரத் தில் கடினமான உலோகத் தகடு ஒன்றின் மீது நாங்கள் நின்று கொண்டிருந்தோம். ஓர் உலோகத் துவாரத்தின் வழியாக இயந்திரங் களின் உதவியுடன் அந்த பீப்பாய் கள் உள்ளே இறக்கப்பட்டிருப்ப தாகச் சொன்னார்கள். அந்த பீப்பாய் களுக்குள் அணுக்கழிவுகள், புளூட் டோனியம், அணுஉலை ஊழியர்க ளின் உடைகள், உபகரணங்க ளின் பாகங்கள் போன்றவை அடி த்து உடைத்து நொறுக்கப்பட்டு திணிக்கப்பட்டிருந்தன.

மொத்தம் 625 மீற்றர் ஆழமு ள்ள சுரங்கத்தின் இன்னொரு பகுதிக்கு ஜீப்பில் சென்றோம். அங்கே கடைத்தரக் கழிவுகளைக் கொண்ட எட்டாயிரம் பீப்பாய்கள் குவிக்கப்பட்டு, அவற்றின் மீது இரண்டு அடி உயரத்துக்கு உப்பைத் தூவியிருந்தார்கள். சுரங்கத்தின் பல பகுதிகளில் நீர் சுரந்து கசிந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன்.

1967ஆம் ஆண்டிலிருந்து ஜேர்மனியின் அனைத்து அணு உலைகளிலுமிருந்து வெளிவந்த அணுக்கழிவுகளை இந்தச் சுரங் கத்துக்குள் கொட்டி வைத்திருந்தார் கள். 1978ஆம் ஆண்டுவரை ஜேர் மன் அரசு, அனைத்து அணுக் கழி வுகளையும் இங்கேதான் கொண்டு வந்து கொட்டியது. 1988ஆம் ஆண்டு சுரங்கத்துக்குள் தண்ணீர் அதிக மாகச் சுரந்து ஓடுவதைப் பார்த்த பிறகும் ஜேர்மன் அரசு மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தவே யில்லை.

2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் சுரங்கத் தண்ணீரில் சீசியம்-137 எனும் கதிர்வீச்சுக் கனிமம் அதி கம் உருவாகியிருப்பதைக் கண்டு பிடித்தார்கள். 'உப்புச் சுரங்கம் முழுவதையும் கூடுதல் தண்ணீ ரால் நிரப்பினால், அணுக்கழிவு கள் இன்னும் ஆழத்துக்குச் சென்று விடும் அந்த ஆழ்நிலக் கருவூலம் இன்னும் பாதுகாப்பானதாக மாறும்' என்றும் சிலர் விபரீதமான ஆலோ சனையைத் தெரிவித்தார்கள். 'இந்த ஆழ்நில அணுக்கழிவு மையம் ஆபத்தானதாக இருக்கி றது என்றாலும் இந்தக் கழிவுகளை வேறு எங்கே எடுத்துச்செல்வது என் பது தெரியாமல் திகைத்து நிற்கி றோம்' என்று அந்த ஜேர்மன் நாட்டு அதிகாரிகள் சொன்னார்கள்.

அந்தச் சுரங்கத்துக்குள் 650 மீற்றர் ஆழமான ஒரு பகுதியில் விசேட கருவி **(Hand Fuss Kleider monitor)** மூலம் என் உடலில் படிந்திருந்த கதிர்வீச்சை அளந்தார்கள். மீண்டும் பழைய அறைக்குப் போய் உடைகளை முற்றிலுமாகக் களைந்துவிட்டு, நீண்ட நேரம் குளித்துவிட்டு, என் சொந்த உடைகளை அணிந்து கொண்டு வரச் சொன்னார்கள்.

இந்தப் பேரதிர்ச்சியிலிருந்து விடுபட்டு வெளியேவர எனக்கு நீண்டநேரம் தேவைப்பட்டது. அறிவியல், தொழில்நுட்பம், பொருள் வளம், லஞ்ச லாவண்யமற்ற அர சியல் என அனைத்திலும் உயர்ந்து விளங்கும் ஜேர்மனி நாட்டின் நிலைமை இப்படியென்றால், நமது நாட்டின் நிலை என்னவாக இருக் கும் என்று சிந்தித்தபடி இருந் தேன்.

இந்தியாவில் உள்ள அணுக் கழிவுகளை என்ன செய்கிறார் கள், எங்கே புதைக்கிறார்கள், அவை பாதுகாப்பாக இருக்கின் றனவா? என்கிற கவலைகள் என்னை ஆட்கொண்டன.

இந்த, இந்திய அணுக்கழிவுப் பிரச்சினை என் வீட்டுமுற்றத்தில், கூடங்குளத்தில் வந்து விடியும் என்று அப்போது நான் கனவிலும் நினைக்கவில்லை. இயற்கைத் தாய் நம்மைக் காத்தருளட்டும்!

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1757

### சதீஷ்



ஒரு வீட்டில் தாத் தாவோ பாட் டியோ இறந்து போனால் நூலகம் எரிந்து போனது என அர்த்தம்

### வினோத்

சண்டே ஆனா இருக்கிறவன் ஆனோட சுத்துவான்... இல்லாதவன் அல்கஹோலுடன் சுத்துவான்



### சந்தியா

சிரித்து மகிழ்ந்தால் உங்கள் மனதில் உள்ள பிரச்சினைகள் தீருகின்றதோ இல் லையோ உடம்பில் உள்ள பிரச்சினைகள் கண்டிப்பாக தீரும்



### லாவண்யன்

விடாமுயற்சியும் பயிற்சியும் இருந்துவிட்டால் எந்தத் துன்பத்தையும் கடந்து சாதிக்க முடியும்



### யாதவன்

ஏன்டா இப்படி மட்டமா மார்க் எடுத்திருக்க நான் கையெழுத்தெல்லாம் போட்டுத் தரமுடியாது. அடி பிச்சுடுவன் நல்லா பாருங்க உங்க பழைய மார்க் ஷீட்டுதான் இது. பாட்டி கொடுத்தாங்க



### விவேக்

சில நேரங்களில் வாழ்க்கை ஏமாற்றுவது போல் இருக்கும்... அது ஏமாற்றமல்ல... உங்கள் தன்னம்பிக்கைக்கான பரீட்சை அவ்வளவே!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 186

# பாம்புக்கடிக்கான முதலுதவி

இலங்கையில் 93 வகையான பாம்புகள் உள்ளன. இவற்றில் கடல் பாம்புகளும் அடங்கும். எனினும் ஐந்துவகை பாம்புகள் மட்டுமே அதிக நச்சுத்தன்மையுள்ளனவாகவும் இறப்பை ஏற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளன. இலங்கையில் உள்ள அதிக நச்சுப்பாம்புகள்.

01. நாகபாம்பு (Cobra)
02. எண்ணை விரியன் (Common Krait, Ceylon Krait)
03. கண்ணாடி விரியன் (Russell's Viper)
04. சுருட்டை பாம்பு (Saw Scaled Viper)

பெரும்பாலான இறப்புக்கள் நாகபாம்பு, எண்ணை விரியன், கண்ணாடி விரியன் என்பவற்றினாலேயே ஏற்படுகின்றன.

சிலவேளைகளில் நச்சுள்ள பாம்புகளால் கடி ஏற்பட்ட போதிலும் அவை இறப்பை ஏற்படுத்தக்கூடிய அளவு நச்சை உட்செலுத்துவதில்லை.





### நோய் அறிகுறிகள்

அதிக நச்சுப்பாம்புகள் கடித்து குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்ட நச்சுத்தன்மையை உட்செலுத்திய பின் பாம்பின் வகையைப் பொறுத்து நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றன. பொதுவான அறிகுறிகளாக கடித்து சில மணி நேரத்திலேயே வாந்தி, வயிற்று நோய், தலைச்சுற்று என்பவையும் கடித்த இடத்தில் வீக்கம், நோ, இரத்தப்போக்கு என்பவையும் ஏற்படலாம்.

பாம்புகளுடைய நச்சுகளின் வகையை பொறுத்து, பாம்புகளின் நச்சுகள் தாக்குவனவாகவும் சில குருதிச் சுற்றோட்டத் தொகுதியை தாக்குவனவாகவும் சில இரு தொகுதிகளையும் தாக்கக்கூடியனவாகவும் உள்ளன.

பிரதானமாக நாகபாம்பு, எண்ணை விரியன் என்பவற்றில் நரம்புத்தொகுதியைத் தாக்கக்கூடிய நச்சுக்கள் உருவாகுகின்றன. நரம்புத் தொகுதி பாதிக்கப்படுவதன் விளைவாக கண்கள் மூடுபடுத்ல், விழுங்க முடியாமல் போதல், சோம்பல், மூச்சு எடுப்பதில் கஷ்டம், பார்வை இரண்டாக தெரிதல் என்பன ஏற்படுகின்றன.

கண்ணாடிவிரியன், சுருட்டைபாம்பு என்பவற்றின் நஞ்சு பிரதானமாக குருதிச் சுற்றோட்டத் தொகுதியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குருதியில் விளைவுகள் ஏற்படுத்துவதன் மூலம் குருதி உறையாத தன்மை, இரத்தப்பெருக்கு, இரத்த வாந்தி, சிறுநீருடன் இரத்தம் போதல், மூளைக்குள் இரத்தப்பெருக்கு ஏற்படுதல் என்பவை ஏற்படலாம். குறிப்பாக கண்ணாடிவிரியன் இரண்டு தொகுதிகளையும் தாக்கக்கூடிய நஞ்சை கொண்டுள்ளன. கடற்பாம்புகளின் நஞ்சுக்கள் தசைநார்களைத் தாக்குவதனால் சிறுநீரகத்தை பாதிக்கின்றன.

### முதலுதவி

பாம்புக்கடி ஏற்பட்டவரை முதலில் பயப்படாதபடி அறிவுரைகூறி, கடிபட்ட இடத்தை இயலுமானவரை அசைக்காது வைக்கவும். காலில் கடிபட்டிருந்தால் கால் தொங்கக்கூடிய வகையில் இருத்தி வைக்கவும். கையில் கடி ஏற்பட்டால் கையை உயர்த்தி பிடிக்காது தொங்கவிட்டபடி வைக்கவும். காயத்தை தூய தண்ணீரால் மெதுவாகக் கழுவவும். இறுக்கி உரஞ்சி கழுவுவதைத் தவிர்க்கவும். இவ்வாறு செய்வதன் மூலம் நச்சுத்தன்மை குருதிச் சுற்றோட்டத்துக்கு பரவுவதை குறைக்கலாம்.

கடிபட்ட இடத்துக்கு மேலாக கட்டுவதையோ காயத்தில் வாய்வைத்து உறிஞ்சுவதையோ, பிளேட் போன்றவற்றால் காயத்தை வெட்டுவதையோ தவிர்க்கவும். இந்தச் செயன்முறைகளால் பாதகமான விளைவுகளே நோயாளிக்கு ஏற்படுகிறது. கடித்த இடங்களில் மோதிரம், மெட்டி என்பவை அணிந்திருந்தால் அவற்றை உடனடியாக கழற்றிவிடவும். ஏனெனில் வீக்கம் ஏற்பட்டால் இவற்றால் தீய விளைவுகளே ஏற்படும்.

கடிபட்டவருக்கு எந்த உணவுப் பொருளையோ மாத்திரைகளையோ கொடுக்காது இயலுமானவரை விரைவாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு சென்று வைத்தியரின் உதவியை நாடவும். இயலுமானால் கடித்த பாம்பை கொண்டு வர முடிந்தால் நோயாளியுடன் கொண்டு வரவும். இறந்த பாம்பைக் கொண்டு வருவதன் மூலம் நச்சுப்பாம்பை இனங்காண உதவியாக இருக்கும்.

இதற்காக எந்தவிதத்திலும் நோயாளியை வைத்தியசாலையில் சேர்ப்பதைத் தாமதிக்கவேண்டாம்.

வைத்தியசாலையில் மருத்துவர்களால் நச்சுத்தன்மை உட்செலுத்தப்பட்டுள்ளது என்பதை நோயாளியின் நோய் அறிகுறிகள் கொண்டும் பரிசோதனைகள் மூலமும் உறுதிப்படுத்திய பின் நச்சுத்தன்மையை குறைக்கக்கூடிய ஊசி மருந்து ஏற்றப்படுகிறது. (Anti Snake venom) இந்த மருத்துவ முறையால் பெருமளவிலான இறப்புக்கள் குறைக்கப்படுகின்றன.

### தடுப்பு முறைகள்

இயலுமானவரை பாம்புக்கடியிலிருந்து தப்பி இருப்பதற்கு வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் விசேடமாக பற்றைகள், கற்கும்பிகள் என்பனவற்றை அகற்ற வேண்டும்.

இயலுமானவரை இரவில் வெளியே நடமாடுவதைத் தவிர்க்கவும். வெளியில் நடமாடும்போது செருப்பு அல்லது சப்பாத்து அணிந்து சரியான வெளிச்சம் உள்ள இடங்களில் மட்டும் இரவில் நடமாடவும்.

பாம்புக்கடி ஏற்பட்டால் இயலுமான வரை விரைவாக வைத்தியசாலைக்கு செல்வதன் மூலம் பெருமளவிலான இறப்புகளைத் தவிர்த்து கொள்ள முடியும்.

**Dr.பி.யோண்சன்**

## காடை முட்டைகள் கோழி முட்டைகளிலும் பார்க்க சிறந்தவையா?

**• அண்மைக்காலமாக காடை முட்டை பாவனை அதிகரித்து வருகிறது. காடைமுட்டைகள் கோழி முட்டைகளிலும் பார்க்க சிறந்தனவா?**

எல்லாமுட்டைகளுமே பாதுகாப்பான ஒரு நிறை உணவு என்பது பொதுவாக அறியப்பட்டிருக்கிறது. ஆனால் ஒப்பீட்டு ரீதியிலே காடை முட்டைகள் கோழி முட்டைகளிலும் பார்க்க சிறந்தவை.



காடை முட்டைகள் கோதிலே அழகான கறுத்தப் புள்ளிகளைக் கொண்ட சிறிய முட்டைகளாகும். இதன் நிறையையும் பருமனையும் கருத்தில் எடுத்தால் 4 காடைமுட்டைகள் ஒருகோழி முட்டைக்கு சமமாக அமையும்.

காடை முட்டைகளிலே கோழி முட்டைகளிலும் பார்க்க புரதச்செறிவு அதிகம். (கோழி முட்டைகளில் 11%, காடை முட்டைகளில் 13%) அத்துடன் காடை முட்டைகள் 4மடங்கு அதிகமான B1 விற்றமினையும் 15 மடங்கு அதிக மான $B_2$ விட்டமினையும் கொண்டுள்ளது.

அத்துடன் காடை முட்டைகள் விசேடமாக ஒவ்வாமையை அல்லது அலேஜியை எதிர்க்கும் வல்லமையை கொண்டிருக்கின்றன என ஆய்வுகள் உறுதி செய்கின்றன. அத்துடன் காடை முட்டைகளில் "அன்ரி ஒக்சிடென்ற்" எனப்படும். பதார்த்தங்கள் அதிகளவில் காணப்படுவதால் உடலின் பல பகுதிகளையும் பாதுகாக்கும் தன்மை இதற்கு அதிகமாக காணப்படுகிறது. மொத்தத்தில் காடை முட்டைகள் கோழிமுட்டைகளிலும் பார்க்க சிறந்தவை.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**